விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 09 ஞாயிற்றுக்கிழமை (22.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-4654)

# தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு

## அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் டெனி வலியுறுத்து



(வாஷிங்டன்)

யுத்தம் நிறைவடைந்து 7 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி தொலைவில் இருப்பதாகவே உணரமுடிகின்றது என தெரிவித்த அமெரிக்க காங்கிரஸ் சபை சிரேஷ்ட உறுப்பினர் டெனி டேவிஸ், தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வினை விரைந்து காணவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்த பாதிப்பு ஐ.நா மதிப்பீடு!

(கொழும்பு)

இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான கணக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இந்த மதிப்பீடு மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் பாதிப்பை எதிர்கொண்டுள்ள வடக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் முன்னெடுக்

15 ஆம் பக்கம் பார்க்க....

- நிலச்சரிவில் சிக்கியோரை தேடும்பணி சிரமத்தில்
- வெள்ளத்தில் மிதக்கும் வெல்லம்பிட்டி
- பலியானோர் எண்ணிக்கை 71ஆக உயர்வு

செய்திகள் உள்ளே...

## கேகாலை பகுதியில் மீண்டும் மண்சரிவு

(கேகாலை)

கேகாலை, அரநாயக்க பகுதியில் நேற்று மாலை மீண்டும் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அரநாயக்க-ஹபரகலக்ந்த பகுதியிலேயே இந்த மண்சரிவு ஏற்பட்

15 ஆம் பக்கம் பார்க்க....

# எக்னெலிகொட, தாஜுடீன் கொலைகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தொடர்பு

## பிரதமரின் கருத்தால் சபையில் வாக்குவாதம்

(கொழும்பு)

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் தொடர்பிலான விபரங்களை வெளியிடுவதாயின் ஊடகவியலாளர் எக்னலிகொட மற்றும் பிரபல ரக்பி வீரர் வஸீம் தாஜுடீன் ஆகியோரின் கொலைகளுடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயர்களையும் வெளியிட நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில எழுப்பிய கேள்வியொன்று பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் இக்கருத்தை தொடர்ந்து உதய கம்மன்பில ஆளும் கட்சியினருடன் பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் விபரங்களை வெளியிடுமாறு ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், அது தொடர்பில் கம்மன்பில நேற்றுமுன்தினம் சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு பதிலளித்த சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க, நிதிக் குற்றப் பிரிவில் பல விசாரணைகள்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மாத இறுதிவரை மழை பெய்யக் கூடும்

(கொழும்பு)

இந்த மாதம் இறுதிவரை நாட்டில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லலித் சந்திரபால இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனிடம் வரைபு கையளிப்பு



15 ஆம் பக்கம் பார்க்க....

# சிறுகாணிகளை கொள்வனவு செய்ய மக்கள் பிரதிநிதிகள் உதவ வேண்டும்

## காணிகளற்ற முகாம் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வரும் சொந்தக்காணி அற்ற மக்கள் மீண்டும் தமது நிலங்களில் குடியேறுவதற்காக காணிகளை கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால் உதவி செய்யுமாறு மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி வடக்கில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் அங்கிருந்து இடம்பெயர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக நலன்புரி முகாம்களில் வாழும் பல குடும்பங்களுக்கு அப்பகுதிகளில் சொந்தமான காணிகள் இல்லை. இதன் காரணமாக அவர்கள் மீள்குடியேறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

16 ஆம் பக்கம் பார்க்க....

## 70 மரண தண்டனை கைதிகளுக்கு மன்னிப்பு

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 70 கைதிகளுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இவர்கள் ஆயுள் தண்டனைக் கைதிகளாக சிறைவாசம் அனுபவிக்கவுள்ளனர்.

புனித வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மேற்படி கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளதுடன், மேலும் 608 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (செ-12)

## ஜி-7 உச்சி மாநாட்டு அழைப்பு

## ஜப்பான் பிரதமரின் பிரதிநிதி ஜனாதிபதி மைத்திரியுடன் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபேயின் சிறப்புப் பிரதிநிதி ஹிரோரோ இசுமி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, ஜப்பானில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி - 7 தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டமைக்கு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஹிரோரோ இசுமி நன்றி தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதியுடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்துவதற்க

16 ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பு மேலதிக நீதவான் திலின சேவையிலிருந்து இடைநிறுத்தம்!

(கொழும்பு)

கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகே இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

உரிய அனுமதிப் பத்திரமின்றி யானைக் குட்டி ஒன்றை வைத்திரு



15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இலங்கைப் பெண்!



(கொழும்பு)

உலகின் மிக உயரமான எவரஸ்ட் சிகரத்தை அடைந்து ஜெயர்தி குரு உதும்பால என்ற இலங்கைப்பெண் நேற்று காலை சாதனை படைத்துள்ளார்.

வரலாற்றிலேயே முதன் முதலாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இலங்கைப் பெண் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

இந்த சாதனையைப் படைப்பதற்காக சுமார் ஒருமாதத்திற்கு முன்பே குறித்த பெண்ணும் இவருடன் சேர்ந்து யோஹான் பீரிஸ் என்ற பெணணும் இந்தியா பயணித்துள்ளார்கள்.

இவ்வாறு சென்ற பெண்களில் ஜெயர்தி குரு உதும்பால என்ற பெண்ணே முதலாவதாக சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவரெஸ்ட் சிகரமானது உலகிலேயே மிகவும் உயரமான மலை என்பதுடன், கடல மட்டத்தில் இருந்து 29 ஆயிரத்து 29 அடி உயரமானது என பதும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

# பூமி, செவ்வாய், சூரியன் ஒரே நேர்கோட்டில் இன்று

(கொழும்பு)

பூமி, செவ்வாய், சூரியன் ஆகிய கிரகங்கள் வானில் ஒரே நேர்கோட்டில் வரும் அரிய நிகழ்வு இன்று காலை நிகழவுள்ளது.

தற்போது பூமியில் இருந்து 4.8 கோடி மைல் தொலைவிலுள்ள செவ்வாய் கிரகம், இந்த நிகழ்வின் போது சுமார் 4.6 கோடி மைல் தொலைவுக்கு பூமியை அண்மித்துவரும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, பூமி, செவ்வாய், சூரியன் ஆகிய கிரகங்கள் ஒரே நேர்கோட்டில் வருகின்றன.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு இதேபோன்று நிகழும்போது செவ்வாய் கிரகம் சுமார் 3.6 கோடி மைல் தொலைவுவரை பூமியை அண்மித்து வரும் என்று அமெரிக்காவின் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரியன், பூமிக்கு இடையே புதன் கிரகம் கடந்து செல்லும் அரிய நிகழ்வு, கடந்த வாரம் நிகழ்ந்தது. அப்போது, சூரியனில் ஒரு சிறிய கரும்புள்ளி போன்று புதன் கிரகம் தென்பட்டது. இது, ஒரு நூற்றாண்டுக்கு 13 முதல் 14 முறை மட்டுமே நிகழும். எனினும் மேற்படி அபூர்வ நிகழ்வை வெற்றுக் கண்ணினால் அவதானிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மின்சாரம் செயலிழப்பு குறித்து தொலைபேசி வழி முறைப்பாடு

(கொழும்பு)

மின்சாரம் செயலிழப்பு மற்றும் மின் அனர்த்தங்களின போது முறைப்பாடு செய்வதற்கு புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறினார்.

அதன்படி, ஏற்கெனவே இருந்த 1987 மற்றும் 1901 என்ற எண்களுக்கு மேலதிகமாக 011 - 30 30 303 என்ற இலக்கத்திற்கும் மின்சாரம் செயலிழப்பு மற்றும் மின் அனர்த்தங்கள் பற்றி தகவல் வழங்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.

தெஹியோவிட்ட, ருவன்வெல்ல பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக சென்றிருந்த போது அவர் இவ்வாறு கூறினார். (செ-12)

புத்திரனின் பெருமை கண்டு
பூரிக்கின்றாள் நல்லை மங்கையர்க்கரசி

இம்மாதம் சிங்கப்பூரில் நடைபெற்ற
ASIAN MASTERS ATHLETIC MEET இல்
ஈட்டி எறிதலில் வெற்றியீட்டிய முதல் ஈழத்தமிழன்




சண்.தயாளன்
(உதவிக்கல்விப் பணிப்பாளர்
யாழ் கல்வி வலயம்)

அவர்கள் எங்கள் வித்தியாலய
பழைய மாணவன்
என்பதில் பெருமை கொண்டு
வாழ்த்துகின்றோம்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
2016.05.22
(C-4665)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
(C-4662)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.
இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567
(C-4656)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

ஆச்சி ஹொட் பூட்
Aache Hot Food



- மிக மிகச் சுத்தம்.
- செயற்கைச் சுவையூட்டிகள் அற்றது.
- யாழ் பாரம்பரியம் கொண்டது.
- மிக மிகப் பிரமாண்டமான கைதடி சமையலறை (Factory)
- அனுபவம் மிக்க சமையலாளர்கள்

கிளைகள்.
மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி, திருநெல்வேலி,
கைதடி கிழக்கு கைதடி (Factory)
T.P: 021 222 5001
021 205 7455
(C-4651)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக் கிருத்திய அழைப்பும்
நன்றி நவிலலும்

மலர்வு
1950 . 07 . 12



உதிர்வு
2016 . 04 . 24

அமரர்
புவனேஸ்வரன் கமலாதேவி

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி கடந்த 2016.04.24-ம் நாள் ஞாயிற்றுகிழமை இறைவன் அடிசேர்ந்த எமது குடும்ப குலவிளக்கு எமது தெய்வத்தாய் புவனேஸ்வரன் கமலாதேவி "தேவி" அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 2016.05.22 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 2016.05.24-ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

மேலும் அவரது பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலம், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகளைப் பிரசுரித்தவர்கள், இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள் மற்றும் பலவழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம்

வட்டக்கச்சி
077 618 1856
021 390 0054
குடும்பத்தவர்கள்
(C-4661)

# அனர்த்த பாதிப்புக்களை முகாமை செய்ய ஜனாதிபதி செயலணி உருவாக்கம்

**(கொழும்பு)**

**சீர்ற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை தொடர்ந்தும் முகாமை செய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் தலைமையில் ஏற்புடைய அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் இவ் ஜனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டுள்ளது.**

இச்செயலணியின் முதலாவது கூட்டம் நாளை பி.ப. 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

சேதமடைந்த வீடுகளை மீள்நிர்மாணித்தல், சேதமடைந்த கைத்தொழில்கள் மற்றும் வாழ்வாதார மார்க்கங்களை மீளக் கட்டியெழுப்புதல், அவதானமான இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்படும் சுகாதாரப் பிரச்சினைகளை முகாமை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகியன இச் செயலணியினை தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத்தேவையான அனைத்து வசதிகளையும் குறைவின்றி வழங்குமாறும் எந்தவொருஅவசர நிலைமையினையும் எதிர்கொள்ளக் கூடியவாறு ஏற்புடைய பிரிவுகளை ஆயத்தமாக வைத்திருக்குமாறும் ஜனாதிபதி உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.(இ)

## பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார் பிரதமர்



களனி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களைப் பார்வையிடுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சேதவத்தை பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான வானிலை காரணமாக களனி ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்து சுமார் ஒரு இலட்சம் வரையான பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கு தேவையான அனைத்து நிவாரணங்களையும் வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## 100 இலட்சம் ரூபா நிதி ஜனாதிபதியிடம்

மின் தொலைத்தொடர்புகள் அமைச்சு மற்றும் இலங்கை டெலிக்கொம் குழுவினர் ஒன்றிணைந்து அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டோருக்கு ரூபா 100 இலட்சம் நிதியை நேற்று ஜனாதிபதியின் விசேட நிதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இதற்காக ஸ்ரீலங்கா டெலிக்கொம், மொபிடெல் மற்றும் டெலிக்கொம் குழுமத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவன ஊழியர்களினதும் ஒரு நாள் சம்பளம் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் பிரதியமைச்சர் தரங்க பஸ்நாயக்க ஆகியோரின் மாதச் சம்பளமும் இதில் அடங்குவதாக டெலிக்கொம் குழுமத்தின்தலைவர்பீஜீ குமாரசிங்க தெரிவித்தார். (இ-5)

## அனர்த்தத்தால் 71 பேர் பலி 134 பேரைக் காணவில்லை!

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்




நாட்டின் 22 மாவட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள காலநிலை மாற்றத்தினால் நேற்று மாலை வரையில் 71 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 134 பேர் காணாமற போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இவ் அசாதாரண காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு என்பவற்றில் இதுவரை 29 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒரு இலட்சத்துக்கு 3 ஆயிரத்து 576 குடும்பங்கள் தேசிய ரீதியில் இந்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டுள்ளன. 4 இலட்சத்து 25 ஆயிரத்து 606 தனிநபர்கள் இக்குடும்பங்களிலுள்ளதாக முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது.

இவர்களில், 64 ஆயிரத்து 379 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 19 ஆயிரத்து 195 பேர் தங்களது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் இருக்கின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் 597 பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தங்களில் 354 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 326 வீடுகள் சிறிய சேதங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (இ-10)

## நிவாரணப் பொருட்களுடன் ஜப்பான், இந்திய விமானங்கள்

(கொழும்பு)

இலங்கையில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களுடனான விமானங்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

அந்த வகையில், ஜப்பானிலிருந்து நிவாரணப் பொருட்களுடனான விமானமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது. அதில் கம்பளிப் போர்வைகள், நீர் சுத்திகரிப்பு இரசாயனங்கள், நீர்த் தாங்கி, ஜெனரேட்டர் ஆகியன கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், நிவாரணப் பொருட்களுடனான இந்திய விமானமொன்று நேற்று சனிக்கிழமை அதிகாலை வந்தடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அதேவேளை, இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவதற்காக இரண்டு போர்க் கப்பல்களில் இந்தியா நேற்று முன்தினமும் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அனர்த்தத்தில் வீட்டினை இழந்தவர்களுக்கு வீடு

### பாராளுமன்றில் சஜித் அறிவிப்பு



காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தில் வீடுகளை இழந்துள்ள சகலருக்கும் தராதரம் பாராமல் அந்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்வதற்கான உதவித் தொகை வழங்கப்படும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மண்சரிவிற்குட்பட்டவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டு வீடொன்றைக் கட்டிக் கொள்வதற்கான முழுமையான சக்தியை வழங்குவோம். யாருக்கும் வேறுபாடு காட்டப்படமாட்டாது. யாருடைய உதவியையும் துண்டித்து விடவும் மாட்டோம் எனவும் விசேட அறிவித்தலொன்றை விடுத்து பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனமும் உதவி வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க உள்ளதாக யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களுக்கு தேவையான உலர் உணவுப்பொருட்கள், மருந்து வகைகள் என்பனவற்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவர் குழுக்கள் உளளிட்ட நிவாரணப் பணியாளர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

சுத்தமான குடிநீரை விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது. (இ-10)

## ஜனாதிபதி செயலகத்தின் வெசாக் நிகழ்வு இரத்து



ஜனாதிபதி செயலகத்திலுள்ள ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தியாகம் செய்துள்ளனர்.

அத்துடன், வெசாக் தினத்தில் வழமையாக ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, ஒதுக்கப்பட்டிருந்த நிதியை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு அன்பளிப்புச் செய்யவுள்ளதாகவும் ஜனாதப்பதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ-10)

## லொறி- மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் பலி

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பிற்கு சீமெந்து ஏற்றுச்சென்ற லொறியுடன் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைஇரவு 11 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் உயிரிழந்தவர்கள், தோப்பூர் - பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த வீ.கிருபாகரன் (வயது 24) மற்றும் தெஹிவத்த கங்குவேலி -புளியடிச் சோலையைச் சேர்ந்த கே.கிருஷ்ணகுமார் (வயது 22) என்ற இளைஞர்கள் எனப பொலிஸார்தெரிவித்தனர்.

சடலங்கள், சேருநுவர வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியின் சாரதியான விநாயகபுரத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவித்த சேருநுவரப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# கோல்டன் ஸ்பைக் தொடர் உசைன் போல்ட் முதலிடம்



உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட், செக்குடியரசில் நடைபெற்ற 'கோல்டன் ஸ்பைக்' தொடரில் 100 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டியில் பந்தய தூரத்தை 9.98 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார்.

உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரர் என்று அழைக்கப்படுபவர் உசைன் போல்ட். கடந்த சில வருடமாக 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர ஓட்ட பந்தயத்தில் முடிசூடா மன்னாக விளங்கி வருகிறார். விரைவில் பிரேசில் நாட்டில் நடைபெற இருக்கும் 'ரியோ ஒலிம்பிக்-2016' போட்டிக்கு பிறகு ஓய்வு பெறப்போவதாக கூறியுள்ளார்.


ஒலிம்பிக் போட்டிக்கு முன்னோட்டமாக கருதப்படும் செக்குடியரசு 'கோல்டன் ஸ்பைக்' தொடரில் 29 வயதான உசைன் போல்ட் கலந்து கொண்டார். இதில் 100 மீட்டர் தூரத்தை 9.98 வினாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார்.

9.98 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்தது குறித்து உசைன போல்ட் கூறுகையில், "எனக்கு இந்த ஓட்டத்தில் முழு திருப்தியில்லை. 9.8 வினாடிகளில் பந்தய தூரத்தை கடக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், முதல் பாதி தூரத்திற்கான ஓட்டத்தில் தோல்வியடைந்து விட்டேன். முதல் 40 மட்டர் எனக்கு மந்தமாக அமைநது விட்டது.

என்னுடைய செயல்திறன் சிறப்பாக இருந்தது. முதல் தொடக்கம் எனக்கு சரியாக அமையவில்லை என்று நினைக்கிறேன். என்னால் 40 மீட்டர் வரை முழு திறமையையும் கொண்டு வரமுடியவில்லை. ஆகவே, முடிவில் கூடுதலாக முயற்சி செய்ய வேண்டியதாகி விட்டது. இந்த விடயத்தில் நான் முன்னேற்றம் அடைந்து விட்டால், அது சிறப்பாக இருக்கும்" என்றார்.

ரியோ ஒலிம்பிக்கில் உசைன் போல்ட் 100 மீ, 200 மீ மற்றும் 4X100 மீ. ஓட்டம் ஆகிய மூன்று பிரிவுகளில் கலந்து கொள்ள இருக்கிறார். மூன்றிலும் தங்கம் வென்றால் தொடர்ச்சியாக மூன்று ஒலிம்பிக்கில் மூன்று பிரிவுகளிலும் தங்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெறுவார். (க)

# ஐ.பி.எல் போட்டியில் 100 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அஸ்வின் சாதனை



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின். இவர் ஐ.பி.எல். போட்டியில் 100 விக்கெட்டுக்கள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல். சீசன் 9-ல் புனே அணி புதிதாக இடம்பெற்றிருந்தது. இந்த அணி தனது கடைசி லீக் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை சந்தித்தது.

இந்த போட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் அபாரமாக பந்து வீசி 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இதன்மூலம் அவர் ஐ.பி.எல். போட்டிகளில் 100 விக்கெட்டுக்கள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். ஐ.பி.எல். தொடர் தொடங்கிய 2008-ம ஆண்டு அஸ்வின் இடம் பெறவில்லை.

அதன்பின் 2009-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரை சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார்.

2009-ம் ஆண்டு 2 போட்டிகளில் 2 விக்கெட்டும், 2010-ம் ஆண்டு 12 போட்டிகளில் 13 விக்கெட்டும், 11-ல் 16 போட்டிகளில் 20 விக்கெட்டும், 2012-ல் 19 போட்டிகளில் 14 விக்கெட்டும், 2013-ல் 18 போட்டிகளில் 15 விக்கெட்டும், 2014-ல் 16 போட்டிகளில் 16 விக்கெட்டும், 2015-ல் 14 போட்டிகளில் 10 விக்கெட்டும், தற்போது இந்த வருடம் 14 போட்டிகளில் 10 விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார். (க)

# சொகுசு பங்களா வாங்கினார் இந்தியாவின் ரோஹித் சர்மா




இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க வீரரான ரோஹித் சர்மா ரூ.5 கோடியில் பிரமாண்ட சொகுசு பங்களா ஒன்றை வாங்கியுள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மும்பையில் பிரபாதேவி என்ற இடத்தில் அமைந்துள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் ரூ.30 கோடிக்கு ரோஹித் சர்மா வீடு வாங்கினார்.

இந்நிலையில் மகாராஷ்ரா மாநிலத்தில் அமைந்துள்ள மலை நகரமான கண்டலா நகரில் ரூ.8 கோடி மதிப்பிலான சொகுசு பங்களாவை ரூ.5 கோடிக்கு வாங்கி இருக்கிறார்.

இந்த பங்களா 10,000 சதுர அடியில் 5 அறைகளை கொண்டதாக சகல வசதியுடன் கட்டப்பட்டு வருகிறது. இதனை பொலிவுட் நடிகர் சுனில் ஷெட்டி தான் கட்டி வருகிறார். (க)

# மத்யூஸ் வெளியிட்ட உலக கிரிக்கெட் லெவின் அணி



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் உலக கிரிக்கெட் லெவின் அணியை வெளியிட்டுள்ளார். இந்த அணியில் இடம்பெற் றுள்ள வீரர்கள் விபரம்,

சச்சின் டெண்டுல்கர், குமார் சங்கக்கார, பிரையன் லாரா, அரவிந்த டி சில்வா (அணித் தலைவர்), மஹேல ஜெயவர்த்தன, ஜாக்குஸ் கலிஸ், ஷேன் வோர்ன், முத்தையா முரளிதரன், வசிம் அக்ரம், சமிந்த வாஸ், கிளென் மெக்ரா. (க)


# உபெர் கோப்பை பட்மின்டன் இந்தியாவுக்கு வெண்கலம்

சீனாவில் நடைபெற்ற உபெர் கோப்பை பட்மின்டன் தொடரின் அரை இறுதியில் போராடி தோற்ற இந்திய மகளிர் அணி, வெண்கலப் பதக்கத்துடன் திருப்தியடைந்தது.

அரை இறுதியில் இந்திய அணி நடப்பு சம்பியன் சீனாவுடன் நேற்று முன்தினம் மோதியது.

முதல் ஒற்றையர் ஆட்டத்தில் சீனாவின் லீ ஸுவருயி 21-15, 12-21, 21-17 என்ற செட் கணக்கில் சாய்னா நெஹ்வாலை வீழ்த்தினார்.

விறுவிறுப்பான இப்போட்டி ஒரு மணி, 4 நிமிடம் நீடித்தது. மற்றொரு ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் பி.வி.சிந்து 13-21, 21-23 என்ற நேர் செட்களில் ஷிக்சியான் வாங்கிடம் தோற்றார்.



இதைத் தொடர்ந்து நடந்த மகளிர் இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஜுவாலா கட்டா - சிக்கி ரெட்டி ஜோடியும் தோற்று வெளியேற, 3-0 என்ற கணக்கில் அபாரமாக வென்ற சீன அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இந்திய அணி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது. கடந்த முறை டெல்லியில் நடந்த உபெர் கோப்பை தொடரிலும் இந்தியா வெண்கலம் வென்றிருந்தது. (க)


# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் இன்று பாரிஸில் ஆரம்பம்




கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தொடங்குகிறது. களிமண் தரையில் விளையாடுவதில் வல்லவரான ரபெல் நடால் 10-வது முறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வெல்வாரா என்று டென்னிஸ் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்

உலகின் 4-ம் நிலை வீரரான அவர் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை 9 முறை வென்று சாதனை படைத்து உள்ளார். கடந்த பிரெஞ்சு ஓபனில் நடால் கால் இறுதியில் தோற்றார். இந்த முறையும் அவருக்கு சவால் காத்திருக்கிறது. ஜோகோவிச் (செர்பியா), ஆன்டிமுர்ரே (இங்கிலாந்து) நடால் சம்பியன் வாவ்ரிங்கா (சுவிடசர்லாந்து) ஆகியோர் அவருக்கு கடும் சவாலாக இருப்பார்கள்.

17 முறை கிராண்ட்சிலாம் பட்டம வென்றவரும், 3-ம் நிலை வீரருமான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) இந்தப் போட்டியில் இருந்து விலகியுள்ளார். பெண்கள் பிரிவில் நடப்பு சம்பியனும், முதல் நிலை வீராங்கனையுமான செரினா வில்லியம்ஸ (அமெரிக்கா) 22-வது பட்டத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளார். (க)



இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் கடுகன்னாவ இலுக்வத்தை ரம்மலக்கப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சிவன் பவுண்டேசன் நிறுவனம் ஊடாக நிதியுதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி ரம்மலக்க தைக்கா பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிவன்பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொண்டு நிதியுதவியினை வழங்கி வைத்தார்.

# அரசியல் வாதியின் கண்ணுக்கு புலப்படாத மல்வானை பிரதேசம்

நாட்டில் கடந்த சில நாட்களாக நீடித்து வந்த சீரற்ற காலநிலை காரணமாக மல்வானை பிரதேசம் முற்றாக நீரில் மூழ்கியதோடு மக்கள் பெரும் சிரமங்க்ளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மல்வானை பிரதேசத்தின் ரக்ஷபான, காந்திவெள, உலஹிட்டிவல, விதானகொட, பங்காளஹேன உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கடந்த சில தினங்களாக பெய்து வந்த மழையுடன் கூடிய காலநிலை வழமைக்கு திரும்பிய போதிலும், குறித்த பகுதிகளில் சுமார் 12 அடி வரை நீர்மட்டம் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார். 2500க்கு அதிகமான குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள போதும் இதுவரை அரசியல்வாதிகள் எவரும் வந்து தம்மை பார்வையிடவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (இ-10)

# ஜெயலலிதாவுக்கு சிறிதரன் வாழ்த்து

ஈழத்தமிழர்களின் தொப்புக் கொடித் தேசமாக விளங்குகின்ற தமிழகத்தினுடைய முதல்வராக தாங்கள் வெற்றி பெற்று அரியணை அமர்வதும், தங்கள் ஆட்சி மலர்வதும் ஈழத்தமிழர்களாகிய எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கிறது.

தங்கள் கட்சி பெற்ற வெற்றிக்கும் முதல்வராக தாங்கள் பதவி ஏற்கின்றமைக்கும் எங்களுடைய வாஞ்சைமிகு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தாங்கள் பதவி ஏற்கின்ற வேளை ஈழத்தமிழர்களின் வரலாற்றில் முக்கியமான அத்தியாய காலமாக பார்க்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டின் பிற்பாடு எங்களிடையே ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூன்யவெளி தமிழகத்தின் பொறுப்பை அதன் செயலாற்றுகையை ஈழத்தமிழர் மீது அதிகரித்திருக்கின்றது.

தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக மட்டுமன்றி சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் அடிமைகளாக முழுமையாக வாழும் நிலைக்கு அண்மித்து விட்டோம்.

வாழ்வுரிமை என்பது கேள்விக்குரியதாக எம்முன்னே எழுந்து நிற்கின்றது. அரச இன ஒடுக்குமுறையாளர்களின் நவவாத சிந்தனைகளும் நவவாத செயல்களுமே இங்கு அரங்கேறுகின்றன.

ஒடுக்கு முறையாளர்களின் அதிகாரமே தமிழர்களின் எல்லா உரிமைகள் மீதும் கோலோச்சுகின்றது.

இந்நிலையில் தங்களால் சட்டசபையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றிய போதும் ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு பக்கச்சார்பற்ற சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்று கோரிய போதும் ஈழத்தவர்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடிய தன்னாட்சி அவர்களுக்கே உரிய சுயநிர்ணய அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என முன்மொழிந்தபோதும் நாங்கள் அழுத விழி துடைத்து ஆனந்தக் களிப்புற்றோம்.

நம்பிக்கையின் சக்தியாக எங்கள் இதயங்கள் உங்களை நோக்குகிறது. முன்னாள் முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் ஈழத்தமிழர்கள் மீது கொண்டிருந்த அனுதாபம் தன்னாட்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் எடுத்த இதயபூர்வமான முயற்சிகளை நிறைவு செய்து ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் துயர் தீர்ப்பது தங்களின் பெரும் கடமையும் பேறும் ஆகும்.

எனவே தங்களுடைய புதிய ஆட்சிக் காலம் தமிழகத்தில் வாழுகின்ற மக்கள் நல்லாட்சியும் உங்கள் இரத்த உறவுகளான ஈழத்தமிழர்கள் தன்னாட்சி பெறவும் பயன்தர வேண்டும் என வாழ்த்துகிறோம் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் சிறிதரன் எம்.பி.மேலும் தெரிவித்துள்ளார். (இ-281)


## முதலாம் ஆண்டு நினைவு நாளில்...



மண்ணில் 15.06.1983 | விண்ணில் 03.06.2015

அமரர் கணேஸ் சர்வேஸ்வரன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.)

கனவுகள் பலபல நினைவினில் நிற்க
காலத்தின் கணக்கிலே
கவிதையாய் ஆனாய்
அம்மா அப்பா உறவினர் அயலார்
ஆதரவின்றித் தவித்திட நீயும்
சர்வேஸ்வரனின் மலரடி சேர்ந்து
கடந்தது காலம் ஓராண்டாக!
என்றும் உன் நினைவினில் வாழும்

குடும்பத்தினர்
நிரந்தர முகவரி: அளவெட்டி, யாழ்ப்பாணம்.
வசிப்பிட முகவரி: புதிய சிவிக் சென்ரர், இராமநாதபுரம் மத்தி, கிளிநொச்சி.
(சி-4658)



## அந்தியேட்டி ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பிதழ்

உறவோடு 30 09 1932



இறையோடு 18 04 2016

அமரர் திருமதி நாகேஸ்வரி மயில்வாகனம்
(நாகேஸ் அக்கா)

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் செய்தும், அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தும், மலர்வளையங்கள், மாலைகள் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி அழைப்பின் மூலம் இரங்கல் செய்திகள் கூறிய அன்பு உள்ளங்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நினைவு மலர் வெளியீட்டிலும் கலந்து அதன்பின் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு: - தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்காதவர்கள் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று 22.05.2016 அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து மதிய போசனத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.
077 773 4206,
021 226 3806,
077 967 8785

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

(சி-4653)



## மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நாகராஜா



கீரிமலையை பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடாவில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை நாகராஜா கடந்த 17.05.2016 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுவர்ணாம்பாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், வேலாயுதம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் கோணேஸ்வரன் (முன்னாள் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், பணிப்பாளர் - கொழும்பு சமூக சேவைத் திணைக்களம், தொழிற்பயிற்சிப் பிரிவு, அளவெட்டி கோணேஸ் மற்ஸ் அக்கடமி நிறுவுனர், ஜே.பி), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), நகுலாம்பிகாதேவி (கொழும்பு), நகுலேஸ்வரன் (கனடா, முன்னாள் இ.போ.ச காப்பாளர் கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியதர்சினி (கொழும்பு), விமலச்சந்திரன் (கொழும்பு), நவறஞ்சினி (பிரான்ஸ்), நளினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுராங்கன், சுருதிகா, கேசிகா, நவீஸ், மொனீஸன் ஆகியோரின் பேரனும், செல்வராஜா (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர், தெல்லிப்பளை ப.நோ.கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் நாகேஸ்வரி வீதியில் அமைந்துள்ள டாக்டர் சிவபாலனின் இல்லத்தில் (22.05.2016) இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வும்.

நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி,
பருத்திக்கலட்டி, சுன்னாகம்.
தொ.பே: 021 224 2237,
077 636 5841, 077 942 6408,
077 696 9517, 077 717 4561

தகவல் :
குடும்பத்தினர்

(4739)

## வடக்கு மாகாணத்தில் விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

நாட்டில் அண்மையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள மழை வீழ்ச்சியால் பெரும்பாலான இடங்களில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகள் பெருகி அபாயகரமாக டெங்குக்காய்ச்சல் தொற்றக்கூடிய நிலை காணப்படுகின்றது. இவ் அபாயகரமான டெங்கு நோய்த்தொற்றை உடனடியாக தடுப்பதற்காக வடமாகாண சுகாதார அமைச்சரின் பணிப்பிற்கமைய வட மாகாணத்திற்கான விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் ஒன்றை நாளை 23.05. 2016 திங்கட்கிழமை தொடக்கம் 29. 05.2016 ஞாயிற்றுக்கிழமை வரை பிரகடனப்படுகின்றது.

இவ் வாரகாலப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் தலைமை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு குழுக்களாக வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், கட்டட நிர்மாண வேலைகள் நடைபெறுமிடங்கள், தொழிற்சாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்களை பரிசோதனை செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா மலர் வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைர விழா மலர் வெளியீட்டு நிகழ்வு இம்மாதம் 28 ,29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நல்லூர் நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.15 மணிக்குநல்லூர்கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பிராந்திய பணிமனையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்றடைந்து அங்கு நடைபெறவுள்ள ஆலய தரிசனத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீன கலாமண்டபத்தை வந்தடைந்து காலை 9.30 மணிக்கு நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,யாழ். இந்தியத்துணைத்தூதர் ஏ.நடராஜன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். இதன் போது ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அமெரிக்க ஹவாய் ஆதீன நிறுவன ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தலைமையுரையினை மாமன்றத்தலைவர் க.நீலகண்டன் வழங்கவுள்ளார்.

வைரவிழா மலர் அறிமுக உரையினை கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார். ஆன்மீகப் பேருரையினை இந்திய பேரூர் ஆதீன சீர்வளர் சீர்மருதாசல அடிகளார் வழங்கவுள்ளார்.

29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள விசேட பூஜையைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி கொழும்பு-2-சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை 95 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற தலைமை அலுவலக மண்டபத்தை வந்தடையும். அதனைத் தொடர்ந்து மலர் வெளியீடு இடம்பெறும்.

நிகழ்வின் விருந்தினர்களாக மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன், மேல் மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இந்திய உயர்ஸ்தானிகர் அர்ரம்பக்ஷி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை அமெரிக்க ஹவாய் ஆதீன நிறுவுனர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கவுள்ளார். (இ-5)

## நாளை நடத்த திட்டமிடப்பட்டிருந்த போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலயம் நாளை திங்கட்கிழமை நடத்தவிருந்த ஆங்கில தினப்போட்டி, தகவல் தொழில்நுட்ப போட்டிகள் என்பன பிற்போடப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடக்கவிருந்த ஆங்கிலதினப்போட்டிமீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நடக்கவிருந்த தகவல் தொழில்நுட்ப போட்டிகளே இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## ஜனநாயக இடைவெளி குறித்து கலந்துரையாடல்

**இலங்கையில் ஜனநாயக இடைவெளியும் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்களும் என்ற தொனிப்பொருளில் இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு DMI கல்வி நிலையத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது. (இ**


## விளக்கமறியல்

இளைஞனின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்த தொலைக்காட்சி இணைப்பு வழங்குநர் ஒருவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்த அல்வாய் கிழக்கைச் சேர்ந்த இராசநாயகம் அஜந்தன் என்ற இளைஞனின் உயிரிழப்புக்கு தொலைக்காட்சி இணைப்பில் ஏற்பட்ட மின்கசிவே காரணம் என அறியப்பட்டு அதன் வழங்குநரான காந்தியூர் அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த நபரை அன்றே நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)




# வெசாக்கை முன்னிட்டு யாழில் 8 கைதிகள் நேற்று விடுதலை



வெசாக் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் நேற்று சனிக்கிழமை மதியம் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கமைய தண்டப் பணம் செலுத்த முடியாது உள்ள கைதிகள் மற்றும் சிறு குற்றம் புரிந்த கைதிகள் என ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை நிர்வாகத்தினர் குறிப்பிட்டனர்.

வெசாக் போயா தினத்தினை முன்னிட்டு 540 சிறைக்கைதிகள் நாடளாவிய ரீதியாக விடுதலை செய்யப்பட்டுள்ளதாக நீதியமைச்சு ஏற்கனவே அறிவித்தது.

இது தொடர்பாக அவ்வமைச்சு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4-9)

## குருபூசை

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் திருஞான சம்பந்தரின் குரு பூசை நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (இ-5)

## கும்பாபிஷேகம்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (இ-7)

## காணாமற்போன குடும்பப்பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

காலையில் காணாமற்போன குடும்பப்பெண் ஒருவர் இரவு கிணறு ஒன்றிலிருந்து சடலாக மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்வர் பூந்தோட்டம் இமையாணன் கிழக்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான இராசையா நாகமணி (வயது-48) என்பவராவார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (20.05.2016) காலையில் காணாமற்போன இவரை உறவினர்கள் தேடிய போது நெல்லியடிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரணவாய் மேற்கு புறாப் பொறிக்கியில் உள்ள கிணறு ஒன்றில் சடலமாக காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு இரவு சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சடலத்தை ஒப்ப டைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையி னைச் சமர்ப்பிக்குமாறு பொலி ஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை நெல்லியடிப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## வீதி விளக்குகள் ஒளிராமையால் பொதுமக்களுக்கு பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அராலிப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் நீண்டகாலமாக ஒளிராமையினால் பொதுமக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அராலிப் பகுதியில் அராலி மத்தி பிரதானவீதி ,அல்லியப்புலம் வீதி ஆகிய பகுதிகளில்பொருத்தப்பட்ட வீதிவிளககுகளே இவ்வாறு நீண்டகாலமாக பழுதடைந்து காணப்படுகின்றன.

இதுதொடர்பில் பிரதேச சபையினர் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை எனவும் இவ் வீதி விளக்குகள் ஒளிராமல் இருக்கின்ற அதேவேளை இவ்வீதி விளக்குகளுக்கு மாதாந்த கட்டணத்தினை பிரதேச சபையினர் மின்சார சபையினருக்கு செலுத்தி வருகின்றனர். இதனால் மக்களின் வரிப்பணம் வீண் செலவு செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கையினை மேற்கொண்டு வீதி விளக்குகளை திருத்தம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-91)

## யாழ்.விழிப்புலனற்றோர் சங்க 40ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் 40 ஆவது நிறைவு விழா நாளை திங்கட்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11.15 மணியளவில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ.எஸ் அற்புதராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் , கைதடி நவிண்டில் பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் ம.கோபால கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-7)

## பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணியளவில் காவடி ஆரம்பமாகி மாலை 6 மணிவரையும் இடம்பெறும்.

இரவு 8.15 மணியளவில் மடைப்பண்டம் எடுத்து அதனைத் தொடர்ந்து பொங்கல் உற்சவம் இடம்பெறும்.(இ-5)



புத்தூர் கிழக்கு பகுதியில் கடந்த வியாழக்கிழமை வீசிய கடும் காற்றினால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டது.

# அச்சுறுத்தல் விடுத்த சாரதிக்கு வாகனம் செலுத்தத்தடை விதிப்பு

பிரதேச செயலக ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தை மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் இடைமறித்து அச்சுறுத்திய இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துச் சாரதிக்கு அவ் வீதியில் வாகனம் செலுத்துவதற்கு தடை விதித்து மூதூர் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.

மூவாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் செலுத்தத் தவறின், ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் மேலும் அத் தீர்ப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. தீர்ப்பினை உறுதிப்படுத்தும் முகமாக சாலை முகாமையாளரிடம் இருந்து அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி, பிரயாணிகள் தங்கள் விருப்புக்கேற்ப தங்களது போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

எவரும் குறித்த பேருந்தில் பயணிக்கும்படி நிர்ப்பந்திக்க முடியாது எனவும் இதன் போது சாரதிக்கு நீதவான் ஆலோசனை வழங்கியுள்ளார். இலங்கை போக்குவரத்து சபையின் ஏறாவூர் சாலைக்குச் சொந்தமான பேருந்து சாரதிக்கே குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெருகல் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு, மண்டூர், பழுகாமம், போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த ஊழியர்களை ஏற்றி செல்வதற்காக தனியார் விசேட பேருந்து சேவை ஒன்று பிரதேச செயலாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டு தினமும் களுவாஞ்சிக்குடியில் இருந்து வெருகல் பிரதேச செயலகம் வரை இடம்பெற்று வந்தது.

இவ்வாறாக ஊழியர்கள் பயணித்த பேருந்தை இடைமறித்த குறித்த சாரதி அதில் பயணித்த ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

சாரதியின் நடவடிக்கை தொடர்பாக சேருநுவர பொலிஸில் பிரதேச செயலாளர் முறைப்பாடொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் பிரகாரம் சாரதிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையில் குறித்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ)


**காணி விற்பனை**

A9 வீதி நுணாவில் சந்தியில் பருத்தித்துறைக்கு செல்லும் வீதியில் மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதியின் ஆரம்பத்தில் **24 பரப்பு காணி பிரித்து** கொடுக்கப்படும். வீடு கட்ட,தென்னை மா, பிலா வைப்பதற்கு உகந்த இடம்.

4737

**T.P 077 8730 129**





குருதேவர்
அறநெறிப் பாடசாலை
திறப்பு விழா

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவ யோகசுவாமிகளின் சீடரும் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் கருணையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள தேவிபுரகிராம சிறார்களின் நலன் கருதி குருதேவர் அறநெறிப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான புதிய கட்டிடம்

**27.05.2016 அன்று காலை 9.00 மணிக்கு**

ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார்

**திருமதி. சிவலோசனி கனகரத்தினம்**

அவர்களால் திறந்து வைக்கப்படும்

**சிறப்பு விருந்தினர்கள்**

உயர்திரு கந்தையா நீலகண்டன் தம்பதிகள்
(தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் -தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை)

~ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ~

குருதேவர்
அறநெறிப் பாடசாலை

தேவிபுரம்
புதுக்குடியிருப்பு

(4731)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:9 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/5841 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 41செவ் 8 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5881 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 58செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5845 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 34<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5882 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 42செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:LLB, CIMA, ACMA, CGMA, MSc/கணக்காளர் அயர்லாந்து<br>தொ.இ: B/5846 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/5883 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 50செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/5848 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 50செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோனம்<br>தொ.இ: G/5884 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- [illegible]221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

22.05.2016
(வைகாசி 09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
பிரதமை பின்னிரவு 4.25 மணிவரை
அனுசம் முன்னிரவு 9.41 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி, சுக் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி, கார்த்திகை | | |
| | | | குரு<br>ராகு |
| | சனி, செவ்<br>சந் | | |

**மீனம்** மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், சுப விரயங்கள் கூடும், தேக நலனில் கவனம் தேவை.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய முயற்சிகள் கைகூடும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** தாய்வழி உறவினர்களால் எதிப்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு.

**துலாம்** பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடக்கும், பயணங்களால் பலனுண்டு.

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2016~14.06.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## விரயங்களிலிருந்து விடுபட விழிப்புணர்ச்சி தேவை!



**உதவி செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் தனுசு ராசி நேயர்களே!**

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, உங்கள் ராசிநாதன் குருபகவான் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். அது மட்டுமல்லாமல் விரயச் சனியின் ஆதிக்கமும் நடைபெறுகின்றது. விரய ஸ்தானாதிபதி செவ்வாயோடு சனி இணைந்து 12ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், கூடுதல் விரயங்களைச் சந்திக்கும் மாதமாக இந்த மாதம் அமையப் போகின்றது.

ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும். சாதாரணமாக முடிய வேண்டிய காரியங்கள் கூட தாமதமாகிக் கொண்டே போகும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் விருப்பமின்றி வந்து சேரலாம். இருப்பினும் மே 18 ஆம் திகதி குரு வக்ர நிவர்த்தியாகின்றார். எனவே அதன்பிறகு நல்ல காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறத் தொடங்கும். தொல்லைகள் படிப்படியாகக் குறையும்.

பலம் பெற்ற குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் வளம்பெற்று வாழ புதிய வழிபிறக்கும். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி, ஆற்றல் மிக்க உங்களுக்கு ஆதாயம் தரும் தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். வீடு வாங்க பல மாதங்களாக திட்டங்கள் தீட்டியும் அது நடைபெறவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது சந்தோஷ சாம்ராஜ்யத்திற்குள் நுழையப் போகிறீர்கள். எதிர்பார்த்ததை விட நல்ல வீடாக அமையும். எதிர்பார்த்தபடி விலையும் இருக்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

விருந்தினர் வருகையால் வியப்படைவீர்கள். தொழில் செய்பவர்கள் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதிய பங்குதாரர்களைச் சேர்க்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவார்கள். 9 இற்கு அதிபதி 6இல் இருப்பதால் தந்தை வழிப் பிரச்சினை தலை தூக்கும். எந்த முடிவும் எடுக்க முடியவில்லையே என்று குழப்பம் அடைவீர்கள். வந்த பணம் செலவான பின்னரே அடுத்த தொகை கைக்கு வந்து சேரும். விரய காலத்தில் வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும், மின்சாதனப் பொருட்களையும் வாங்கும் முயற்சியில் ஈடுபடலாம். வைகாசி விசாகத்தன்று கந்தப் பெருமானை கைகூப்பி வணங்கினால், சிந்தித்த காரியங்கள் நடைபெறும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மே 20ஆம் திகதி ரிஷபத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலத்தில் உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம். மேலதிகாரிகளின் அனுசரிப்பு குறைவால் நீண்ட தூரப் பயணங்கள் கூட ஒரு சிலருக்கு ஏற்படும். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாம். பெண்களால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளித்து விடுவீர்கள். சகோதரர்களால் விரும்பிய பலன் கிடைக்க அவர்களை அனுசரித்துச் செல்வதே நல்லது.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3ஆம் திகதி ரிஷப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். உங்கள் ராசிக்கு




7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன 6இல் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் உருவாகலாம். உத்தியோத்தில் உடன் பணிபுரிபவர்கள் உங்கள் முனனேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவார்கள். உங்களுக்கு கிடைக்க வேணடிய நல்ல வாய்ப்பு, உங்களுடன் பணிபுரிபவர்களுக்கு கிடைக்கலாம்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13ஆம் திகதி, சுக்ரன் மிதுன ராசிக்கு செல்கின்றார். அதே நாளில் ரிஷப ராசியில் புதனும் வலிமை இழக்கின்றார். எனவே, இந்த காலத்தில் எதிரிகளால் தொல்லை அதிகரிக்கும். பழைய வழக்குகளுக்கு மத்தியில் புதிய வழக்குகளும் தோன்றக்கூடும். நட்பு பகையாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, விருப்ப ஓய்வு பெறும் சிந்தனை மேலோங்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

, வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும் மாதமாகும். மாதத்தின் முதல் வாரம் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இரண்டாம் வாரத்தில் எடுத்த காரியம் எளிதில் முடிவடையும். எதிர்பார்த்த படியே வருமானம் வந்து சேரும். மாதத்தின் பிற்பகுதியில் இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வழிபிறக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் வந்திணைவார்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க, விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. குழந்தைகளால் உதிரி வருமானம் உண்டு. ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் போக்கும்.

## பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய நேரம்!



**எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யும் மகர ராசி நேயர்களே!**

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். அஷ்டமத்தில் ராகுவும், குருவும் இணைந்திருக்கின்றார்கள். எனவே ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய மாதம் இது. அலுவலகப் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்தாலும் கூட, நீங்கள் தீட்டும் திட்டங்கள் வெற்றி பெறுவதில் தாமதங்கள் உண்டாகும்.

பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய மாதம் இது. பொல்லாதவர்கள், நீங்கள் செய்யும் புது முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கலாம். இல்லத்தில் உள்ளவர்களே எதிரிகளாகச் செயற்படலாம். லாபம் வரும் என்று நம்பி செய்த காரியமொன்றில், ஆதாயம் மிகமிகக் குறைவாகவே இருக்கும். இத்தனை தடைகளுக்கும் என்ன காரணம்? என்ற சிந்தனை மேலோங்கும்.

திடீர் முன்னேற்றத்தைக் கண்டு திருஷ்டி ஏற்பட்டுவிட்டதால் பாதிப்பா?, இல்லை திசாபுத்திக் கோளாறுகளால் பாதிப்பு ஏற்பட்டதா? என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றும். பொதுவாக அஷ்ட மத்தில் குரு அடியெடுத்து வைத்திருக்கும் பொழுது உறவு பகையாகலாம். உடனிருப்பவர்கள் விலகிச் செல்ல நேரிடலாம். கடன் சுமை கூடிக்கொண்டே செல்கின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

எல்லாவற்றிற்கும் வடிகாலாக அமையவும், இனிய பலன்களை எதிர்கொள்ளவும், சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபாடு செய்யுங்கள். அதோடு திருநள்ளாறு மற்றும் திருக்கொள்ளிக்காடு, பெரிச்சிக் கோவில் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று, யோகம் தரும் நாளில் வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. மாதத் தொடக்கத்திலேயே குரு வக்ர நிவர்த்தியாகி அஷ்டமத்து குருவின் ஆதிக்க பலம் அதிகரிக்கப் போகின்றது. எனவே தென்முகக் கடவுள் வழிபாடு உங்களுக்கு நன்மையை வழங்கும். வைகாசி விசாகத்தன்று அருகில் இருக்கும் முருகப்பெருமான் சன்னிதிக்குச் சென்று ஜோடி தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள். வாடும் உள்ளம் மாறும். வளர்ச்சி கூடும். தேடும் செல்வமும் கிடைக்கும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மே 20ஆம் திகதி பஞ்சம ஸ்தானத்தில் பலம் பெறுகின்றார். எனவே பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களில் லாபம் கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். குழந்தைகளின் கல்வி முயற்சிக்காகவும், கடல் தாண்டிச் செல்லும் முயற்சிக்காகவும் நீங்கள் செய்த ஏற்பாடுகள் பலன் தரும். பழகிய மனிதர் ஒருவர்




உங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்லப் போகின்றார். 6,9இற்கு அதிபதியான புதன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து சேரும். நேர்முகத் தேர்வு எழுதி இதுவரை வெற்றி கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு, இப்பொழுது வெற்றி கிடைத்து வேலையில் சேரும் யோகம் வாய்க்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வந்தடையும். ஆனால் அதை தக்கவைத்துக் கொள்வது அரிது.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13ஆம் திகதி மிதுன ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். அதே நாளில் ரிஷப ராசியில் புதன் வலிமை இழந்து சஞ்சரிக்கத் தொடங்குகின்றார். இதன் விளைவாக சுபவிரயங்கள் அதிகரிக்கும். மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் நடைபெறப் போகின்றது.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாடு செய்வது கூடுதல் நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

அமைதியை கடைப்பிடித்து ஆனந்தம் காண வேண்டிய மாதம் இது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருக்கும் வரை, எதிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்கள் உருவாகும். குடும்ப பிரச்சினைகளை வெளியில் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. அனுமன் வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

(தொடரும்)

## கடும் சிரமங்களுக்கு மத்தியிலும்

# காணாமற்போனவர்களை தேடும்பணி தொடர்கின்றது

(கொழும்பு)

**கேகாலை, அரநாயக்க - சாமசரகந்த மண் சரிவில் காணாமற்போனவர்களை தேடும் பணி கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் நேற்று 6 ஆவது நாளாக இடம்பெற்றது.**



இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து குறித்த தேடுதல் பணியை மேற் கொண்டு வருவதாக மேல் மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

சாமசரகந்த மண் சரிவில் உயிரிழந்த 6 பேரின் இறுதி கிரியைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

தற்போதைய நிலையில், காணாமற்போன 144 பேரில 22 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மூன்று நாட்களைக் கடந்தும் கொழும்பில் பாரிய வெள்ளம்

## வீதியில் தஞ்சமடைந்த மக்கள் பரிதவிப்பு





(கொழும்பு)

கொழும்பு பேஸ்லைன் வீதியில் நேற்றுக்காலை பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையின் காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்தமையால் மக்களின் குடியிருப்புகள் நீரில் மூழ்கின.

இதன் காரணமாக குடியிருப்புகளை இழந்த மக்கள் கொழும்பு பேஸ்லைன் வீதியல் தற்காலிக குடியிருப்புகளை அமைத்து தங்கியுள்ளனர்.

மற்றுமொரு தொகுதியினர் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பாரிய கொள்கலனிலும் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.(இ-10)



# களனி கங்கையின் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றது



(கொழும்பு)

கொழும்பு நகரில் பல் வேறு பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ள நீர் தற்போது வடிந்தோடி வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களனி ஆற்றின் நாகலகங் வீதியின் நீர்மானியில் 7.05 வீதமாக நீர் மட்டம் பதிவாகியுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் இன்னும் நீர்மட்டம் முழுமையாக குறைவடையவில்லை என நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டது.

நிலவிய சீரற்ற வானிலையினால் 4 இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதேவேளை வங்காளா விரிகுடாவில் நிலை கொண்டிருந்த ரொஆனு சூறாவளி தற்போது காங்கேசன்துறை பிரதேசத்தின் 1100 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியது.

இதன் மூலம் நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் ஸாலிஹீன் தெரிவித்தார். (இ-10)

## வாரம் ஒரு தகவல்

### புதல்வி தூண்டிய புத்துணர்வு

அசோகனது பேரரசு வட இந்தியா முழுவதும் பரவியிருந்தது. தென் பகுதியில் சென்னை, மங்களூர் வரையிலும் அவனது ஆட்சி விரிவு கண்டிருந்தது. ஆனால் கலிங்க நாடு மட்டும் இவனது ஆட்சிக்குட்படாது தன்னரசாய் நடந்து கொண்டிருந்ததை இவனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இதையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர அவன் முடிவு செய்தான். எனவே கலிங்கத்தின் மீது படையெடுத்தான்.

கலிங்க அரசன் தன் நாட்டின் மீது போர்தொடுத்த அசோகன் படைகளை அவன் வலுவுடன் எதிர்த்தான். இக்கடும் போரின் முடிவில் கலிங்கம் தோல்வி கண்டது.

இப்போரில் மடிந்தோர் இலட்சக்கணக்கானவர் ஆவர். வெற்றி கண்ட மன்னன் அசோகன் போரில் கிடைத்த உயர்ந்த நகை களையும் பிற பொருட்களையும் தன் அருமைப் புதல்வி சங்க மித்திரைக்குப் பரிசளிக்க விரும்பினான். அவற்றோடு அவன் சங்கமித்திரை இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

இப் பொருட்களை அசோகன் தன் மகளுக்கு வழங்க முனைந்த போது அவள் ஏற்க மறுத்து விட்டாள்.

தந்தையே! தாங்கள் கலிங்கத்தில் பெரும் வெற்றி கண்டது உண்மைதான். ஆனால் இதில் மாண்டுபோன இலட்சக் கணக்கான மக்களைப பற்றி தாங்கள் சிந்தித்ததுண்டா? உறுப்புகளை இழந்து குற்றுயிரும் கொலையுயிருமாக வாடித் தவிப்போர்களின் பரிதாப நிலையை நீங்கள் பார்த்ததுண்டா? கணவனை இழந்து கைம்பெண்ணான பல்லாயிரக்கணக்கான அபலைகள் பெருக்கி வரும் கண்ணீர் ஆற்றை நீங்கள் காணவில்லையா?

கொலையிலும் அழிவிலும் பெற்ற இந்தப் பொருட்கள் எனக்கு வேண்டாம்.இவற்றை அவலத்தில் மூழ்கி, வாழ வகை கெட்டு வாடித்தவிக்கும் கலிங்க நாட்டு மக்களுக்கே கொடுத்து விடுங்கள் .

புதல்வியன் மொழிகள் மாமன்னன் அசோகனின் அகக் கண்களைத் திறந்தன. அவன் நெஞ்சத்தை நெகிழ வைத்தன. அவள் கூறியவை எவ்வளவு மெய்மையான மொழிகள்! நான் எத்தனை வெறி கொண்டவனாக நடந்து விட்டேன். பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் மகிழ்ச்சியையும் அமைதியான வாழ்வையும் நிலை குலைத்துப் பாழாக்க விட்டேனே! என்று அவன் தான் செய்த கொடூரச் செயலை நினைந்து நெஞ்சம் ஆற்றாமை கொண்டான்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# மீட்புக் குழுக்களை அனுப்பியது இந்தியா

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நிபுணர் குழுக்களையும் இந்தியா கப்பல்கள் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைத்துள்ளது.



இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். சுனைனா மற்றும் ஐ.என்.எஸ் சுட்லேஜ் ஆகிய கப்பல்களிலும், இந்திய விமானப்படையின் சி-17 போக்குவரத்து விமானத்திலும் இந்தியா உதவிப் பொருட்களையும் மீட்பு அணிகளையும் அனுப்பியுள்ளது.

இரண்டு கப்பல்களும், 30 தொடக்கம் 40 தொன் வரையான உதவிப் பொருட்களுடன் கொச்சியில் இருந்து இலங்கை சென்றுள்ளன. இவை கொழும்பைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில், கூடாரங்கள், குடிநீர், மருந்துகள், உடுதுணிகள், மற்றும் அவசரகாலத் தேவைக்கான பொருட்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

மேலும், மீட்புப்படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் சுழியோடிகளும் இந்தக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட உதவிக்கோரிக்கையை அடுத்து, வியாழக்கிழமை இரவு இந்த உதவிப் பொருட்களை அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது. இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 6 மணிநேரங்களில் இரண்டு கப்பல்களும் தயார்படுத்தப்பட்டன என்று இந்தியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், மீட்பு மற்றும் நிவாரண உதவிகளுக்கு இந்தியக் கடற்படை தயார் நிலையில் உள்ளது. அவசர கோரிக்கை விடுக்கப்பட்டால் அனுப்புவதற்காக, கொச்சியில், இந்தியக் கடற்படையின் இரண்டு டோனியர் விமானங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இந்திய உள்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் நடத்தப் பட்ட அவசர கூட்டம் ஒன்றையடுத்து, விமானம் மூலம் அவசர உதவிப் பொருட்களை அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது.

இதையடுத்து, இந்திய விமானப் படையின் கனரக போக்குவரத்து விமானமான, சி-17இல், 60 தொன அவசர உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்றது. டில்லி பாலம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் தேசிய அனரத்த முகாமைத்துவ அதிகார சபை மற்றும் தேசிய அனர்த்த மீட்பு படை ஆகியவற்றின் அதிகாரிகளும், கொழும்புக்குச் சென்றனர்.

சென்னையில் தங்கிச் சென்ற இந்த விமானத்தில், மருத்துவ உதவிகள், கூடாரங்கள், தார்ப் பாய்கள், அவசரகால விளக்குகள், நடமாடும் கழிப்பறைகள், ஆகியனவும் ஏற்றிச் செல்லப்பட்டன.

இதுகுறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை மிகவும் அருகில் உள்ள நட்பு நாடு. அங்கு நெருக்கடிகள் ஏற்படும் போது முதலில் கைகொடுக்கும் நாடாக இந்தியாவே இருந்து வருகிறது. சுனாமி ஏற்பட்ட போதும் இந்தியாவே முதலில் உதவியது. இம்முறையும் இந்தியாவே முதலில் உதவிகளை அனுப்பியுள்ளது. மேலதிக உதவித தேவைப்பாடுகள் தொடர்பாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து கலந்துரையாடி வருகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-10)

# விண்ணப்பங்கள் கோரல்

I) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சால் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயதெல்லை:-21 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விணப்ப முடிவுத் திகதி:-2016.06.17 ஆகும்.

மேலதிக தகவல்களுக்கு 20.05.2016 இல் வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும்.

II) இலங்கைப் பரீட்சைத் திணைக்ளத்தின் அறநெறிப்பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சைக்கு (இந்து சமயம்-2015) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016.06.20 ஆம் திகதி ஆகும்.

மேலதிக தகவல்களுக்கு 20.05.2016 இல் வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும்.

III) இலங்கை புகையிரத நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களைச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 20.05.2016 இல் வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 120 | 200 | 100 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 80 | 140 | 105 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 70 | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 280 | 300 | 180 | 220 | 200 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 50 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 140 | 200 | 110 | 100 | 120 | 120 | 140 |
| கரட் | 150 | 120 | 100 | 120 | 120 | 200 | 60 |
| பூசணி | 60 | 40 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 60 | 70 | 100 | 80 | 160 | 120 |
| வாழைக்காய் | 30 | 20 | 30 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 110-120 | 100 | 120 | 160 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 150 | 200 | 150 | 200 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 160 | 150 | 110 | 200 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 80 | 100 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 160 | 200 | 250 | 160 | 160 | 240 | 180 |
| பீற்றூட் | 140 | 200 | 110 | 160 | 140 | 150 | 100 |
| கறிமிளகாய் | 150 | 200 | 140 | 120 | 140 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 150 | 120 | 200 | 120 |
| போஞ்சி | 250 | 200 | 220 | 220 | 200 | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 160 | 90 | — | — | 160 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 30 | — | 50 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 300 | 450 | 350 | 200 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 25 | 40 | 25 | 15-25 | 40 |
| இராசவள்ளி | 160 | 250 | 130 | 180 | 240 | 200 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 20 | 100 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 20 | — | 30 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 40-50 | 80 | — | — | 80 |




- கிமு 334 - மகா அலெக்சாண்டர் தலைமையில் கிரேக்க இராணுவம் பேர்சியாவின் மூன்றாம் டாரியஸ் மன்னனைத் தோற்கடித்தனர்.
- 1809 - வியென்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.
- 1834 - இலங்கையில் சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.
- 1840 - நியூ சவுத் வேல்சுக்கு பிரித்தானியக் குற்றவாளிகளை நாடுகடத்துதல் நிறுத்தப்பட்டது.
- 1844 - பாரசீக மதகுரு பாப் தனது பாபிசம் என்ற தனது மதக்கொள்கையை வெளியிட்டார். இவரே பஹாய் சமயத்தைத் தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.
- 1906 - ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1915 - ஐக்கிய அமெரிக்காவில் லாசன் முனை வெடித்தது.
- 1915 - ஸ்கொட்லாந்தில் ஐந்து தொடருந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் 227 பேர் கொல்லப்பட்டனர். 246 பேர் காயமடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மெச்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.
- 1958- இலங்கை இனக்கலவரம் - இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1960 - தெற்கு சிலியில் நிகழ்ந்த 9.5 அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதுவே இதுவரையில் பதியப்பட்ட அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகும்.
- 1967 - பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் கடைத் தொகுதி ஒன்று தீப்பிடித்ததில் 323 பேர் கொல்லப்பட்டு 150 பேர் காயமடைந்தனர்
- 1968 - அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஸ்கோர்ப்பியன் மூழ்கியதில் 99 பேர் கொல்லப்பட்டனர
- 1972 - இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.
- 1990 - வடக்கு யேமன் மற்றும் தெற்கு யேமன் ஆகியன இணைந்து யேமன் குடியரசு ஆகியது.
- 1990 - விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.
- 2004 - நெப்ராஸ்காவில் இடம்பெற்ற சூறாவளியனால் ஹலாம் நகரம் முற்றிலும் அழிந்தது

**பிறப்புகள்**

- 1859 - சேர் ஆர்தர் கொனன் டொயில் துப்பறியும் எழுத்தாளர். (இ. 1930)
- 1867 - உமையாள்புரம் சுவாமிநாத ஐயர் கருநாடக இசைக் கலைஞர். (இ. 1946)
- 1944 - வை.கோபாலசாமி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தலைவர்.
- **1926 - தமிழ்வாணன் தமிழக எழுத்தாளர், இதழாசிரியர். (இ.1977)**

**இறப்புகள்**

- 1885 - விக்டர் ஹியூகோ, பிரெஞ்சு எழுத்தாளர். (பி. 1802)

**சிறப்பு நாள்**

- சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம்.
- யேமன் - தேசிய நாள்.
- இலங்கை - தேசிய வீரர்கள் நாள், குடியரசு நாள். (1972)

## தமிழ்வாணன்
### தமிழக எழுத்தாளர், இதழாசிரியர்



தமிழ்வாணன் தமிழக எழுத்தாளரும், இதழாசிரியரும் ஆவார். தமிழ்வாணன் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தேவகோட்டையில் வாழ்ந்த லெட்சுமணன் செட்டியாருககும் பிச்சையம்மை ஆச்சிக்கும் இரண்டாவது மகனாக 1926 மே 5ஆம் திகதி பிறந்தார். இராமநாதன் என்பது இவரது இயற்பெயர். தமிழ்த்தென்றல் திரு. வி.க. இவருக்கு "தமிழ்வாணன்" எனப் பெயரைச் சூட்டினார். பத்திரிகைத் துறையில வல்லிக்கண்ணனை ஆசிரியராகக் கொண்டு திருச்சியில் இருந்து வெளிவந்த கிருஷ்ணசாமி ரெட்டியாரின் "கிராம ஊழியன்" பத்திரிகையில் தமிழ்வாணன் 30 ரூபாய் சம்பளத்தில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். சில மாதங் களில் கிராம ஊழியன் ஆசிரியராய் பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர் "சக்தி" என்ற மாத இதழை வெளியிட்டு வந்தார். கோவிந்தன் தொடங்கிய "அணில்" என்ற குழந்தைகளுக்கான புதிய வார இதழில் ஆசிரியராகப் பொறுபபேற்றார். தனது பள்ளித் தோழரான வானதி திருநாவுக் கரசுடன் இணைந்து "ஜில்,ஜில்" பதிப்பகம் என்ற பெயரில் குழந்தை களுக்காக நூல்கள் வெளியீட்டகம் ஒன்றைத் தொடங்கினர். அந்தப் பதிப்பகத்தின் முதல் வெளியீடு "சிரிக்காதே!". அதனை அடுத்து சவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். தொடர் ந்து "அல்வாத் துண்டு", "சுட்டுத் தள்ளு", "பயமா இருக்கே" என்ற பல தலைப்புகளில் நூல்கள் எழுதினார். குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை கல்கண்டு என்ற புதிய வார இதழை ஆரம்பித்து அதன் முழுப் பொறுப்பையும் தமிழ்வாணனிடம் ஒப்படைத்தார். துணிவே துணை என்ற தாரக மந்திரத்துடன் வெளிவந்த கல்கண்டு இதழை சிறுவர் முதல் முதியோர் வரை விரும்பிப் படித்தார்கள். அவர். "தமிழ்ப் பற்பொடி" என்ற பெயரில் பற்பொடியை தயாரித்து விற்பனை செய்தார். தெலுங்கில் வெளிவந்த திரைப்படங்கள இரண்டை பிள்ளைப்பாசம், துடிக்கும் துப்பாக்கி என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டார். காதலிக்க வாங்க என்ற தமிழ்த் திரைப்படத்தை தானே கதை, வசனம் எழுதித் தயாரித்து வெளியிட்டார்.

# இலங்கையில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கனமழை

## பலியானோர் எண்ணிக்கை 71 ஆக உயர்வு

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கொட்டும் கன மழை மற்றும் நிலச்சரிவால் பலியானோர் எண்ணிக்கை 71 ஆக அதிகரித்துள்ளது.**

ஒரு வாரமாக பெய்யும் கன மழையால் தலைநகர் கொழும்பு உட்பட 21 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 5 இலட்சம் பேர் மோசமான பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

நிலச்சரிவால் 30 அடி அளவுக்கு மண் மேடு ஏற்பட்டு அதன் அடியில் 132 பேர் சிக்கியுள்ளனர். இவர்கள் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை என்று இராணுவம் கூறியுள்ளது.

எனவே பலி எண்ணிக்கை 200ஐ தாண்டும் என அஞ்சப்படுகிறது.

மீட்பு பணிகளில் முப்படைகளும், பேரிடர் மீட்பு படைகளும், முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. (இ-10)



## மீளாத் துயரில் மக்கள்















## வெள்ளத்தில் மிதக்கும் வெல்லம்பிட்டி
















களனி கங்கை பெருக்கெடுத்தமையால் வெல்லம்பிட்டி பகுதி நீரில் மூழ்கியுள்ளது. வீதிகள், பாடசாலைகள் மக்களின் குடியிருப்புகள் என அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் மிகுந்த துயரத்துக்குள்ளாகியுள்ளனர். குறித்த பகுதியிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியேறியுள்ள போதும் இன்னும் பலர் குடியிருப்புகளுக்குள் உள்ளனர். அவர்களை மீட்கும் பணியில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த இருநாட்களில் காலநிலை சீராக காணப்பட்ட போதும் வெல்லம்பிட்டி பகுதியில் இன்னமும் 10 அடிக்கு மேல் நீர்மட்டம் காணப்படுகின்றது. (இ-10)

# தொழிற்சாலைகளை மட்டும் நம்பி இருக்காமல் வேறு வழிகளிலும் வருவாயை தேட முனையுங்கள்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



(மல்லாவி)

வடக்கில் இயங்குகின்ற தொழிற்சாலைகளை மட்டும் நம்பியிருக்காது வேறு வழிகள் மூலமாகவும் வருவாய் தேட முனைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இராணுவ படையகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தினத்தை முன்னிட்டு 29 பயனாளிகளுக்கு பசுக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனைத்து இனங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே புத்த பெருமானின் வழிகாட்டலாக இருந்ததாக குறிப்பிட்ட ஆளுநர், இலங்கையில் இனவாதம், இன பேதம், சமய பேதமின்றி அனைவரும் ஒற்றுமையாக செயற்பட் வேண்டும் என தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காங்கேசன்துறை தொழிற்சாலை, பரந்தன் தொழிற்சாலை என்பன மூடிய நிலையில் காணப்படுகின்றன.

குறித்த தொழிற்சாலைகளின் வருமானத்தினை மட்டும் நம்பி வடக்கு மாகாணம் இருக்காது, ஏனைய வழிகளில் தொழில் துறையை முனனோக்கி கொண்டு செல்ல வேணடும் என குறிப் பிட்டார்.

வடக்கில் உள்ள நீர், நில வளங்களைக்கொண்டு எவ்வாறான உற்பத்திகள் மூலம் வருவாயை பெருக்கலாம் என சிந்தித்து நாம் செயற்பட வேண்டும். அதற்காக தான் முழுமையாக அர்ப்பணிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் முடிந்தளவு உதவிகளை வழங்கி வருகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மேம்பட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இன்று (நேற்று) கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டு முன்னேற்றம் அடைய வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, வடக்கு மாகாண ஆளுநர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15-312)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட மாவட்ட செயலகங்களினால் உதவிகோரல்

## வவுனியா

(குருமன்காடு)

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமாரவினால் வெள்ள நிவாரண உதவி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் என்பவற்றை உள்ளடக்கிய கொழும்பு, கேகாலை உள்ளிட்ட பல பகுதிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன. அப்பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீட்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இன்றி அவதிப்படும் அம் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் முகமாக வவுனியா மாவட்ட செயலகம் ஊடாக வெள்ள நிவாரண உதவிப் பொருட்கள் சேகரிக்கப்படுகிறது.

உதவிட முன்வருவோர் பால்மா பெட்டிகள், குடிநீர், சிறுவர்களுக்கான ஆடைகள், பெண்களுக்கான சுகாதார ஆடைகள், உலர் உணவுப் பொருட்கள் என்பவற்றை மாவட்ட செயலகத்தில் உள்ள நிவாரணம் சேகரிக்கும் நிலையத்தில் ஒப்படைத்து பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டி நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (2-250)

## முல்லைத்தீவு

அனர்த்த பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் சேகரித்தலும் விநியோகித்தலுக்குமான பொறிமுறை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டதற்கு அமைவாக நிவாரணப் பொருட்களை சேகரித்தல் , விநியோகித்தலுக்கான நிலையம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆதலால் நன்கொடைகளை வழங்க முன்வரும் நலன் விரும்பிகள் இது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளருடன் 077 395 7886/021 229 0054 ஆகிய இலக்கங்களுடனும் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரை 077 248 7804 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்ந்த மற்றும் இந்தியாவிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு சிறைச்சாலைகள்மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடி யேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும் வீடமைப்பு திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளை தொழில்நுட்ப மேற்பார்வை செய்யும் பொருட்டு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர். விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை காடி தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ் (சிவில்) அல்லது தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையின் தேசிய பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் (சிவில்) அல்லது கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் (சிவில்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பில் தேசிய தொழிற்றகைமை(NVQ) மட்டம்- 6 இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன் ஆகக் குறைந்தது 2 வருட முன்னனுபவமுள்ளோர் விண்ணப்பிக்க முடியும். இப்பதவியானது ஆறு மாதகால ஒப்பந்த அடிப்படையிலானது என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட படிகள் அடங்கலாக மாதம் ஒன்றிற்கு 45,000 ரூபாவிற்கு மேற்படாத கொடுப்பனவு வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது பூரண சுய விபரம், கல்வி மற்றும் தொழிற்றகைமைகள் என்பவற்றை உள்ளடக்கிய சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தினை 2016.06.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், வவுனியா என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்க முடியும். நேர்முகப் பரீட்சை தொடர்பில் கடித மூலம் அறியத்தரப்படும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பீ.ஆர்.புஸ்பகுமார் அறிவித்துள்ளார். (2-250)

# வற்றாப்பளை பொங்கல் தின விசேட பேருந்து சேவைகள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி பொங்கல் விழாவுக்கு செல்பவர்களின் நன்மை கருதி விசேட பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வட பிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் நோக்கி பயணிகளின் வருகைக்கு ஏற்ப விசேட பேருந்து சேவைகள் செயலாற்ற இருக்கின்றன.

அத்துடன் கிராமப் புறங்களில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இ.போ.ச. சாலைகளில்கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்திற்கு எமது பேருந்தினை அனுப்பி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப்படுவார்கள் என அவர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு யாழ். சாலை- 021 222 2207, 077 105 8150, பருத்தித்துறை சாலை - 021 226 3266, 077 105 8130, காரைநகர் சாலை - 021 320 7593, 077 105 8120, கிளிநொச்சி சாலை - 021 228 3737, 077 105 8170, மன்னார் சாலை - 023 222 2281, 077 105 8140, வவுனியா சாலை - 024 222 3449, 077 105 8160 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.(2)



புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் உள்ள வயல் நிலங்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந் நிலையில் அண்மையில் பெய்த மழையை அடுத்து வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி பயிரழிவை ஏற்படுத்தியுள்ளதைப் படத்தில் காணலாம்.

# குடும்பஸ்தரின் சடலம் வீடொன்றிலிருந்து மீட்பு

(பனிக்கன்குளம்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடொன்றில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலம் முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்தில் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். நாகலிங்கம் யோகேஸ்வரன் (வயது -30) என்ற இளம் குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# வடக்கு மாகாண சபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் தையல்பயிற்சி பெறும் மாணவிகளுக்கு பயிற்சி துணிகள்



(குருமன்காடு)

கிராம அபிவிருத்தித் திணைககளத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையங்களினூடாக 5 பிரதேசங்களிலும் தையல் பயிற்சிகள் பெறும மாணவிகளின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந் நிதியிலிருந்து தையல பயிற்சி பெறும் மாணவிகளுக்கு பயிற்சி துணிகளை பயிற்சி வழங்கும் ஆசிரியரிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வழங்கி வைத்தார்.

குறித்த உதவி வழங்கும் நிகழ்வானது கடந்த 19 ஆம் திகதி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிமனையில் நடைபெற்றது.

மேலும் இந் நிகழ்வில் பிரதேச ரீதியாக தங்களின் தேவைகளையும் தையல் போதனாசிரியர்கள் து.ரவிகரனிடம் கலந்துரையாடினர்.

இந் நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (2-250)

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்.

–இளங்கோ அடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலில் இருப்பவர்கள் திருக்குறளைப் படிக்க வேண்டும்

அரசியல் என்பது பெறுமதியான ஒரு சொற்பதம். இருந்தும் அரசியல்வாதிகளின் பிறழ்வுத்தனங்கள் அரசியலை கீழ்மையாக்கிவிட்டன.

நாடு நல்லதாக இருக்க வேண்டுமாயின் அரசும் அரசியலும் சிறப்பாக அமைய வேண்டும்.

அரசு, அரசியல் பிழைக்கின்ற போது; நாடு, மக்கள் சிக்கலுக்கு ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

எல்லாப் பதவிகளுக்கும் தகைமைகள் இருக்கின்ற போதிலும் அரசியல்வாதிகளுக்கான தகைமைகள் வேறு விதமாக அமைந்து விடுகின்றன.

இத்தகைய நிலைமைகள் மாற்றப்படாத வரை அரசியல்வாதிகளை குறை கூறுவது தொடரவே செய்யும்.

அரசியல் என்பது எல்லோருக்கும் விருப்பமானது அல்ல; அதற்குக் காரணம் அரசியல் பெற்று உள்ள அவப்பெயர் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

எனவே, இந்த நாட்டை ஆளுகின்ற அரசியல்வாதிகள் மற்றையவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ வேண்டும். அரசியலில் சேர்ந்தால் ஊழல் செய்யலாம்; அதிகாரம் செலுத்தலாம் என்று நினைத்தால், எல்லாமும் அம்போ என்றாகி விடும்.

அரசியல்வாதிகள் கண்ணியம் மிக்கவர்களாக வாழும் போது அரசும் நாடும் மக்களும் தர்மம், நீதி, நேர்மை என்பவற்றை பின்பற்றி அறத்துடன் கூடிய வாழ்வை வாழ்வர்.

அரசியல்வாதிகள் என்போர் தேவையானவர்கள். அவர்கள் இல்லாமல் அரசு இல்லை என்பதால் அரசியல்வாதிகளை தர்மம் உணர்ந்தவர்களாக ஆக்குகின்ற பெரும் பொறுப்பு பொதுமக்களை சார்ந்ததாக உள்ளது.

நாம் ஆதரிக்கும் அரசியல்வாதிகள் செய்வதெல்லாம் சரி என்று நினைத்துவிட்டால், அதுவே இந்த நாடு அழிவதற்குக் காரணமாகி விடும்.

ஆக நமது விருப்பத்துக்குரிய அரசியல்வாதிகளாயினும் அவர்கள் செய்வது சரி என்றால், அதைச் சரி என்றும் பிழை என்றால், அதைப் பிழை என்றும் கூறுவது மக்களின் தார்மீகக் கடமையாகும்.

எனினும் பல இடங்களில் தத்தம் ஆதரவுக்குரிய அரசியல்வாதிகள் எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்துவதற்கு ஆதரவாளர்கள் மல்லுக்கட்டி நிற்பதையே நாம் காண முடிகின்றது.

இதற்கு மேலாக அரசியல்வாதிகளும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், விடயங்களை தெளிவாக அறிந்து கொள்ளாமல் தமக்கு ஆதரவானவர்களை முழுக்கண்ணாலும் மற்றவர்களை ஓரக்கண்ணாலும் பார்ப்பது நீதியன்று.

அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி, தோல்வி என்பதையும் அடுத்த பதவியையும் சதா நினைத்திருக்காமல் நீதியை, உண்மையை, நியாயத்தை துணிந்து நிலைநாட்ட வேண்டும்.

இதை அரசியல்வாதிகள் செய்கின்ற போது தர்மம் நிறைந்த ஆட்சி நிலைபெறும். இதற்காக அத்தனை அரசியல்வாதிகளும் கட்டாயமாக திருக்குறளைப் படிக்கவேண்டும்.

திருக்குறளில் கூறப்பட்டுள்ள அரச இலட்சணங்கள், அறக்கருத்துக்கள் என்பன உரியவாறு உணரப்பட்டால் துன்பம் இல்லாத அரசியலையும் ஆட்சியையும் மக்களையும் நாடு தந்து கொள்ளும் என்பதால்,

அரசியல்வாதிகளின் உயர் தகைமை என்பது திருக்குறளைக் கற்று அதன்படி நடக்கும் சீராளர்கள் என்பதாக இருந்தால் அது போதுமானதாகும்.

# கேகாலையில் “கில்லர்” நிலச்சரிவு

## புவியியல் நிபுணர் தகவல்

கேகாலை, அரநாயக்கவில் ஏற்பட்டது ‘கில்லர் நிலச்சரிவு’ வகையைச் சார்ந்தது என்று பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் மற்றும புவிச்சரிதவியல் பேராசிரியர் கபில தகநாயக்கா தெரிவித்தார்.

இது சுமார் நூறு வருடங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட இடத்தில் ஏற்படும் தன்மை கொண்டது என்றும் பாறைகள் சிதைவடைந்து மண் உருவாகும் இயற்கை செயற்பாட்டின் ஒரு கட்டமே இது எனவும் அவர் தெரிவித்தார்.

பேராசிரியர் கபில தகநாயக்கா நேரடியாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே ஊடகங்களுக்கு மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அரநாயக்க விபத்து நடந்துள்ள இடத்தில் இதன் பிறகு சிறிய அளவிலான மண்படைகள் கழன்று விழுவதைத் தவிர வேறு அனர்த்தம் அண்மித்த காலங்களில் ஏற்படும் வாய்ப்பு விஞ்ஞான ரீதியாக இல்லை எனலாம். அரநாயக்க சிரிபுர பிரதேசம் நூறு வருடங்களுக்கு மேல் மண்சரிவு ஒன்றைச் சந்தித்த இடமாக இருக்கும். அது பற்றி அறியாத மக்களே அங்கு போய் குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான வருடங்களாக ஏற்பட்டு வரும் இயற்கை மாற்றங்கள் காரணமாக பாரிய கற்பாறைகளுக்கிடையே தண்ணீர் சென்று உட்பகுதியிலுள்ள பாறைகள் சிதைவடைகின்றன. பாறைகளின் சிதைவிலிருந்தே மண் உருவாகிறது. இதுதான் மண் உருவாகும் வரலாறாகும். அவ்வாறான மண் படைகளுக்குள் மேலுள்ள நீர் சென்று மீண்டும் மீண்டும் செல்வதால் அதன் கனஅளவு அதிகரித்து அவ்விடம்வெடிப்படையும். அதுவே இவ்விடத்தில் ஏற்பட்டுள்ள மண்சரிவாகும்.

அப்படியாக ஏற்படும் வெடிப்பு பாரிய சத்தத்தை ஏற்படுத்துவதோடு கீழ் பகுதியில் உள்ள காய்ந்த களிமண் படலத்தில் தூசித்துகள் ஏற்பட்டு புகை போன்று வெளிக்கிளம்பும். அவை வழிந்தோடும் நீருடன் சேர்ந்து கீழ்நோக்கி சகதியாக வரும். இது கில்லர் லேண்ட சிலைட் (Killer Landslide) அல்லது கில்லர் நிலச்சரிவு எனப்படும். இதற்கு முன்னர் இப்படியான பாரிய நிகழ்வொன்று இலங்கையில் பதிவாகவில்லை.

இவ்விடத்திலுள்ள மண் வளமானதாக இருப்பதால் காலப்போக்கில் மக்கள் அங்கு குடியேறுவதுடன் சுமார் 100 ற்கும் மேற்பட்ட வருடங்களின் பின் இதே இடத்தில் அதே பாதையில் மீண்டும் மண்சரிவு ஏற்படும் நிலை உண்டு என்றும் அப்போது பழைய நிலைமை களை மக்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (செ-12)

# ரணிலுக்கு எதிராக பாரிய சூழ்ச்சி பின்னணியிலுள்ள நபர்கள் யார்?

(கொழும்பு)

இலங்கை அரசியல் களத்தில் தற்போது சூழ்ச்சிகள் நிறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறையிலுள்ள தேசிய அரசாங்கத்தை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டம் ஒன்று மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகிய இணைந்து தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியை ஓரம் கட்டி, சுதந்திர கட்சி தலைமையிலான அரசாங்கத்தை அமைக்க சூழ்ச்சி திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

முன்னணியின் தலைமையிலான அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிலர் சூழ்ச்சியான செயற்பாடொன்றை ஆரம்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அமைச்சர் டிலான் பெரேராவின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களை, சுதந்திர கட்சியின் பக்கம் இணைத்து கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

எனினும் சூழ்ச்சி தொடர்பான அனைத்து தகவல்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புலனாய்வாளர்கள் வழங்கியுள்ளனர். இது தொடர்பான தகவல்களை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் கூட்டு எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் உள்ளதா என்பது தொடர்பில் இதுவரையில் தகவல் வெளியாகவில்லை.


எனினும் தற்போது பிரபலமான அரசியல்வாதிகள் பட்டியலில் உயர்ந்த இடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுக்கும் வகையில் கட்சியை விட்டு எந்தவொரு உறுப்பினரும் செல்வதற்கு சிந்திப்பதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் பிரதேசத்தில் மின் தடைப்படும். (இ-9)

# “எப்படி” என்ற கேள்விக்குப் பதில் “ஏன்” என்ற கேள்வியை எழுப்புவோம்



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று மூவொரு இறைவன் பெருவிழா. இது நம் விசுவாசத்தின் அடிப்படையாக அமைந்த ஒரு பெருவிழா. கத்தோலிக்க இறையியலின்படி கடவுள், இறைத்தன்மையில் ஒருவராகவும், ஆள்தன்மையில் தந்தை, மகன், தூய ஆவி என மூவராகவும் இருக்கிறார். கடவுளின் இந்த இயல்பே அதி புனித திரித்துவம் என்று அழைக்கப்படுகிறது.

### பரமபிதா காட்டிய பாதை

எரியும் திரி ஒன்றில் ஒளியுண்டு. வெப்பமுண்டு. மெழுகுதிரிக்குரிய அமைப்பும் உண்டு. அதேபோல மூவொரு கடவுள் மூன்று தன்மைகளைக் கொண்டிருந்தாலும் ஒரே கடவுளாக இருக்கிறார். ரோஜா ஒன்று சிவப்பாக, மணமுள்ளதாக, மலரின் அமைப்பைப் கொண்டதாக உள்ளது. தண்ணீர் திரவமாக, ஐஸ் கட்டியாக, நீராவியாக தனித் தன்மை கொண்டிருக்கிறது.

புகழ்பெற்ற அறிவியலாளர் டாக்டர் ஹென்றி மோரிஸ் கூறுகிறார், உலகம் பருப்பொருள், இடம், காலம் ஆகியவற்றால் ஆனது . இவை மூன்றும் இல்லையேல், ஏதேனும் ஒன்றுகூட இல்லாதிருந்தாலும் இந்த உலகு இல்லை. அதே போல மூவொரு கடவுளும் இருப்பது அவசியமாகிறது என்கிறார் அவர். இவை ஒவ்வொன்றுமே மூன்றில் ஒன்றாக இருக்கின்றன. மூவொரு கடவுள் என்பதனை நாம் எம் அறிவுக்குள் அடக்கி விட முடியாது அது விசுவாசமே. அறிவுக்குள் மூவொரு கடவுளை அடக்கிவிட முயலும் போதெல்லாம் 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த Evegrius (ஈவ்கிறிஸ்) என்ற கிரேக்கத் துறவியின் வார்த்தைகளை நினைவில் கொள்வது நல்லது. ‘கடவுளை நம் அறிவுக்குள் அடக்கிவிட முடியாது. அப்படி அடக்க முடிந்தால், அவர் கடவுளாக இருக்க முடியாது” என்றார் அவர். கடவுளுக்கு முன், அவரது படைப்புக்கு முன், நாம் யார் என்பதை உணர்ந்தால் அவரை நம் அறிவுக்குள் அடக்கிவிடும் முயற்சிகள் அல்லது கனவுகள் விலகி, உண்மைக் கடவுளை உய்த்துணர முடியும். கடவுள் நமக்குப் பல திறமைகளைக் கொடுத்துள்ளார். தெரிந்து கொள்ளுதல், அறிந்து கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல், என்று பல நிலைகளில் நாம் நம் அறிவை வளர்க்க முடியும். இவற்றிற்கெல்லாம் மேலாக, உணர்ந்து கொள்ளுதல், உய்த்துணர்தல் ஆகிய ஆழமான திறமைகளையும் நாம் பெற்றுள்ளோம். தெரிந்துகொண்டதை, அறிந்து கொண்டதை, புரிந்து கொண்டதை நாம் வார்த்தைகளால் விளககிவிட முடியும். ஆனால், வாழ்வின் மிக ஆழமான பல உண்மைகளை, நம் மனத்தால் உய்த்துணர்ந்த உண்மைகளை வார்த்தைகளால் விளக்க முடியாது.

கடவுள் தன்மை கொண்ட மூன்று ஆட்கள் ஒரே கடவுளாக அன்புற்று வாழ்வது போன்று நாமும் நம் குடும்பங்களில் அன்புடன் வாழ வேண்டும். பாசமும் பரிவும் மன்னிக்கும் தன்மையும் மேலோங்கியிருக்க வேண்டும். அன்புற்று ஒன்று பட்டு ஓர் உயிரும் ஓர் உடலுமாக நாம் அனைவரும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மூவொரு கடவுள் நம் குடும்ப வாழ்வின்ஒற்றுமைக்கு மாதிரி. நம் குடும்பத்திலும் மற்றனைவரோடும் நாம் பாசத்தோடு பழகி வாழ வேண்டும். நம்முடைய உறவுகளில் நாமும கடவுளும் பிறரும் இணைந்த குடும்பமாக வாழவேண்டும். தந்தையாகிய கடவுளைப் போல நாமும் நம் குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை, உலகையே கட்டி எழுப்பவேண்டும். திருமகனாக இருக்கும் இயேசுவைப்போல நாம் மன்னிப்பு வழங்கிசமாதானத்தை ஆறாக ஓட விடவேண்டும். நொறுங்கிய உள்ளங்களில் சாந்தத்தையும் மகிழ்ச்சியையும் நாம் பரிமாறவேண்டும். தூய ஆவியானவரைப் போல் நாம் உண்மைக்குச் சான்றாக, அறியாமை இருளை நீக்க முன்வரவேண்டும்.

# நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக வட மாகாண வல்லவன் உதைபந்தாட்டம்



## யங்கம்பன்ஸ் வெற்றி


பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 19.05.2016 வியாழக் கிழமை நடைபெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்தினை இமையாணன் மத்தி வி.க எதிர்கொண்டது.

போட்டி ஆரம்பித்து 07 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் நிறோசன் முதலாவது கோலினை அடித்து கோல் கணக்கினை ஆரம்பித்தார். தொடர்ந்து 23 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் ரதன் மேலும் ஒரு கோலினை அடிக்க 2:0 என முதற் பாதியாட்டம் நிறைவடைந்தது. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தின் முதலாவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் ரமணன் கிடைத்த சந்தர்ப்பத்தை இரண்டு எதிரணி வீரர்களை இலாபகமாக கடந்து கோல் கம்பத்தின் மூலையை நோக்கி அடித்து சுப்பர் கோல் ஒன்றினை பெற்றார்.

ஆட்ட நேர முடிவு வரை இமையாணன் மத்தி வி.க கோல் பெற முடியாது போனதால் 3:0 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் வி.க.ரமணன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பண பரிசு மற்றும் பதக்கத்தினை கலாவாணி சனசமூக நிலைய தலைவர் கசன் வழங்கி கௌரவித்தார். (க)





வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வலைப்பந்து சுற்றுப்போட்டி

சுன்னாகம் கிழக்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கல்பனா சண்முகரட்னம் ஞாபகார்த்தமாக வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியாக நடைபெறும் மேற்படி போட்டி நாளை 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஜூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 077 254 7995 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை உறுதிப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க)

## சென்.சேவியர் வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 18.05.2016 அன்று புதன்கிழமை நடைபெற இருந்த இரண்டாவது போட்டி ரெட்ரேஞ்சர்ஸ் வி.க. வருகை தராததால் சென். சேவியர் வி.க. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் காத்தாங்குளம் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றிஸ் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியினை புனித ஹென்றியரசர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென்.லூசியஸ் விளையாட்டுக்கழகமும் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன. (க)

## சங்கர் அதிரடி; நவஜீவன்ஸ் வெற்றி

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் புத்தூர் எவறெஸ்ட் வி.க. எதிர்கொண்டு நவஜீவன்ஸ் வி.கழகம் மோதியது. கடின போட்டியின் மத்தியில் சங்கரின் அதிரடியான கோல் மூலம் 1:0 என்ற கோல் அடிப்படையில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

# யாழ். மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான ஹொக்கி போட்டி

## தெல்லிப்பழை அணி சம்பியன்





யாழ்.மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் தெல்லிப்பழை அணி சம்பியன் பட்டம் வென்றது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச அணியை எதிர்த்து உடுவில் பிரதேச அணி மோதிக் கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

## கொழும்பு மேலதி...

ந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக கூறியே அவர் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட் டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சமுகமளித்து வாக்குமூலம் அளிக்குமாறு அவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## எக்னெலிகொட,...

முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதிகாரிகளின் விபரங்களை வெளியிட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் தனித்துவம் பேணப்பட வேண்டியதுடன், விபரங்களை வெளியிடுவதால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகள் பாதிக்கப்படும் என சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பதிலளித்த ரணில், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் தொடர்பிலான விபரங்களை வெளியிட்டால் படுகொலைகளுடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயர்களையும் வெளியிட நேரிடும் எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்தே உதய கம்மன்பில சபையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தமிழர் பிரச்சினை...

அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் டெனி டேவிஸ் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த போட்டியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டியது தற்போது முக்கிய விடயமாக பார்க்கப்படுகின்றது.

யுத்தம் நிறைவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டு வருவதாகவே உணர்கின்றனர். இதனால் அவர்கள் நீதிப் பொறிமுறைகளை நாடுவதில் பின்னடைவை சந்திப்பதுடன் அவர்கள் எதிர்பார்க்கின்ற நீதியும் வெகு தொலைவிலேயே பார்க்கப்படுகின்றது. புதிய அரசாங்கத்தின் தலைவர்கள் பல்வேறு வாக்குறுதிகளை தேர்தலின் போது அளித்திருந்தனர்.

தற்போது இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகவுள்ளது. இதன்படி தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வும் விரைந்து எட்டப்பட முயற்சிக்கப்படல் வேண்டும்.

அரசாங்கம் மெய்யான மாற்றங்களை ஏற்படுத்தும் வரையில் அமெரிக்கா இராணுவ உதவிகள் உள்ளிட்ட சில விடயங்களில் தளர்வினை பின்பற்றக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாக யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டாலும் சமாதானம் இதுவரையில் வென்றெடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## மாத இறுதிவரை...

தற்போதைய காலநிலையின் அடிப்படையில் இந்த மாதம் முழுவதிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இடியுடன் கூடிய மழை பெய்யாவிட்டாலும் ஓரளவு தொடர்ச்சியாக மழை பெய்யும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பருவப் பெயர்ச்சி மாற்றங்களினால் தொடர்ச்சியாக இவ்வாறு மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என லலித சந்திரபால தெரிவித்துள்ளார். (செ-12)

## சிறுகாணிகளை...

யப்படுமா என யாழ் மாவட்ட அரச அதிபர நா.வேதநாயகனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

அரசினால் இலவசமாக காணிகளை வழங்க முடியாது. ஆனால் வலி வடக்கு பகுதிகளில் சொந்தமாக காணி உள்ளவர்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சொந்தமாக காணி உள்ளவர்கள் அப்பகுதியில் மீள குடியேறும் பட்சத்தில் அவர்களுக்கு இலவச

# பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்குப் பதிலாக மக்கள் தொடர்பு பிரிவு மீள் ஆரம்பம்

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியை இரத்துச் செய்து அதற்கு பதிலாக மக்கள் தொடர்புப் பிரிவை மீள் அறிமுகம் செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் யுத்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை ஊடகங்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில், பாதுகாப்பு பிரிவுகளுக்குள் ஊடகத் தொடர்பு பிரிவு மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் புதிய பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்த பதவியேற்றுக் கொண்டவுடன் பொலிஸ் ஊடகப் பிரிவை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தார். கடைசியாக கிடைத்துள்ள தகவல்களின்படி இனி பொலிஸ ஊடகப் பேச்சாளர் பதவி யாருக்கும் வழங்கப்படப் போவதில்லை என்று தெரிய வந்துள்ளது.

அதற்குப் பதிலாக முன்பு பொலிஸ் திணைக்களத்தில் இயங்கிய மக்கள் தொடர்புப் பிரிவை மீண்டும் இயங்க வைப்பதற்கும், ஊடகங்களுக்கான தகவல்களை மக் கள் தொடர்புப் பிரிவின் ஊடாக அறிக்கை வடிவில் மாத்திரம் வழங்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் முக்கியமான விடயங்களின் போது பொலிஸ்மா அதிபர் அல்லது முக்கிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கவும் பொலிஸ் திணைக்களம் முடிவெடுத்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. (செ-12)

மான வீட்டுத்திட்ட உதவி மற்றும் மலசல கூட வசதிகள் உட்பட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (செ-9)

## சம்பந்தனிடம் வரை...

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வுதிட்ட முன்மொழிவு வரைபை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்கேஸ்வரன், வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் இணைந்து நேற்றைய தினம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் வைத்து கையளித்துள்ளனர்

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள் 13 பேர் வரை கலந்து கொண்டிருந்தனர். (செ-9)

## அனர்த்த பாதிப்பு...

கப்படவுள்ளதாக ஐ.நா அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை ஐ.நா வழங்கும் என்று நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஐ.நா பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார். (செ-12)

## கேகாலை பகுதி...

டுள்ளது. அந்தப் பகுதிக்கு அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் நேற்று இரவு வரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

ஏற்கெனவே கடந்த செவ்வாய்க்கிழமை அரநாயக்க பகுதியில் உள்ள மூன்று கிராமங்கள் நிலச்சரிவில் புதையுண்டதில் பலர் உயிரிழந்ததுடன் அங்கிருந்த 134 பேரின் கதி இன்னமும் தெரியாதிருப்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மோட்டார் சைக்கிள்கள் விபத்து; இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பி.ப 12.15 மணியளவில் ஊரெழுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்துச் சம்பவத்தில் உடுவில் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் நியூட்டன் (வயது 25) என்ற குடும்பஸ்தரும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை சேர்ந்த கிருஷன் ஆனந்தகுமார் (வயது24) என்ற இளைஞருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-30)

# அனர்த்த நிலைமைகள் குறித்து பாராளுமன்றத்தில் விசேட விவாதம்

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பாக எதிர்வரும் 25-ம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் விசேட விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யூன் மாதம் 7ஆம் திகதிக்கு சபை ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதும் கட்சித் தலைவர் கூட்டத்தினையடுத்து எதிர்வரும் 25-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விசேட பாராளுமன்ற அமர்வொன்று இடம்பெறவுள்ளது.

சபை ஒத்திவைப்பு வேளைக்கு முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவணி எம்.பியான தினேஷ் குணவர்த்தன சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பாக விசேட அமர்வொன்றை நடத்தி விவாதிக்கவேண்டுமென கோரினார்.

இதன்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் முழுமையான அறிக்கை கிடைத்ததும் அது தொடர்பாக கலந்துரையாடலாம். அதற்கு முன்னதாக விவாதம் அவசியமில்லையெனச் சுட்டிக்காட்டிய பிரதமர் ரணில விக்கிரமசிங்க நீங்கள் தேங்காய் உடைத்த தன் விளைவால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது என நகைச்சுவையாக கூறியிருந்தார்.

எனினும் அதன்பின்னர் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு விசேட அமர்வொன்றில் விவாதிப்பதென முடிவு எட்டப்பட்டுள்ளது. (செ-12)

## அனர்த்தப் பாதிப்பு; அமெரிக்கா நிதியுதவி

இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 50ஆயிரம் அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக இலங்கை அரசாங்கத் திடம் வழங்கியுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த தூதரகத் தூதுவர் அதுல் கிஷப்,

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது கவலையை வெளிப்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. (செ-12)

## வெடி விபத்து; பசு படுகாயம்

(மல்லாவி)

வெங்காய வெடி விபத்தில் சிக்கி பசு மாடு ஒன்று படுகாயமடைந்துள்ளது. இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணிக்கு கிளிநொச்சி துணுக்காய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் புற்களை மேய்ந்த கொண்டிருந்த பசு மாடு வெங்காய வெடியை கடித்ததில் பசுவின் முகப் பகுதியின் பெரும் பகுதி பலத்த சிதறல் காயங்களுக்குள்ளானது.

இச்சம்பவம் தொடர்பில் பசு மாட்டின் உரிமையாளர் கூறுகையில்,

இவ்வாறு இப்பிரதேசத்தில் வெங்காய வெடிகளினால் பலமுறை பசுக்கள் காயமடைந்தும் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் சில பசுக்கள் இறைச்சிக்காக கொண்டு செல்லப்படும் அவல நிலையும் காணப்படுகின்றது.

தற்போது வெடி விபத்தில் சிக்கிய எமது பசுவும் உணவை உண்ண முடியாதவாறு வாய்ப் பகுதி படுகாயமுற்ற நிலையில் காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளதாக பசு மாட்டின்உரிமையாளர்தெரிவித்துள்ளார். (செ-12)

# முதலமைச்சராக ஜெயலலிதா திங்களன்று பதவி ஏற்பு

(கொழும்பு)

தமிழக முதல்வராக ஜெயலலிதா ஜெயராம் நாளை திங்கட்கிழமை பதவியேற்க உள்ளார்.

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில், தமிழக முதல்வராக ஜெயலலிதா மீண்டும் பதவியேற்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் 6ஆவது முறையாக முதல்வராக தெரிவுசெய்யப்பட்டு ஜெயலலிதா தமிழ்நாட்டில் வரலாற்று சாதனை நிகழ்த்தியிருக்கிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 134 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக தமிழகத்தில் அ.தி.மு.க மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது.



சொத்து குவிப்பு வழக்கில் பதவியை இழந்த முதல்வர் ஜெயலலிதா, கடந்த 2015ஆம் ஆண்டு இதே மே மாதம் 23ஆம் திகதி தமிழக முதல்வராக மீண்டும் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஜப்பான்...

ஜப்பானிய பிரதமர் எதிர்பார்த்திருப்பதாக கூறிய ஹிரோரோ இசுமி, நல்லிணக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

இதன்போது, ஜப்பானின் கஷிகோ தீவில் நடைபெறவுள்ள 42ஆவது ஜி-7 உச்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்காக ஜனாதிபதி நன்றி கூறினார்.

இந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியுடன் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். இந்த மாநாட்டின் பக்க நிகழ்வாக இந்நாட்டின் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சு நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## சிறுகாணிகளை...

அத்துடன் அரசினால் வழங்கப்படும் இலவச திட்டங்களையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் வலி வடக்குப் பகுதிகளில் ஆயிரத்து 200 க்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் அங்கு முற்றுமுழுதாக மக்கள் குடியேறவில்லை. சொந்தமாக காணி உள்ளவர்கள் மீள் குடியேறியுள்ள போதிலும் முகாம்களில் உள்ள அதிகளவான குடும்பங்கள் சொந்தக்காணி அற்றவர்களாகவே உள்ளனர். இவர்கள் தொடர்ச்சியாக முகாம்களில் இருப்பதும் சவாலான விடயமாகவே உள்ளது.

இது தொடர்பாக முகாம்களில் வசித்து வரும் மக்கள் கருத்து தெரிவிக்கையில், நாம் அன்றாடம் கூலித்தொழில் செய்து எமது வாழ்க்கையை கொண்டு நடத்தி வருகிறோம். எமக்கு சொந்தமாக காணிகளை கொள்வனவு செய்வதற்கான எந்த வசதிகளும் இல்லை. முகாம்களில் தொடர்ச்சியாக இருப்பதற்கும் எமக்கு அனுமதி கிடைக்கவில்லை. எங்கு போவதென்று தெரியாமலும் எமது எதிர்காலம் பற்றி சிந்திக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு தற்போது அரசினால் வீட்டுத்திட்டம் உட்பட அடிப்படை உதவிகள் பல வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சொந்தக்காணி உள்ளவர்களுக்கே அந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. சொந்தக்காணி இல்லாத எமக்கு அவ்வாறான உதவிகள் கிடைக்காமல் போகும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் குறைந்த விலையில் காணிகளை கொள்வனவு செய்வதென்றாலும் அதற்கு கூட எம்மிடம் வசதி இல்லை. நாளொன்றுக்கு 600 ரூபாய் பெற்று வாழ்க்கை நடத்திவரும் எமக்கு 60 ஆயிரத்துக்கு ஒரு காணியை கொள்வனவு செய்ய இயலாதவர்களாக இருக்கிறோம்.

எம்மையும் எமது பிள்ளைகளின் எதிர்காலங்களையும் கருத்தில் கொண்டு எமக்கென சிறு காணிகளை கொள்வனவு செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகள், கொடையாளிகள் என யாராவது உதவ செய்ய முன்வர வேண்டும். அதன் பின்னர் அரசினால் இலவசமாக வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களையும் வேறு உதவிகளையும் பெற்று எமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை வலி வடக்கில் தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அரச காணிகளுக்குள் முகாம்களில் வசித்து வந்த காணியற்றவர்கள் 104 பேருக்கு தலா 2 பரப்பு வீதம் இலவசமாக வழங்குவதற்கு அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கள ஆய்வுகள் ஜனாதிபதி செயலகத்தினூடாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே வேளை அப் பகுதியில் உள்ள மேய்ச்சல் தரைகள் விடுவிக்கப்படுமிடத்து அங்கும் சில குடும்பங்களுக்கு இலவசமாக காணிகள் வழங்க முடியும் என்ற முன்மொழிவுகளும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பு அதிகாரிகளால் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஆனால் அவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் முகாம்களில் சொந்தக் காணி அற்றிருக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் காணிகள் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

முகாம்களில் உள்ள காணியற்றவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் எவையும் செய்

15 ஆம் பக்கம் பார்க்க....





**வேலையாள் தேவை**

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள **மெடிக்கல் கிளினிக்குக்கு** வேலையாட்கள் (பெண்கள்) தேவை.

**தொடர்புகளுக்கு:-0778378597** (4741)

**GOLDEN Rent A Car**

நாள், மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு

T.P- 07746 96695
07520 40061 (C-4652)

**கார்கள் வாடகைக்கு உண்டு**

**Axio,Premio, N16,N15,DAEWOO** (4743)

தொடர்புகளுக்கு
☎ 077 996 1250

**வீடு உடன் வாடகைக்கு**

சாவகச்சேரி பஸ்தரிப்பு நீதிமன்றம் முன்பாக தேவாலய வீதி, டச்சுவீதி ஆகிய இரு வீதியாலும் செல்லக் கூடிய இடத்தில் நான்கு அறைகள் இணைந்து குளியலறை, பெரிய வரவேற்பறை, வாகன தரிப்பிட வசதி கொண்ட வீடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அலுவலக பாவனைகளுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-**
**0779361366, 0771138513, 0778467526** (4730)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-4657)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இந்தியா திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகமும் இலங்கை வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேசுவரர் திருக்கோவிலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் பதினான்காவது அனைத்துலக தமிழ் உரைநடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கம்

இந்தியா திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகத்தின் சார்பில் ஆண்டு தோறும் நடத்தப்படும் மாநாட்டுக் கருத்தரங்கம் இவ்வாண்டு இலங்கை வவுனியா அரசினர் தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2016.05.22 இன்று நடைபெறுகின்ற விழாவில் சமூக,சமய, கலை, பண்பாட்டு சேவையையும் பங்களிப்பையும் மதித்துக் கௌரவித்து பட்டமளித்துச் சான்றிதழ் பெறும்

புற்றளை சித்தி விநாயகர் ஆலய ஆதீனகர்த்தாவும், தர்மகர்த்தாவுமாகிய

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P**

இந்துமத குருபீடாதிபதி அகில உலக சைவக் குருமார் சம்மேளனம் அவர்களை கௌரவிப்பதை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்

இங்ஙனம்
**சந்திரகுமார் மனோன்மணி குடும்பத்தினர்**
**புற்றளைதோட்டம், புற்றளை, புலோலி.**

(C-4663)

DELL

"உலகின் மிகச்சிறந்த Dell Laptop களுக்கு விசேட கொடுப்பனவுகள்"



4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்

4G டொங்கல் இலவசம்

நிபந்தனைகளுக்குட்பட்டது

SINGER



வட்டி இன்றி

DELL - NB - i3 (DELL Inspiron 3543)
- Intel i3 - 5005U, 2.0GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

ரூ.71,999/-
விசேட விலை ரூ.65,999/-
மாதாந்தம் ரூ.4,333/- X12



வட்டி இன்றி

DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
- Intel Dual Core 1.5GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard



கலர் பிரின்டர் இலவசம்

ரூ.62,999/-
விசேட விலை ரூ.57,999/-
மாதாந்தம் ரூ.3,999/- X12

(C-4659) www.masters.lk

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 | | |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 | | |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | | | |

SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 22.05.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 66



# உடலும் உயிரும் உருகிற்று




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# நோய் எதிர்ப்பை அதிகரிக்கும் உணவுகள்

இன்றைய சூழலில் பாதுகாப்பான குடிநீர். சுத்தமான தேநீர். கோப்பி. சுகாதாரமான உணவு என்று பரிசோதித்து ஒவ்வொரு வேளையும் சாப்பிட முடியாது. இதற்குப் பரிகாரமாக தொற்று நோய்களையும் தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும் சிறந்த உணவுகள் சில உள்ளன. இவற்றுள் ஏதேனும் ஆறு உணவுகளாவது தினமும் இடம்பெற்றால் நோய் எதிர்ப்பு ஆற்றலுடன் ஒவ்வொரு நாளும் வாழலாம்.

நோய் வந்தபிறகு குணப்படுத்துவதை விட முன்கூட்டியே பாதுகாப்பு உணர்வுடன் நோய்களைத் தடுத்துக்கொள்வதே சிறந்தது. சரிவிகித உணவுத் திட்டம். ஒருநாள் விட்டு ஒருநாள் கண்டிப்பாக உடற்பயிற்சி அல்லது நடைப் பயிற்சி



போதுமானஅளவுஓயவும் மனதையும் உடலையும் பதற்றத்திலிருந்து காப்பாற்ற யோகா. தியானம் ஏதேனும் ஒரு பொழுது போக்கு விளையாட்டு என்றும் வாழ்க்கை தொடரவேண்டும். இனி உணவுப் பட்டியல்.

எந்தவிதமான தொற்றுக் கிருமிகளும் உடலுக்குள் நுழைய விடாமல் தடுக்கும் முதல் உணவு வெள்ளைப்பூண்டு. கல்லீரலின் சிறந்த நண்பனான செலினியம் உப்பு வெள்ளைப்பூண்டில் தான் அதிகம் உள்ளது.

நமது உடலின் முக்கிய உறுப்பான கல்லீரல் சிறப்பாக இயங்க தினமும் 4 அல்லது 5 பூண்டுப் பற்களை நல்லெண்ணெயில் வதக்கி சாப்பிட்டு வந்தால் போதும். சமையலிலும் சேர்க்கவும்.

முட்டைக்கோஸ், கோலி பிளவர், ப்ராக்கோலி போன்ற இலைக காய்கறிகளில் மிகத்தரமான பீட்டா கரோட்டீன். செல்களைச் சிதைத்து நோய் எதிர்ப்புச் சக்தியை பலவீனமாக்கும் ப்ரீராடிக்கல் என்னும் திரவம் அதிகம் சுரக்காமல் தடுக்கும். எனவே தினமும் முட்டைக்கோஸ் சூப் அல்லது ப்ராக்கோலி சேர்த்து வரவும்.

வெள்ளை இரத்த அணுக்களை நன்கு உற்பத்தி செய்ய காளான் உணவுகள் உதவுகின்றன. இரத்தத்தில் வெள்ளை இரத்த அணுக்கள் குறைவதே நோய் எதிர்ப்புச் சக்தி பலவீனமாக ஆரம்பிக்கும் முதல்படி. தினமும் மூன்றரை அவுன்ஸ் பட்டன் காளான் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும். வெள்ளை இரத்த அணுக்கள் உற்பத்தியும் தடையின்றித் தொடரும்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்கும் அரிய உணவு இஞ்சி. இதனால் எல்லாவிதமான நச்சுக் கிருமிகளும் உடலிலிருந்து வெளியேறி விடும். ஜலதோஷம், குளிர்க் காய்ச்சல், ஒழுகும் மூக்கு முதலியவற்றை சுக்குக் கோப்பி கட்டுப்படுத்தும். சமையலிலும் இஞ்சி நன்கு சேர வேண்டும்.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதுடன் இரத்தத்தில் விஷப் பொருட்கள் தங்காமல் தடுப்பதால் சமையலில் மஞ்சள் அவசியம் சேர்க்கவேண்டும்.

சைவ உணவுக்காரர்களுக்குப் பெருமளவு புரதத்தைத் தரும் அதிசய உணவு பாதாம் பருப்பு. இதில் போதுமான அளவு அமினோ அமிலங்களும் இன்றியமையாத கொழுப்பு அமிலங்களும் நிறைந்துள்ளன. பாதாம் பருப்பில் உளள நார்ச்சத்து இன்சுலரின், குளுக்கோஸ் அளவையும் நன்கு பராமரிக்கின்றன. நோய் எதிர்ப்புச் சக்தியுடன் ஒல்லியாகவும் உடலுறுதியுடனும் மூளை ஆற்றலுடனும் வாழ பாதாம்பருப்பு நல்ல உணவு மருந்து.

ஒரேஞ்ச் நிறத்தில் உள்ள பழங்களும் காய்கறிகளும் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்க ப்ரீராடிக்கல் திரவத்தைக் கட்டுப்படுத்தி இளமையையும் புதுப்பித்துத் தரும். அந்த அளவிற்கு இந்த நிற உணவுகளான கரட். சர்க்கரை வள்ளிக்கிழங்கு. பசளிக்கீரை. பரங்கிக்காய் முதலியவற்றில் விற்றமின் ஏ தாராளமாக உள்ளது. தினமும் இரு ஆரஞ்சுப் பழங்கள் சாப்பிடவும்.


வயிற்றுக்கு நன்மை தரும் பக்றீரியா தயிரிலும் யோகட்டிலும் நிரம்பி வழிகின்றன. உணவு ஜீரணமாக நன்மை செய்யும் பக்றீரியாக்களை வயிற்றில் உற்பத்தி செய்கிறது தயிர். வயிற்றுப்போக்கு. சீதளபேதி முதலியவற்றைத் தடுப்பதுடன் தயிரில் உள்ள கல்சியம் உடலில் கொழுப்பு சேராமலும் தடை செய்வதால் ஒல்லியாக வாழவும் இதேவேளை தயிரை அவசியமான மருந்து போல தொடர்ந்து சாப்பிட்டு வரவும். தொற்றுநோய் அண்டாமல் இருக்க அடிக்கடி கையைக் கழுவவும். அசைவ உணவுகள் கொழுப்புச்சத்து மிகுந்தவையே. இனிப்பு நிறைந்த உணவுகள், அதிகளவு கோப்பி முதலியவறறைத் தவிர்த்தால் நோய் எதிர்ப்புச் சக்தி ஆற்றலுடன் திகழலாம். எல்லாவற்றையும் விட இரவில் குறைவாக உணவு அருந்தி ஏழு மணி நேரமாவது ஆழ்ந்து உறங்குவதும் நோய்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள உதவும்.

# எம் சூழல் காக்கும் தோழர்கள்

நாம் வாழும் இந்த பூமியோடும், மனித வாழ்க்கையோடும் பிற உயிர்களுக்கு இருக்கும் தொடர்பு என்பது மிக முக்கியமானது. நமக்கு தெரிந்ததெல்லாம் நேரடியாக, அதுவும் உயிரினங்களை அழித்து அடையும் நன்மைகள்தான். ஆனால் மறைமுகமாக நாம் உயிர் வாழவே இந்த உயிரினங்கள் மிகவும் அவசியமாக இருப்பதை நாம் அறிந்திருக்கிறோமா?

எறும்பிலிருந்து யானை வரை நாம் வாழும் இந்த பூமியின் சுற்றுசூழலுக்கும், நம் உயிருக்கும் பல வகையில் அதன் வழக்கமான நடவடிக்கைகள் மூலம் உதவுகின்றன. நமக்காக வேலை செய்யும் அந்த அழகான உயிரினங்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாமா....

## எறும்புகள் எனும் எந்திரன



© Can Stock Photo

அளவில் மிகச் சிறிய உயிர் தான். ஆனால் மிகச் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இயங்கும். "எறும்பு ஊர கல்லும் தேயும்" என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படிப்பட்ட எறும்புகள்தான். இந்த மண்ணில் இருக்கும் எந்தவொரு பொருளையும் சிதைத்து மண்ணோடு கலந்து மண்ணை வளமாக்குகின்றன. இவை ஏற்படுத்தும் துளைகளால் காற்றும் நீரும் மண்ணுக்குள் சென்று, அவற்றிற்கான ஊட்டச்சத்துக்களைக் கொடுத்து மண்ணின் வளத்தைக் கூட்டுகின்றன. விவசாயத்தின் இன்னொரு நண்பன் இந்த எறும்புதான். எறும்புகள் இருந்தால் உரங்களே தேவையில்லை. தண்ணீர் இல்லாத சமயத்திலும் எறும்புகள் கோதுமை விளைச்சலுக்கு 36வீதம் உதவுகின்றன.

இவை விதைகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்கின்றன. அவை கொண்டு செல்லும் இடங்கள் விதைகள் வளரக்கூடிய வளமான இடமாக இருப்பது இன்னொரு அதிசயம்.

ஆனால் எறும்புகளுக்கு நாம் வீடுகளில் மருந்து வைத்து சாகடிக்கிறோம். இதுவரை 12000க்கும் மேலான எறும்பு கூட்டங்கள் நம் பூமியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவற்றை நாம் அழித்துவிட்டோம். எவ்வளவு பெரிய பொருளாக இருந்தாலும் அவற்றைச் சிதைத்து தவிடு பொடியாக்க வல்ல இந்த எறும்புகளால் கூட பிளாஸ்டிக்கை ஒன்றும் செய்ய முடியவில்லை.

## கரையான் எனும் காப்பாளன்



நம் வீட்டில் பல பொருட்களை இவை சிதைத்திருக்கக் கூடும். அதற்காக நாம் அவற்றை வெறுத்திருக்கவும் கூடும். ஏனெனில் அவற்றிற்கு அது உங்கள் வீடு என்று தெரியாது. இவை இல்லாவிட்டால் இந்த உலகில் பில்லியன் டொலர் கணக்கில் செலவு செய்து நாம் சில வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும். கழிவுகளை உலகில் இல்லாமல் ஆக்குபவை இந்தக் கரையான்கள்தான். இவைகளால்தான் இறந்தவர்கள் இந்த உலகில் ஆன்மாக்களாக இருக்கிறார்கள். இல்லையென்றால் குப்பைகளாக இருந்திருப்பார்கள்.

## வெளவால் எனும் "பட்மான்"



இவை பெரும்பாலும் பேய்ப் படங்களில் பறந்து வருவதால், பயங்கரமான உயிராகவே பாவித்து வருகிறோம். ஆனால் உண்மை அப்படியல்ல. இயற்கை சமநிலைக்கு மிக முக்கியமான உயிராக வெளவால் இருந்து வருகிறது. 1200 வகை வெளவால்களில், மூன்று வகை வெளவால்கள் மட்டுமே இரத்தம் குடிப்பவை. அவற்றை சீண்டும் வரை அவை நம்மை எதுவும் செய்வதில்லை. மாறாக அவை மனிதனுக்கு உதவவே செய்கின்றன. முக்கியமாக மலேரியாவைப் பரப்பும் கொசுக்களைத் தின்று விடுகின்றன. ஒரு வெளவால் ஆயிரக்கணக்கான கொசுக்களை கொன்று தின்கிறது.

இவை பெரும்பாலான தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை தின்பவை. விவசாயிகள், வெளவாலுக்கு நன்றிக் கடன்பட்டவர்கள். இவை உண்ணும் பூச்சிகளால் மட்டுமே பயிர்கள் ஒருவகையில் காக்கப்படுகின்றன. விதைகளைப் பரப்புவதிலும் அவை முக்கிய பங்கு வகிக்கின்றன. தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கும் இவை உதவுகின்றன. ஆனால் இவை மரங்கள் இல்லையென்றால் அழிய நேரிடும்.

## தவளை எனும் தாராளன்



வாய் பெரிதாக உள்ள, சிரிச்ச முகமான தவளைகளைப் பெரிதாகவே நாம் மதிப்பதில்லை. அருவருக்கத்தக்க ஒன்றாகவே அவற்றைப் பார்க்கிறோம். பாடசாலைகளில் உடலைக் கிழித்து சோதனை செய்வதைக் காட்டிலும், அதிகமான உதவிகளை மனிதனுக்குச் செய்கின்றன தவளைகள்.

நம் இயற்கையின் ஆரோக்கியத்தைப் பற்றி அவ்வப்போது எச்சரிக்கை விடுபவை இவைதான். இவற்றின் மேற்புறத்தோல், சுற்றுச்சூழலில் இருந்து துகள்களை உறிஞ்சும் வகையில் உள்ளதால், பெரும்பாலான மாசுக்களை அவற்றின் திசுக்களின் மூலம் உறிஞ்சிக்கொள்கின்றன.


நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய தவளைகள்தான் தண்ணீரை கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்கின்றன. சுற்றுச்சூழல் சீர்கேடுகளுக்கு, முதலில் எதிர்வினையாற்றுபவை தவளைகள். அதை வைத்துத்தான் ஆராய்ச்சியாளர்கள் சீர்கேட்டுக்கான நடவடிக்கையை எடுப்பார்கள்.

## திறம் படைத்த திமிங்கிலங்கள்



உலக வெப்பமயமாதலினால் பனிக்கட்டிகள் உருகி, கடல் நீர் மட்டம் உயர்ந்து நிலநடுக்கம், சுனாமி, பருவ நிலை மாற்றம் போன்ற பேரழிவுகள் நடக்காமல் இருக்க, உலகம் முழுவதும் பேச்சுவார்த்தையும் ஆராய்ச்சிகளும் நடநதுகொண்டிருக்கின்றன. அந்த ஆராய்ச்சிகளுக்கு உதவுபவை இந்த திமிங்கிலங்கள். வெப்பமயமாதலின் முதல் பாதிப்பு ஆர்டிக் பகுதியில் இருந்துதான் தொடங்கும். அங்குள்ள திமிங்கிலங்களே அதைக் கண்காணிக்க, ஆராய்ச்சியாளர்களுக்கு உதவி வருகின்றன. வெப்பம் அதிகமாவதை அளவிட வோஷிங்டன் பல்கலைக் கழகம் தெர்மோ மீற்றர்களையும், சிறிய சாட்டிலைட் டிரான்ஸ்மிட்டர்களையும் திமிங்கிலத்திற்குள் செலுத்தி கண்காணித்து வருகின்றன. ஏனெனில் கடலுக்குள் மிக ஆழமாக செல்லக் கூடியவை திமிங்கிலங்கள்தான்.


## எலி எனும் எந்திரன்



FunFreeClipArt.com


எலிகள் மோப்பம் பிடிப்பதில் நாய்களைப் போலவே கில்லாடிகள். இராணுவங்களுக்கும், மருததுவ ஆராய்ச்சிகளுக்கும் எலிகள் என்றால் மிகவும் பிடிக்கும். பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் சக்தி வாயந்த வெடிகுண்டுகளைக் கண்டு பிடிக்க உதவுவதோடு, மனித குலத்துக்கான மருந்துகள் முதலில் எலிகளில்தான் சோதனை செய்யப்படுகின்றன.

## உயிர் தரும் தேனீக்கள்



சுற்றுச்சூழல் சீர்கேட்டால் முதலில் பாதிக்கப்படுவது தேனீக்கள் தான. இவை நுகர்வதிலும், சுவைபபதிலும், நிறங்களை அடையாளம் காணுவதிலும் திறமையானவை. மேலும் அவை தகவல்களைப் பகிர்ந்துகொள்வதிலும் புத்திசாலிகள். காற்றில் கலக்கும் விஷத்தைப் பற்றி எச்சரிக்கை கொடுப்பவை தேனீக்களே.

இந்த சிறு உயிரினங்கள் அனைத்தும், இயற்கையையும் சூழலையும் சமநிலையில் வைத்திருக்க தங்களுடைய இயல்பில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனிதர்களாகிய நாம்தான், நம்முடைய இயல்பிலிருந்து விலகி வெகுதொலைவில் வந்து விட்டோம். ஆனால் இந்த உயிரினங்களையாவது நாம் விட்டுவைக்கலாம.



# கவிதைக் கலசம்

## இசையான பெயர்

அவள் பெயரான இசை- அப்
பேரழகின் பக்கம் என் திசை
அவள் பேச்சிலில்லை வசை- அவளுக்காய்
ஏங்குது என் இதயத் தசை
இசை மீட்டும் பியானோ-என்
இதயம் கவர்ந்தது நீதானோ-உனக்கு
இணையில்லை இலியானா- என்றும்
உனக்காய் ஏங்குவதே என் நிலைதானா
நீளக் கருமையான அளகங்கள்
நீந்தும் கயலான நயனங்கள்-நீ
பேசும் ஓரம் கரும்புள்ளி மங்கல்
ஒரு வார்த்தையும் பேசா -உன்
மனமே செங்கல்
கண்களால் சாடுகிறாய் காதலை
கைகளால் சூடுகிறாய் ஆசையை-நான்
காதலை அள்ளி வருகையிலே- நீ
மௌனத்தில் தள்ளிச் செல்கிறாயே
நீ பாடும் மௌன ராகத்தில்
என் இதய இசை கானத்தில்
உன் பெயரே இசையாயிருக்க
இசைத்திடுமோடி வேறிசை
என் இதயந்தனிலே...

ஞா.கட்டைக்கவிதன்
நெடுந்தீவு

## மெய்யான கவி

பொய்கள் பல சொன்னேன்
கவியிலேயே போர்க்களம் செய்தேன்
மெய்யான உன்னன்பை
நெய்யாக ருசித்தேன்
கைப்பற்றிய காலம்தனை
காலத்தால் மறந்தேன்- என்
கண்திறவா நாளையும்
நையத்தனமாய் துறந்தேன் •
இன்று... என்
நயனங்கள் நனையுதம்மா
உனை என் கவியில் வடிக்க
என் வரிகள் தடுக்குதம்மா
உன் மெய்யான அன்பை
பொய்யான கவிகளில் தொடுக்க
என்றும் நீயே மெய்யான கவியுமாய்
இருப்பதனால்...

பீ.கிருஷிகன் பியோ
இளவாலை

## அறிவாயுதம்

காலங்கள் கடந்த பின்னும்
காயங்கள் ஆறவில்லை
கண்ணீர் காய்ந்த பின்னும்
கர்வங்கள் நீங்கவில்லை
எறிகணைகள் திசை மாறும்
எம் விழிப்பார்வை மாறாது
எரிமலைகளும் பொறுமை இழந்தால்
எரியத்தான் செய்யும்
கடலலை ஓய்வதில்லை
எம் கனவுகளும் ஓய்வதில்லை
எல்லைக்குள் எதிரிகளின் கூட்டம்
எதிர்த்துத் துரத்துவோம்
ஆயுதம் வேண்டாம்
அறிவெனும் ஆயுதம் மோதும்
துப்பாக்கி வேண்டாம்
துடிப்பான இதயங்கள் போதும்

த.டிலானி
மீசாலை

அறுகம்புல்
வெட்டிவிட வளராமல்
செத்துக்கிடக்கும்
சொட்டுநீர் வீழ்ந்துவிட்டால்
பற்றிப் படர்ந்து
எங்கும் பச்சை காட்டி நிற்கும்
வெட்டிவிட வளராமல் இருக்க
நாமொன்றும் பட்ட மரங்களல்ல
வேரில் தாயகக் கனவைப் புதைத்து
முளைத்தெழக் காத்திருக்கும்
அறுகம்புற்கள்
ஓர்நாள் முளைப்போம்
அப்போது எம்மினம் பற்றிப் படரும்
இது சர்வ நிச்சயம்

மாவை. நா.கஜேந்திரன்

## நேசித்த நினைவுகள்

எனது இனிய பயணத்தில் இணைந்த
முகமறியா சூரியனே
தயக்கத்துடன் தொடங்கிய
எனது நட்பில் இருந்த தயக்கத்தை
நீக்கியது உனது அன்பு...
எனக்கு பிடித்த அனைத்தையும்
பின்னே தள்ளி
உனக்கு பிடித்ததை முன்னே
கொண்டு வந்த எனது மனது
உனது புன்னகையை ரசிக்கும்
நான் உனது சண்டையை
அதை விட அதிகமாய் ரசிக்கிறேன்
யாருக்கும் கிடைக்காத அரிய
பொக்கிஷமாய் உன் அன்பு
இருப்பதாலேயே...
எனக்குக்கூட இப்பொழுது
கொஞ்சம் கர்வம் வந்து விட்டது

சி.சாமந்தி
பளை

# மௌனத்தின் தேடல்- 302



## மேலானது சிரிப்பே

தனிமை மிரட்டும்
முற்றம்
வறுமை வழியும்
தோற்றம்
புன்னகைக்கும்
சின்னப் பெண் வதனம்
எடுத்துச் சொல்ல
எத்தனிக்கும் எண்ணம்
இடுக்கண் வந்தால்...
சிந்தும் கண்ணீரை விட
சிரிப்பே மேல்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## கண்ணியம்கார்

வறுமையின் சாயல்...
பூசாத சுவரருகே
புனிதமாக சிரித்து நிற்கும்
பூவை நீ
வறுமையின் சாயலை
வழவமைத்துக் காட்டுகின்றாய்
கல்லும் முள்ளும்
கனத்த உலகமிது
கண்ணியமாய் வாழ வேண்டும்
கவனமிது கவனத்திற்கொள்

அணிஞ்சில்
புவபாலன்

## அதிசயம்

செங்கற்கள் அருகே
செந்தாமரை ஒன்று
தனிமையில் நின்று
புன்னகைப்பது ஏனோ?
தலையை இவள் வாரவில்லை
பூமாலை சூடவில்லை
அணிகலன்கள் ஏதுமில்லை
ஆனாலும் ஜொலிக்கின்றாள்
அதிசயம்தான் என்னவோ?

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## வீடும் விடியலும்

அகத்தின் அழகானது
முகத்தில் தெரிவது போல்
வறுமை நிலையிலும்
பொறுமை காட்டுவது
தனிச்சிறப்பாயினும்
மழையில் நனையாது
வெயிலில் காயாதிருக்க
இச்சிறுமியின் குடும்பத்தினர்
நிம்மதியாக வாழ்வதற்கு
வீட்டுத் திட்டங்கள்
விலகிப் போகாமல்
கை கொடுக்கவேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## புன்னகை

கள்ளமில்லா புன்னகை இது- உனக்கு
கடவுள் தந்த வரம் இது- உன்
புன்னகை போதும் தங்கையே
பொன் நகை இதற்கு ஈடாகுமா???

ச.மகி
யாழ்ப்பாணம்

## முகமூடியில்லா முகமழகு

சிவப்பில்லை
சிரிப்புண்டு
நகை இல்லை
புன்னகை உண்டு
முகமூடியில்லா முகமிது
முந்தமுடியாத அழகிது
உலக அழகிகள்
தோற்றுப்போகும்
உன்னூர் அழகி இவள்

தீபன்

## கவனம்

கல் மதில் பின்னாலே!
படம் பிடிப்பவர் முன்னாலே!
மகிழ்ச்சி தெரியுது
சிரிப்பிலே
வித்தியாலயம் சென்று
படிப்பவளே!
வித்தியாவின் விதி
வரவிடாதே! கவனம்!
புத்தியாக நடக்க
உலகம் புரிந்திடு

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## எதை சாதிக்கப் போகின்றாய்

பெண் பிள்ளைகள் சிரித்தால் போச்சு
என்ற முதுமொழியையறியாது
சிரித்துப் போஸ் கொடுத்து
வாழ்வை சீரழிக்க முற்படும்
சிங்கார சிட்டே...!
கல்வியிலே உயர்ந்து
கலங்கரை விளக்கமாய்
மற்றவர்கட்கு
வழிகாட்டுவதை விடுத்து
வாழ்க்கையில் புன்னகையால்
எதைத்தான் சாதிக்கப் போகின்றாய்?

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் -303



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.05.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -




# விவேகமான வெள்ளாடு

உழவர் ஒருவர் வீட்டில் வெள்ளாடும், செம்மறி ஆடும் இருந்தன. அவை இரண்டும் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. எங்கே சென்றாலும் ஒன்றாகவே சென்றன.

உழவருக்கு அவை நன்றாகவே உழைத்தன, ஆனாலும் அவன் சரியாக சாப்பாடு போடுவதில்லை. ஒரு நாள் தோட்டத்தில் விளையும் சுவையான செடிகளை அவை கடித்து சாப்பிட்டன. அதை கண்டு கோபம் கொண்ட உழவர், ஆத்திரமாக "நீங்கள் இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் உங்களைக் கொன்று விடுவேன். எங்காவது போய் விடுங்கள்" என்று விரட்டினார்.



இரண்டு ஆடுகளும் தங்கள் பொருள்களை ஒரு சாக்குப் பையில் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டன.

செம்மறி ஆடு வலிமை உள்ளதாக இருந்தது. ஆனால் கோழையாக இருந்தது.

மாறாக வெள்ளாடோ வீரத்துடன் விளங்கியது. ஆனால் வலிமை இல்லாமல் இருந்தது.சிறிது தூரம் நடந்த இரண்டும் ஒரு வயலை அடைந்தன. அங்கே இறந்து போன ஓநாய் ஒன்றின் தலை கிடந்தது.

அந்த ஓநாயின் தலையை எடுத்துக் கொள். நீதான் வலிமையுடன் இருக்கிறாய், என்றது வெள்ளாடு.

என்னால் முடியாது நீதான் வீரன். நீயே எடு, என்றது செம்மறி ஆடு.

இரண்டும் சேர்ந்து அந்த ஓநாயின் தலையைச் சாக்கிற்குள் போட்டன.

சாக்கைத் தூக்கிக் கொண்டு இரண்டும் நடந்தன. சிறிது தொலைவில் நெருப்பு வெளிச்சத்தை அவை பார்த்தன.

அந்த நெருப்பு எரிகின்ற இடத்திற்குப் போவோம். குளிருக்கு இதமாக இருக்கும். ஓநாய்களிடம் இருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளலாம், என்றது வெள்ளாடு.

இரண்டும் நெருப்பு இருந்த இடத்தை நோக்கி நடந்தன. அருகில் சென்றதும் அவை அதிர்ச்சி அடைந்தன.

அங்கே மூன்று ஓநாய்கள் உணவு சமைத்துக் கொண்டிருந்தன.

ஓநாய்கள் தங்களைப் பார்த்து விட்டன. தப்பிக்க வழியில்லை, என்பதை உணர்ந்தன ஆடுகள்.

நண்பர்களே! நீங்கள் நலந்தானே என்று தைரியத்துடன் கேட்டது வெள்ளாடு.

அச்சத்தால் செம்மறி ஆட்டின் கால்கள் நடுங்கின.

நண்பர்களா நாங்களா? எங்கள் உணவு தயார் ஆகட்டும். அதன் பிறகு உங்களைக் கவனிக்கிறோம்.

எங்கே ஓடிவிடப் போகிறீர்கள்? என்றது ஒரு ஓநாய்.

இவற்றிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது வெள்ளாடு.செம்மறி ஆடே! இன்று நாம் கொன்றோமே ஓநாய்கள். அவற்றில் ஒன்றின் தலையை எடுத்து இவர்களிடம் காட்டு. நாம் யார் என்பது புரியும்? என்று உரத்த குரலில் சொன்னது அது.

செம்மறி ஆட்டிற்கு அதன் திட்டம் புரிந்தது. சாக்கிற்குள் கையை விட்டு ஓநாயின் தலையை எடுத்தது.

ஏ! முட்டாள் ஆடே! பெரிய ஓநாயின் தலையை எடுத்துக் காட்டு என்றேன். நீ சிறிய தலையை எடுத்துக் காட்டுகிறாயே, பெரியதை எடு, என்று கத்தியது வெள்ளாடு.

அந்தத் தலையைச் சாக்கிற்குள் போட்டது செம்மறி ஆடு. மீண்டும் அதே தலையை வெளியே எடுத்துக் காட்டியது. கோபம் கொண்டது போல் நடித்தது வெள்ளாடு. இருக்கின்ற ஓநாய்த் தலைகளில் பெரியதை எடு. மீண்டும் நீ சிறிய தலைகளையே எடுத்துக் காட்டுகிறாய்.

இதைப் போட்டுவிட்டு பெரிய தலையாக எடு, என்று கத்தியது.

அந்தத் தலையைப் போட்டுவிட்டு அதே தலையை மீண்டும் வெளியே எடுத்தது செம்மறி ஆடு.

இதைப் பார்த்த மூன்று ஓநாய்களும் நடுங்கின.

இவை சாதாரண ஆடுகள் அல்ல. நீ அவற்றைக் கேலி செய்திருக்கக் கூடாது. சாக்கிற்குள் இருந்து ஒவ்வொரு ஓநாய்த் தலையாக எடுக்கின்றன, என்றது ஒரு ஓநாய். மூன்றும் சிறிது நேரம் அமைதியாக இருந்தன.

ஆடுகளைப் பார்த்து ஓநாய் ஒன்று, உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி, குழம்பு நன்றாகக் கொதிக்கிறது. இன்னும் சிறிது தண்ணீர் ஊற்ற வேண்டும், நான் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன், என்று புறப்பட்டது.

சிறிது நேரம் சென்றது. இரண்டாவது ஓநாய், அந்த ஓநாயிற்கு நம் அவசரமே தெரியாது. போய் எவ்வளவு நேரம் ஆகிறது? நான் சென்று அதை அழைத்துக் கொண்டு தண்ணீருடன் வருகிறேன், என்று புறப்பட்டது.

பரபரப்புடன் இருந்த மூன்றாவது ஓநாய், இருவரும் எங்கே தொலைந்தார்கள்? நான் சென்று அவர்களை அழைத்து வருகிறேன் என்று புறப்பட்டது. தப்பித்தோம் என்ற மகிழ்ச்சியில் ஓட்டம் பிடித்தது.

செம்மறி ஆடே! நம் திட்டம் வெற்றி பெற்று விட்டது. ஓநாய்களிடம் இருந்து தப்பித்து விட்டோம். விரைவாகச் சாப்பிட்டுவிட்டு இங்கிருந்து புறப்படுவோம். உண்மை தெரிந்து மீண்டும் அவை இங்கே வரும், என்றது வெள்ளாடு.

இரண்டும் அங்கிருந்த உணவை வயிறு முட்ட உண்டன. மகிழ்ச்சியுடன் ஏப்பம் விட்டுக் கொண்டே புறப்பட்டன.

ஓடிய மூன்று ஓநாய்களும் வழியில் சந்தித்தன.

ஆடுகளுக்குப் பயந்தா நாம் ஓடி வருவது? என்று கேட்டது ஒரு ஓநாய்.

நம்மை அவை ஏமாற்றி இருக்கின்றன. நாமும் ஏமாந்து விட்டோம், என்றது இன்னொரு ஓநாய்.

மூன்றாவது ஓநாய், நாம் உடனே அங்கு செல்வோம், அவற்றைக் கொன்று தின்போம், என்றது. மூன்று ஓநாய்களும் அங்கு வந்தன. உணவை உண்டு விட்டு இரண்டு ஆடுகளும் ஓடி விட்டதை அறிந்தன.

புத்திசாலித்தனத்தால் ஆடுகள் உயிர் தப்பியதை கண்டு ஏமாந்து போன ஓநாய்கள் பற்களை நறநறவென்று கடித்தன. பாவம் அவற்றால் வேறு என்ன செய்ய முடியும்?

உயிர்தப்பிய ஆடுகள் தன் எஜமானனை நினைத்துப் பார்த்தன, அவரிடம் இருந்தவரை உயிருக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை, எனவே அவரிடம் மன்னிப்பு கேட்டு மீண்டும் சேர்ந்து கொள்ளலாம் என்று தீர்மானித்தன.

அதே நேரத்தில் ஆடுகளை பிரிந்த உழவர் தன் தவறை உணர்ந்து ஆடுகளுக்கு நன்றாக தீனி போடுவது என்று தீர்மானித்து ஆடுகளை தேடி காட்டிற்கு வந்தார்.

எதிரே வந்த ஆடுகள் ஓடி போய் உழவரிடம் மன்னிப்பு கேட்டன, உழவரும் மன்னிப்பு கேட்டு, ஆடுகளை வீட்டிற்கு அழைத்து வந்து ருசியான இலைகளை கொடுத்தார் •

## வர்ணம் தீட்டலாம் வாங்க...











எனது மருமகன்கள் மூவர் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதும் புத்திமதி?

பேஸ்புக்கை பார்த்துக்கொண்டு புத்தகத்தை தொடாத நம் இளசுகளுக்கு புத்திமதி சொல்லுங்க?

தெறி, 24 இரண்டில் எது Best?

**நந்தகுமார் — மானிப்பாய்**

உயிர் கொடுத்த பெற்றோரை கவனிக்காத பிள்ளைகள் பற்றி?

இன்று நீ பெற்றோருக்குப் பிள்ளை. நாளை நீ பிள்ளைகளுக்குப் பெற்றோர் என்பதை மறந்து விடாதே.

**பிந்து — கரவெட்டி**

தெறி, 24 இரண்டில் எது Best?

நேற்று மிஞ்சிய இட்லியை உதிர்த்தி செய்த உப்புமாவா? புதுமைகளைப் புகுத்தி செய்த பீட்ஷாவா நன்றாக இருக்கும்?

தெறி இட்லியில் செய்த உப்புமா என்றால் 24 புதுமைகள் பல புகுத்திய பீட்ஷா.

**கரன் — கரணவாய்**

குடா நாட்டில் போதைப்பாவனை அதிகரித்து வருகிறதே?

என்ன செய்ய, இதைப்பற்றி எதிர்க்கட்சி கதிரையில் இருக்கும் எவருமே கதைக்கிறார்கள் இல்லையே. நாங்களே எங்கள் தலையில் மண்ணை அள்ளிப் போட்டோம். இன்று இளைஞர் வடிவில் போட்டுக் கொண்டிருக்கிறோம். பாவம் செய்த தமிழினம் மீட்சி பெற இறைவன் வழி செய்தால் உண்டு.

**பாலசிறிதரன் — குப்பிளான்**

எனது மருமகன்கள் மூவர் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதும் புத்திமதி?

பள்ளிக்கூடம் போகும் போது<br>
பாத்துப் போ தம்பி<br>
பல்சர் மோட்டார் சைக்கிளில்<br>
வரும் கள்ளர் உன்னுடன்<br>
தோழமை வைத்துக் கொள்ள<br>
எண்ணுவர் இசையாதே<br>
பாக்கை காட்டி பகட்டு பேசுவர்<br>
மசியாதே அவர்கள்<br>
வாள், கத்தி காட்டி உன்னை<br>
வீரனாக்க முற்படுவர் இசையாதே<br>
பள்ளிக் கூடம் செல்வது நீ<br>
படிப்பதற்கே படி படி<br>
தமிழினம் உன் கையில்<br>
என அவர் காதில் உறைக்க உரை.

**சதீஸ்வரன் — ஊரிக்காடு**

ஆங்கிலம் படிக்க, கதைக்க ஏன் கஷ்டமாக இருக்கிறது?

அண்மையில் அமெரிக்கா போய் வந்தவர் ஒருவர் கூறினார், அமெரிக்காவில் பிச்சைக்காரன் கூட ஆங்கிலத்தில் தான் பேசுகிறான் என்று. அட அறிவுக்கொழுந்தே அது அவர் தாய் மொழியடா.

**ரஜி — வல்வெட்டித்துறை**

நான் ஒரு திரைப்படம் எடுக்கப் போகிறேன். உங்களுக்கு ஏதும் கதாபாத்திரம் வேண்டுமா?

நடிச்சால் ஹீரோ. அதுவும் நயன்தாராவோட. அப்படி ஒரு கதை இருந்தால் சொல்லுங்களேன்.

அம்மா:-உடம்பு நல்லாத்தானே இருக்கு எதுக்கு பிச்சை எடுக்குறே?<br>
பிச்சைக்காரன்:-முடிஞ்சா தர்மம் போடுங்க சும்மா உடம்பை பாத்து கண்ணு வைக்காதீங்க!



**புகழ் — வல்வெட்டித்துறை**

சூரியாவின் 24 பற்றி உங்கள் கருத்து?

தமிழ் சினிமாவில் புதுமைகள் வரவேற்கத்தக்கது. அரைத்த மாவை அரைக்கும் தமிழ்ச் சினிமாவில் சூரியாவின் இந்தப் புதுமை ஆரோக்கிய மானதே.

**மித்திலன் — பண்டத்தரிப்பு**

ஐ.பி.எல்லில் டோனியின் புனே அணியின் தோல்விக்குக் காரணம்?

சென்னை சுப்பர் கிங்ஸ் என்கின்ற பலம் புனே அணியிடம் இல்லை. சென்னை வீரர்களின் பிரிவு புனேயில் தோல்வியில் முடிந்து விட்டது.

**தர்சன் — அச்சுவேலி**

லவ் பண்ணும் போது ஏன் ரோஜாப்பூ கொடுக்கிறாங்க? ஏன் மல்லிகைப் பூ கொடுத்தால் என்ன?

மண்டு மண்டு. மல்லிகைப்பூ லவ் பண்ணும் போது கொடுக்கக்கூடாதுடா. அது கலியாணம் முடிஞ்சதுக்கு அப்ப்புறம்...

**நிஷாந்தன் — சுன்னாகம்**

உண்மையான அன்பு எப்படிப்பட்டது?

அப்பத்தை புட்டுக்காட்ட சொன்னால் வியாசரால் என்ன செய்ய முடியும்.

**கிருஷா — வரணி**

பழிவாங்குவது என்பதன் அர்த்தம் என்ன?

அந்நியன், ஐ படங்களை பாருங்களேன் புரியும்.

**அருண் — மிருசுவில்**

பேஸ்புக்கை பார்த்துக்கொண்டு புத்தகத்தை தொடாத நம் இளசுகளுக்கு புத்திமதி சொல்லுங்க?

தம்பிகளா! முகப்புத்தகத்தை பார்த்துக் கொண்டு பாடப் புத்தகத்தை படிக்காமல் விடுவாயாயின் நாளை உன் வாழ்க்கைப் புத்தகத்தை இழந்து நடு வீதியில் நிற்க வேண்டி வரும் கவனம்.

**மது — கண்டி**

காதலிப்பது குற்றமா?

அடுத்தவன் மனைவியைக் காதலிப்பது குற்றம்.

**நிஷி — யாழ்ப்பாணம்**

திறனை வளர்த்துக் கொள்வது எப்படி?

சுடச் சுடத்தான் தங்கம் மின்னுகிறது. சுட்ட பிறகு தான் இரும்பு இசைந்து கத்தி, கோடரி ஆகிறது. வாழ்வெனும் பட்டறையில் பட்ட பாடுகள் எல்லாம் நீ உன்னை மெருகேற்றவே என்பதை புரிந்து கொள். படுவாய், பட்டுணர்வாய் அந்த பட்டுணர்வு உன்னை மனிதனாக்கும்.

**ரேகா — முல்லைத்தீவு**

ஒரு பையன் ஒரு பெண்ணிடம் காதலைச் சொல்ல, அதற்கு அந்தப் பெண் தெரியாது எனப் பதில் சொன்னா என்ன அர்த்தம்?

உன்னைக் காதலித்து விட்டு இரண்டு வருடங்களில் உன்னைத் தெரியாது என்று சொல்லப்போவதை இப்போ சொல்லியிருக்கா அவ்வளதான்.

**பகி — தெல்லிப்பழை**

இரண்டு பெண்களை ஒரே நேரத்தில் காதல் செய்யும் ஆண்கள் பற்றி?

த்ரிஷா இல்லையென்றால் நயன்தாரா படம் பாத்திட்டார் போல

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கம் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றமையால் சற்றுக் காலம் தாழ்த்தியே மாநாட்டிற்கு வருவார். மாநாட்டிற்குப் பண்டிதர் பரமலிங்கம் தலைமை தாங்கினார்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாடு ஆரம்பமாகும் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**பண்டிதர்:** கடந்த சில நாட்களாக இயற்கை சீற்றம் கொண்டுள்ளது. கடும் மழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இறைவன் துணை செய்யப் பிரார்த்திக்கின்றோம்.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைவரும் உதவி செய்து அவர்களின் கஷ்டங்களைப் போக்கவேணும்.

இன, மத, மொழி என்ற பேதங் கடந்து இந்த உதவியைச் செய்ய அனைவரும் முன்வருவது அவசியம்.

(பண்டிதர் இப்படிக் கூறியதும் மாநாட்டில் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்கும் பொருட்டு வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்)

**வாத்தியார்:** இயற்கையின் சீற்றம் இல்லாத ஒரு நாடு என்று கூறக்கூடிய இலங்கைத் திருநாட்டில் இப்ப அடிக்கடி இயற்கை தனது சீற்றத்தைக் காட்டுது.

இது தொடர்பில ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த வேணும். அதிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இறுதி யுத்தம் நடந்த மே மாதத்தில இயற்கை சீற்றம் கொள்வது எங்கட உயிரிழந்த ஆத்மாக்களின்ர பரிதவிப்போ என்று எண்ணத் தோன்றுது.

ஆகையால போரில உயிரிழந்தவர்களின்ர ஆத்ம சாந்திக்காக நாடு பூராகவும் பிரார்த்தனை வழிபாடு செய்யவேணும் போல.

**மூப்பர்:** வாத்தியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. அவல மரணங்கள் நடந்த மண்ணல்லோ. ஆத்மபலம் சாதாரணமானதல்ல என்பதை இப்ப அறிவியல் உலகம் ஏற்றுள்ளது.

வன்னிப் போரில உயிரிழந்த எத்தனையோ பேருக்கு இறுதிக் கடன் கூடச் செய்யப்படவில்லை. இறுதிக் கடன் செய்வதற்கே ஆளில்லாமல் போன துன்பமும் இருக்குது.

ஆகையால உயிரிழந்தவர்களின்ர ஆத்ம ஈடேற்றத்திற்காக ஒரு நாளைத் தெரிவு செய்து வருடந் தோறும் வழிபாடு செய்ய வேணும்.



**கங்காணி:** உண்மைதான் மூப்பர். இந்து சமயத்தில பிதிர்க்கடன் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. ஆகையால உயிரிழந்த எங்கள் உறவுகளின்ர ஆத்ம சாந்திக்காக மிகப்பெரியதொரு யாகம் ஒன்றை நடத்தவேணும் . எங்கட அந்தணச் சிவாச்சாரியர்களும் சைவக்குருமாரும் சேர்ந்து இந்த யாகத்தை நடத்தினால் நல்லது.

ஒரு பெரும் மகா யாகத்தை கீரிமலை தீர்த்தக்கரையில செய்தால் இன்னும் விசேசம்.

(கங்காணியார் இப்படிக்கூறும்போது, விதானையார் விசுவலிங்கம் கவலையும் கோபமும் முகத்தில் வெளிப்பட ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார். முள்ளிவாய்க்காலில தன்ர மகனைப் பறிகொடுத்த விதானையாருக்கு அந்த நினைவுகள் தாளாத் வேதனையைக் கொடுத்திருக்கும் என்பது நியாயம்தான். அதற்காக முகத்தில கோபம் ஏன் தெரியவேணும்... ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் தமக்குள் சிந்தித்துக் கொண்டனர். மனதில் தோன்றிய குழப்பத்தைத் தீர்த்துவிட நினைத்த பண்டிதர் விதானையாரை நோக்கினார்)

**பண்டிதர்:** என்ன விதானையார். முள்ளிவாய்க்காலில நினைவேந்தல் எப்படி இருந்தது...

(பண்டிதர் மெல்லக் குரல் கொடுத்தார்)

**விதானையார்:** ஓம் பண்டிதர் உறவுகளைப் பறிகொடுத்த உறவுகள் அழுத அழுகை, எங்கட இழப்பின் வலியை மீளவும் ஒரு முறை சுண்டி இழுத்தது.

என்ன செய்யிறது. நாங்கள் தமிழர். எங்களுக்கு அழுகிற உரிமைகூட இருக்கவில்லை. ஏதோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்ர உத்தரவில எங்கட உறவுகளை நினைவுகூர முடியுது. அதனால நிம்மதியாய்ப்போய் எங்கட உறவுகளை நினைத்து அழுதுபோட்டு வந்தம். ஆனாலும் எங்கட அரசியல் ஆட்களைத் திருத்தவே முடியாது.

**வாத்தியார்:** ஏன் விதானையார்? முள்ளிவாய்க்காலிலும் தங்கட குழப்பங்களை விளைவித்தவியளோ.

**விதானையார்:** ஓம் வாத்தியார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாதான் உரையாற்றுவது என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்திருந்தவியள்.

அந்த நேரத்தில மாவை சேனாதிராசா எம்.பியும் அங்க வந்திட்டார். மாவை சேனாதிராசா எம்.பி. பேச வேணும் என்று சிலர் சொல்ல, அப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேணும் என்று கருத்துக் கிளம்ப எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசுவதென்று முடிவு செய்யப்பட்டது. இதால நேரம் கடந்து போயிற்று. அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் நிகழ்ச்சி முடிய முதலே வீட்டை வெளிக்கிட்டினமாம் என்று கதை.

**கங்காணி:** இதுதான் சொல்லுறது இழப்போட சம்பந்தப்படாதவர்கள் மாகாண சபை உறுப்பினர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தா அவையள் இறந்தவன்-இழந்தவன் அதுபற்றி எதுவும் சிந்திக்கமாட்டினம். தங்கட அரசியல் இலாபம், அரசியல் குரோதம் இது பற்றித்தான் நினைப்பினம்.

**மூப்பர்:** அதுசரி விதானையார் எங்கட சம்பந்தர் ஐயா முள்ளிவாய்க்கால் பக்கம் வந்தவரோ.

**விதானையார்:** அந்தப் பக்கமே அவர் வரவில்லை.

**பண்டிதர்:** உடல்நிலை சரியில்லாமல் இருந்திருக்கும்.

**கங்காணி:** ஓமோம் வயது போன காலம், கோபம் மூக்கில நிற்கிற வயதல்லோ.

**மூப்பர்:** கங்காணியார் நீங்கள் சொல்லுறதை நான் ஆமோதிக்கிறன். ஆனால்...

**வாத்தியார்:** என்ன மூப்பர் ஆனால் என்று இழுக்கிறியள். சொல்ல வந்ததை துணிச்சலாகச் சொல்லுங்க.

**மூப்பர்:** அதென்னென்டால் வாத்தியார் சம்பந்தர் ஐயா முள்ளிவாய்க்காலுக்கு வர அவற்ற உடல் நலம் இடம்கொடுத்திருக்காது. ஆனால் ஒரு செய்தியாவது விட்டிருக்கலாமல்லோ.

**பண்டிதர்:** மூப்பர் உடல் நலம் சரியில்லை எண்டால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில தன்ர அனுதாபத்தை, ஆறுதலை எழுதுறதும் முடியாமல் தானே இருந்திருக்கும்.

**மூப்பர்:** அப்ப பண்டிதர் ஐயா வெசாக் பண்டிகைக்கு சம்பந்தர் ஐயா வாழ்த்துச் செய்தி விட்டது என்ன மாதிரியாம்.


**கங்காணி:** மூப்பர் இதென்ன கதை. அவர் எதிர்க்கட்சித் தலைவரல்லோ. இலங்கையில எதிர்க்கட்சித் தலைவர் எண்டால் குறைஞ்சது ஐம்பது வீத சிங்களவராகவும் ஐம்பது வீத பௌத்தராகவும் இருக்க வேணும். அந்த நினைப்பு ஓட்டமெற்றிக்கா சம்பந்தர் ஐயாவுக்கு வந்திருக்கும். அதுதான் அவர் வெசாக் வாழ்த்துச்செய்தி எழுதி அனுப்பியிருக்கிறார்.

**வாத்தியார்:** ஓமோம் பதவி கிடைக்கும்வரை சுத்தத் தமிழன். பதவி கிடைச்சிட்டால் இங்க வால்; அங்க தலை.

**மூப்பர்:** வாத்தியார் சரியாச் சொன்னீர்கள். இப்படி மூப்பர் கூற ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# உடலையும் உயிரையும் உருக்கிய நினைவேந்தல்


குருஷேத்திரம்

2009 மே தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத காலம். விடுதலைப் போராட்டம் முடிவுற்ற காலம் என்பதால் மட்டுமல்ல, தமிழ் மக்கள் கதறக் கதறக் கொல்லப்பட்ட காலம் என்பதாலும் அது தமிழர் வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத காலமாகப் பதிவாகியுள்ளது.

இந்தப் பதிவு மிக நீண்ட காலத்திற்கு துயர் நிறைந்ததாக நினைவுகூரப்படும்.

சிலவேளைகளில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் ஆட்சிப் பீடத்தில் இருக்கக்கூடியவர்கள் தமிழ்மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கக்கூடியதாக அமைந்தாலும் அது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.


எது எப்படியாயினும் இன்னும் நூறு ஆண்டுகளுக்கேனும் வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடூரத்தின் அனுபவிப்புகளை நேரில் அனுபவித்தவர்கள் வாழக் கூடியதான சந்தர்ப்பம் இருப்பதால் காலத்திற்குக் காலம் வன்னி அவலத்தின் வலி தமிழ்மக்களை வேதனைப்படுத்தவே செய்யும்.

எது எப்படியாயினும் ஏழு ஆண்டுகள் நிறைவுற்ற அந்தக் கொடூரத்தின் நினைவுகள் இன்னமும் நேற்று நடந்தது போல் இதயத்தைச் சுட்டெரிக்கின்றது. அந்தளவிற்கு



முள்ளிவாய்க்காலில் நடந்த கொடூரத்தின் காட்சிகள் மனக்கண் முன் அப்படியே நிழலாடுகின்றன.


கூடவே நந்திக்கடல்; நடந்தவற்றின் சாட்சியமாக சூரிய சந்திரர் உள்ளவரை நிலைபெற்றிருக்கும்.



ஆக, தமிழர் வரலாற்றில் முள்ளிவாய்க்கால், புனித நினைவேந்தல் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படவும் வருங்காலப் போரியல் ஆய்வாளர்கள் முள்ளிவாய்க்காலுக்கு வருகின்ற வரலாறுகளும் நிகழ்வுறும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த உண்மைகளுக்கு மத்தியில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு இலங்கை அரசு விதித்துவந்த தடை ஒரு மனிதப் பண்பாளரால் நீக்கப்பட்டது என்பது தமிழ்மக்களின் கொன்றொழிப்பு சிங்கள மக்களிடமும் கழிவிரக்கத்தை ஏற்படுத்தியுள்ளமைக்குச் சான்றாதாரம் எனக் கொள்ளலாம்.

## தோல்வியைத் தந்த முள்ளிவாய்க்காலே வெற்றியையும் தரப்போகிறது



ஆம், இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை மனிதாபிமானத்துடன் பார்த்துள்ளார்.

வன்னிப்போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவது தமிழ்மக்களின் அடிப்படை உரிமை என்பதை இந்த நாட்டின் ஜனாதிபதி ஏற்றுள்ளமை மனிதப் பண்பு கொஞ்சமேனும் தலைநிமிர்த்தியுள்ளது என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது.

நாம் இதைக்கூறுவது ஜனாதிபதி மைத்திரிக்கான புகழ்பாடலாக யாரும் கருதிவிடக் கூடாது. மாறாக இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டுகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு போர் நடவடிக்கை போலத் தடை செய்தார்.

மே 18 நெருங்குகிறது என்றவுடனேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் படைத்தரப்பு முற்றுகையிட்டு விடும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் தீபம் ஏற்றி நினைவேந்தல் நடந்து விடலாகாது என்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விசேட விடுமுறை வழங்கிய சம்பவங்களும் உண்டு.

மே 18 இற்காக வடபுலம் முழுமையிலும் இராணுவம் குவிக்கப்பட்டு வீதிகளில் வருவோர் போவோர் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது போரில் உயிரிழந்த விடுதலைப்புலிப் போராளிகளுக்கான நினைவுகூரல் என்றவாறு தென்பகுதியில் பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி மைத்திரியோ போர் வெற்றி மகிழ்வைத் தந்தாலும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் உயிரிழந்தமை வேதனைக்குரியது எனக் கூறியதற்குள் அப்பாவித் தமிழ்மக்கள் வன்னிப் போரில் கொல்லப்பட்டனர் என்ற உண்மை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மை தெளிவுபடுத்தப்பட்டதால் தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடியை மகிந்த தரப்பு தூக்கிப் பிடிக்க முடியாமல் போயிற்று.

அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வன்னி யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்ததை ஏற்று அதைப் பகிரங்கப்படுத்தியதுடன் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தல்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலைத் தரும் என்பதாலும் தான் நினைவேந்தலுக்கு தடைவிதிப்பது மனிதப்பண்பன்று எனக் கருதிக் கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த அணுகுமுறை மே 18 என்றால் ஒருபயப்பீதியான நாள் என்ற தென்பகுதி மக்களின் நினைப்பைக் கலைத்து அது ஒரு துன்பத்திற்குரிய- உயிரிழந்தவர்களை நினைப்பதற்குரிய நாள் என்று மாற்றுவித்தார்.

வழமையில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தமிழர் பகுதியில் மீண்டும் பயங்கரவாதம் தளைப்பதற்கான சம்பவங்களாகவே பிரசாரம் செய்யப்படும்.

தென்பகுதியில் இருக்கக்கூடிய பேரினவாத ஊடகங்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இரக்கமற்ற முறையில் விமர்சிக்கும். இதனால் தமிழ்மக்கள் தொடர்பில் சிங்கள மக்களின் மனநிலை எதிர்த்தன்மையானதாகவே தக்கவைக்கப்படும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரியின் அணுகுமுறை இறுக்கமான நிலைமைகளை மாற்றியமைத்தது.

சில வேளைகளில் முள்ளிவாய்க்காலில் நடந்த நினைவேந்தல், அங்கு கூடிய உறவுகள் கதறி அழுத காட்சிகள்,

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்களுக்குக் கொடுமை செய்து அவர்களை வதைத்துள்ளனர் என்ற உண்மை சிங்கள மக்களால் உணரப்படுவதற்கும் வாய்ப்பாக அமையலாம்.

உடலையும் உயிரையும் உருக்கிய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரினவாதிகளை என்றோ ஒருநாள் உருக வைக்கும். இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ளும்.

ஆம், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் தோல்வி என்ற முடிவைத் தந்த முள்ளிவாய்க்கால் தான் தமிழ்மக்களுக்கான வெற்றியையும் தரப்போகிறது என்பது சர்வ நிச்சயம்.

விதுரன்



# ஸ்கூட்டர் ஓட்டும் பெண்ணே! இந்த யோசனையைக் கேளு கண்ணே!



❖பைக்கை/ஸ்கூட்டரை சென்டர் ஸ்டாண்ட் போட நிறையப் பேர் சிரமப்படுகிறீர்கள் என்பது என் கண்ணுக்கு கண்ணாடி மாதிரி அப்படியே தெரியுது . ஸ்டாண்டில் ஏறி நின்று முழுப் பலத்தையும் காட்டி ஸ்டாண்டுக்கு செலவு வைக்காதீர்கள் . லேசாக அழுத்தம் கொடுத்தாலே போதும்.ஸ்கூட்டர் அதுவாகவே பின் பக்கம் சென்று 'ஜம்'முனு உட்கார்ந்து கொள்ளும்.

❖ 'வெயிட்டான வண்டிகளை பார்க் பண்றது ரொம்பக் கஷ்டமா இருக்கு' என்று ஃபீல் பண்ணும் பெண்கள், பைக்கை பின்பக்கம் எடுக்கும்போது, இடுப்பால் தாங்கிப் பிடித்தால் எவ்வளவு எடை இருந்தாலும் தெரியாது. ஹேண்ட் பாரை மட்டும் பிடித்து நகர்த்தினால்தான், பலன்ஸ் கிடைக்காமல் கீழே விழுந்து அருகில் நிற்கும் வண்டிகள் சீட்டு கட்டு போல சரிந்து விழ வாய்ப்புண்டு.

❖ எப்போதுமே சைடு கண்ணாடி பார்க்காமல், சிக்னல் போடாமல் திரும்பாதீர்கள்! திரும்பும் முன் சிக்னல் செய்வது மிக முக்கியம் பெண்களே.. அதேபோல் சடர்ன் பிரேக் போடாதீர்கள். இது உங்களுக்கும் ஆபத்து. பின்னால் வரும் அனைவருக்கும் பேராபத்து.

❖ வீதியில் எப்போதுமே நடுவில் செல்ல வேண்டாம். இதனால் பெரிய வாகனங்களை ஓட்டி வருபவர்கள் செம கடுப்பாக வாய்ப்புள்ளது. எப்போதும் பெரியவங்களைப் பகைச்சுக்கக் கூடாது ஓ.கே...

❖ஸ்கூட்டர் கீழே விழுந்தால், ஏர்லாக் ஆகிவிடும், உடனே ஸ்டார்ட் ஆகாது. அதனால், பதற்றப்படாமல், ஐந்து நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்து, முடிந்தால் ஐஸ்கிறீம் சாப்பிட்டுவிட்டு ஸ்டார்ட் செய்து பாருங்கள்.

❖ வீதியில் செல்லும்போது ஏனைய வாகனங்களை ஒட்டியபடி முந்தாதீர்கள் . முக்கியமாக இடதுபுறம் ஓவர்டேக் கூடவே கூடாது.ஓவர்டேக் உடம்புக்கு ஆகாது.

❖ மோட்டார் சைக்கிள் நிறுத்துவதற்கு ரொம்ப தூரம் முன்னரே கால்கள் இரண்டையும் அகல விரித்துக் கொண்டே வராதீர்கள்! காமெடியாக இருக்கும் என்பதையும் தாண்டி, கால்களை பின்னால் வரும் வண்டிகள் இடித்துவிடவும் வாய்ப்புள்ளது.

❖ புடைவைத் தலைப்பு, சுடிதார் ஷோல் போன்றவற்றை மிகவும் கவனமாக X ஸ்டைலில் கழுத்தில் கட்டி விடுங்கள். சுப்பர்மேன் போல் பறக்க விட்டுக் கொண்டு செல்லாதீர்கள்.

❖ காதில் ஹெட்போன் மாட்டுவதைத் தவிர்த்துவிட்டு, முன்னால் செல்லும் இரண்டு அல்லது மூன்று வாகனங்களை மட்டும் கவனம் வைத்து ஓட்டுங்கள். விபத்துக்கு வாய்ப்பே இல்லை. வீட்டுக்குப்போய்க்கூட பாட்டுக் கேட்கலாம்...

❖ ரொம்ப முக்கியம் - ஹெல்மெட் உங்கள் அழகிய முகத்துக்கு ஸ்டைலான ஹெல்மெட் அநாவசியம். உங்கள் தலையை அடிபட்டால் பாதுக்காக்கும் ஹெல்மெட்தான் அவசியம் தோழிகளே!



மனைவி:–உங்களுக்கு ராணி என்று ஏற்கனவே ஒரு மனைவி இருக்கான்னு கல்யாணத்துக்கு முன்பே ஏன் எங்கிட்ட சொல்லலை...
கணவன்:–சொன்னேனே... மறந்துட்டியா...
மனைவி:– எப்போ?
கணவன்:– உன்னை ராணி மாதிரி வச்சு காப்பாத்துவன் என்று சொல்லலை...
மனைவி:–????????




வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்

"பல் வலியால உங்க மனைவி வாயை திறக்க முடியாம நாலு நாளா இருந்திருக்காங்க நீங்க என்ன பண்ணிக்கிட்டிருந்தீங்க?"
"மனவுக்குள்ளே சந்தோசப்பட்டுக் கிட்டு இருந்தேன்"



# ஃபேஸ்புக்; பெண்களே உசார்

இப்போது இருக்கும் டிஜிற்றல் உலகில் வங்கியில் கணக்கில்லாத மனிதர்கள் கூட இருக்கலாம், ஆனால் முகநூலில் கணக்கில்லாத மனிதர்களைக் காண முடியாது.

## ஃப்ரெண்ட் ரெக்வெஸ்ட்

இதுதான் பிரச்சினை ஆரம்பமாகும் இடம். நாம் ஒருவரை நண்பர்கள் லிஸ்ட்டில் சேர்க்கும் முன், முதலில் அவரது புரொஃபைல் புகைப்படம், நண்பர்கள் லிஸ்ட், அவர் பதிவிடும் ஸ்டேட்டஸ்கள் எல்லாவற்றையும் கவனியுங்கள். பெண்களைக் குறித்து தவறாகவோ அல்லது குறையாகவோ, அல்லது கோபமாகவோ ஸ்டேட்டஸ் போட்டால் யோசிக்காமல் அவரை நிராகரிக்கலாம். உங்கள் நண்பர்களுக்கு அவர் கொடுக்கும் கமென்ட்டுகளையும் கவனிப்பது அவசியம். இல்லையேல் நீங்கள் போடும் கமென்ட்டுகள் அல்லது புகைப்படங்களுக்குக் கொஞ்சம் நக்கலாகவோ அல்லது மனதைப் புண்படுத்தும்படியோ கமென்ட்டுகள் வருவதைத் தவிர்க்க முடியாது.

## மெசேஜ் பூதம்

அலுவலகத்தில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்பு மெசேஜ் பொக்ஸை முடிந்தவரை ஆஃப் செய்து வைத்து விடுங்கள். "ஹாய் பேபி", " ஹலோ டியர்" என வரும் நல்லுள்ளங்களை மியூட்டில் வைத்து விடுவது அதைவிட நல்லது. அவர்களைக்கூட மன்னிக்கலாம். சில மிக நல்லவர்கள், டக்கென மோசமான புகைப்படங்களையோ அல்லது வீடியோக்களையோ பகிர்ந்துவிடுவார்கள். பெண்களைப் பொறுத்தவரை இதற்கு ஒரே தீர்வு மெசேஜ்களை, முடிந்தவரை பொது இடங்களில் ஓபன் செய்யாமல் இருப்பதுதான். சில மோசமான இன்பொக்ஸ் மக்களின் ஃப்ரெண்ட் லிஸ்டை கட் செய்வது நல்லது. வேண்டுமானால் மெசேஜை மட்டும் ப்ளாக் செய்யலாம்

## கமென்ட்டில் வரும் கலகம்

நீங்கள் போடும் ஸ்டேட்டஸ்களில்கூட உங்கள் மனதைப் புண்படுத்தும்படி கமென்ட்கள் கொடுக்க முடியும். முடிந்த வரை புரட்சி, போர் என நீங்கள் போடும் ஸ்டேட்டஸ்களைக் கவனிப்பிலேயே வைத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் பல்ப் வாங்கக் கூடும்.

## ஷேரிங்


நாம் சொல்லும் கருத்தை மற்றவர்கள் ஷேர் செய்கிறார்கள் எனில், அதற்கு என்ன கருத்தை அவர்கள் சொல்கிறார்கள் என செக் செய்யுங்கள். எல்லாவற்றிற்கும் மேல் உங்கள் புரொஃபைல் புகைப்படங்களையோ அல்லது செல்ஃபிக்களையோ யாரேனும் ஷேர் செய்தால், உடனே சந்தேகப்படுங்கள். சற்றே அந்த ஆசாமியின் அக்கவுன்ட்டைப் பார்த்தால், உங்களைப்போன்றே பல பெண்களின் புகைப் படங்களைப் பகிர்ந்திருப்பார்.

அப்படி இருந்தால் கேள்வியே இல்லாமல் அந்த நபரை அன்ஃப்ரெண்ட் செய்யுங்கள். அன்ஃப்ரெண்ட் செய்த அடுத்த கணம் உங்கள் புகைப்படம் அவரது ஸ்டேட்டஸில் இருந்து மறைந்து விடும். காரணம் அவர்களுக்கு வேலையே இப்படி சில பெண்களின் புகைப்படங்களை ஷேர் செய்து லைக்குகளையும், கமென்ட்டுகளையும் பெறுவதே! மேலும் அப்படிப்பட்ட நபர்களைப் பின்தொடர்பவர்களும் அதே நோக்கத்துடன் இருப்பார்கள் என்பதால், உங்களுக்கு இன்பொக்ஸ்களிலும் பிரச்சினைகள் எழ வாய்ப்பு உள்ளன.

## நாம் செய்யும் தவறு

ஒரு நபர் ஃப்ரெண்ட் ரெக்வெஸ்ட் கொடுத்து, அதிகபட்சம் இரண்டு நாட்களுக்குள் "ஹாய்" என அடித்து விடுவார்கள். ஆனால், அந்தக் கால இடைவெளியை நாம் தருவதே இல்லை. ரெக்வெஸ்ட் கொடுத்த அடுத்த நொடி, ஓகே கொடுத்து விடுகிறோம். அதுதான் பிரச்சினை. அதே சமயம் யாரையும் நாம் திருத்த முடியாது. ஒரு நபர் நம்மைத் தவறாகப் பாவித்து சாட் செய்கிறார் எனில், கேட்காமல் ப்ளாக் செய்வதே நல்லது. அதை விடுத்து அறிவுரை கூறுகிறேன், நல்வழிப்படுத்துகிறேன் என ஆரம்பித்தால் பஞ்சாயத்துதான். முடிந்தவரை அதைத் தவிர்த்து விடுங்கள்.

***தீ என்றால் சுடத்தான் செய்யும். முடிந்தவரை எட்ட நிற்பது சிறப்பு.***



# டிவில்லியர்ஸ் -கோலியின் தெறிக்கும் இருபது-20 சாதனை துளிகள்



இன்று கிரிக்கெட் உலகின் தலை சிறந்த இரண்டு பட்ஸ்மேன்கள் என்றால், அது நம் விராட் கோலியும், தென்னாபிரிக்காவின் டிவில்லியர்சும்தான். இருவரும் இரு வேறு வகையான பட்ஸ்மேன்கள்.

கோலி ஒரு கிளாசிக்கல் பிளேயர். டிவில்லியர்சோ அனைத்தும் கலந்த கலவை. அவர் ஒரு ஃப்யூசன் மியூசிக் போன்றவர். கிளாசிக்கல் ஷொட்கள் மட்டுமல்லாது, பிற பட்ஸ்மேன்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஷொட்களை அடிக்க வல்லவர். இருவரும் வேறு வேறு அணிகளில் இருந்தாலே ரன்கள் மழையாய்ப் பொழியும். ஒரே அணியில் இருந்தால் சொல்லவா வேண்டும். இருவரும் இணைந்து இந்த ஐ.பி.எல் தொடரில் செய்யும் அட்டகாசங்களால், பல சாதனைகள் முறியடிக்கப்பட்டும், பல சாதனைகள் புதிதாய் உருவான வண்ணமும் இருக்கின்றன.

2011ம் ஆண்டு, நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் பெங்களூர் அணியால் வாங்கப்பட்டார் பெஞ்சமின் டிவில்லியர்ஸ். ஏற்கனவே கோலியைத் தக்கவைத்திருந்த அவ்வணி டில்ஷான், கெயில் போன்றோரையும் பின்னாட்களில் வாங்கியது. டில்ஷான், ஹென்ரிக்ஸ், ரூசோ, யுவராஜ், தினேஷ் கார்த்திக் என பல பெங்களூர் பட்ஸ்மேன்கள் சோபிக்காவிடிலும், பல சமயங்களில் கெயில் ஏமாற்றினாலும் தூணாய் நின்று அணியை ஒவ்வொரு போட்டியிலும் காப்பாற்றி வருகிறது கோலி - டிவில்லியர்சின் சுப்பர்மன் கூட்டணி. அதிலும் குறிப்பாக இந்த 9 ஆவது சீசனில் அவர்களது ஆட்டம் வேறு லெவலில் இருக்கிறது. தொடக்கத்தில் திணறிய அணியை, இருவரும் இணைந்து கரைசேர்த்தது மட்டுமல்லாமல், அனைவருக்கும் பெரும் நம்பிக்கை அளித்துள்ளனர் இந்த ரன் மெஷி ன்கள். இவர்கள் வெற்றிகளை மட்டும் குவிக்கவில்லை. பல்வேறு சாதனைகளையும் படைத்த வண்ணம் உள்ளனர்.

அந்த அபார கூட்டணி நிகழ்த்திய சிறப்புகள் பற்றிய பார்வை இதோ...

**7 செஞ்சுரி பார்ட்னர்ஷிப்**

கோலி -டிவில்லியர்ஸ் கூட்டணியின் மிகப்பெரிய பலமே அவர்களுக்கிடையே உள்ள புரிதல்தான். ஒருவர் அடித்து ஆடிக் கொண்டிருக்கும் போது எப்படிப்பட்ட எளிதான பந்தாக இருந்தாலும், மற்றொருவர் சிங்கிள் எடுத்துக் கொடுப்பார். இப்படியான புரிதலே இக்கூட்டணியின் பெரும்பலம். இவர்கள் ஆட்டத்தைத் தொடங்கும் விதம் சூழ்நிலையைப் பொறுத்து மாறலாம். ஆனால் முடிக்கும் போது அங்கு ஒவ்வொரு பந்து வீச்சாளரின் கண்களும் கலங்கியே நிற்கும். நைட்ரைடர்சுக்கு எதி ரான போட்டியில் 115 ஓட்டங்கள் குவித்த இந்தக் கூட்டணி, 7 முறை செஞ்சுரியைக் கடந்து முதலிடத்தில் உள்ளது. இதற்கு முன்பு அதிகபட்சமாக கெயில் - கோலி கூட்டணியும் 7 முறை சதமடித்துள்ளது. கட

ந்த சீசன்களில் கெயி லோடு இணைந்து அதிரடி காட்டிக் கொண்டிருந்த கோல, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏ.பி யோடு அசைக்க முடியாத அணியை உருவாக்கி விட் டார். இந்த சீசனில் மட்டும் இந்த பார்ட்ர்ஷிப் 5 முறை நூறு ஓட்டங்களைக கடந்து புதிய சாதனை படைத்துள்ளது.

**ஒரே விக்கெட்டிற்கு 229 ஓட்டங்கள்**

ஒரு இன்னிங்சில் ஒரு பார்ட்னஷிப் அடித்த அதிகபட்ச ஓட்டங்கள் 229. அதை அடித்தவர்கள் யார் தெரியுமா? சந்தேகமே வேண் டாம், இந்த துடுப்பாட்டக்காரரும் சுப்பர் மனும்தான். கடந்த வாரம் இவர்களடம் சிக்கிய குஜராத் லயன்ஸ் அணியை பந்தாடி, 229 ஓட்டங்கள் குவித்த இவர்கள் தான் இரண்டாம் இடத்திலும். கடந்த ஆண்டு மும்பைக்கு எதிராக வான்கடே மைதானத்தில் அவுட்டே ஆகாமல் இவர்கள அடித்த 215 ஓட்டங்கள் தான் முந்தைய சாதனையாக இருந்தது. இதுவரை ஐ.பி.எல் வரலாற்றில் 4 கூட்டணிகள் இரட்டைச் சதம் அடித்துள்ளன. மற்ற இரு கூட்டணிகள் கில்கிறிஸ்ட்-ஷான் மார்ஷ் மற்றும் கெயில்-கோலி. இதுவரை 3 இரட்டைச் சத பார்ட்னர்ஷிப்பில் பங்காற்றிய மகத்தான சாதனைக்கு கோலியே சொந்தக்காரர்.

**ஒரே இன்னிங்சில் இரண்டு சதங்கள்**

ஐ.பி.எல் போட்டிகளில் சதமடிப்பதே பெரிய விடயம். ஒரே போட்டியில் இரண்டு அணிகளைச் சேர்ந்த வீரரொருவர் சதமடித்த நிகழ்வே அரிதாகவே நடந்துள்ளது. ஆனால் ஒரே இன்னிங்சில் ஒரே அணியைச் சேர்ந்த இருவர், ஒரு ரி-20 போட்டியில் சதமடிப்பதெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. அதையும் நிகழ்த்திக் காட்டினர் இவர்கள். முதலில் டிவில்லியர்ஸ் அசுர வேகத்தில் சதமடிக்க, பொறுமையாய் ஆடிவந்த கோலி, கடைசி கட்டத்தில் சுனாமியாய்ப் பொங்க, இருவரும் சதமடித்து, ஐ.பி.எல் வரலாற்றில் மேலுமொரு சாதனையைப் படைத்தனர். இதுவரை நடந்துள் ள 5707 ரி-20 போட்டிகளில், இதற்கு முன்பு ஒருமுறை மட்டுமே அப்படி நடந்துள்ளது. மிடில் செஸ் அணிக்காக குளோசெஸ்டரின் கெவின் ஓ பிரையன் மற்றும் ஹாமிஷ் மார்ஷல் ஆகியோர் இச்சாதனையைப் படைத்துள்ளனர்.

**கடைசி கட்டத் தாண்டவம்**


ஒரு அணி பவர் பிளேயில் கூட மெதுவாக ஆடும். ஆனால் கடைசி ஐந்தாறு ஓவர்களில் கண்டிப்பாக அனல் பறக்கும். எப்படியும் எந்த அணியும் குறைந் தபட்சம் 50 முதல் 60 ரன்களை இலக்காகக் கொண்டு விளையாடுவார்கள். ஆனால் இவர்கள் இருவரும் வேற்று கிரகத்திலிருந்து வந்தவர்கள் அல்லவா? இவர்களது டார்கெட் மற்றவர்களை விட எப்பொழுதும் டபுளாகவே இருக்கும். ஆம, குஜராத் அணிக்கெதிராக கடைசி ஐந்து ஓவர்களில், இவர்கள் எடுத்த ஓட்டங்கள் 112. அதிலும் 14 சிக்சர்களைப் பறக்கவிட்டு பந்து வீச்சாளர்களை திணறடித்தனர். இதுவரை எந்த அணியும் கடைசி 5 ஓவர்களில் 100ஓட்டங்களைக் கூடக் கடந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிச்சா 30 தான்**

அந்த அணிக்கு குஜராத அணி என்ன பாவம் பண்ணாங்கனு தெரியல. பந்து ஒவ்வொரு மூலைக்கும் பறந்துக் கிட்டே இருந்துச்சு. "அஞ்சு ஓவருக்கு 112 ஓட்டங்களா...?" ன்னு வாயப்பொளக்காதீங்க. இன்னும் 18 வது மற்றும் 19 வது ஓவர் பத்தி சொல்லல. அந்த இரண்டு ஓவரிலும் தலா 30 ஓட்டங்கள் எடுத்தனர் அந்த இரு மாஸ்ட் ரோக்களும். முதலில் மாட்டியது ஐ.பி.எல்லின் மிகச்சிறந்த டெத் பவுலர் டுவைன் பிராவோ. நோ பால் போட்டது அவருடைய தப்பென்றாலும், ஏ.பி யும் கோலியும் ஆடிய விதத்திற்கு அத்தருணத்தில் யார் பந்து போட்டிருந்தாலும் அதுதான் நடந்திருக்கும். அடுத்ததாக மாட்டியது இளம் வீரர் சிவில் கவுசிக். உலகத்தரம் வாய்ந்த வீரருக்கே அந்த நிலை என்றால், இவரை என்ன சொல்வது? அந்த ஓவர் தொடக்கத்தில் வெறும் 68 ஓட்டங்களில்தான் இருந்தார் கோலி. 4 சிக்சர் ஒரு பவுண்டரி என கவுசிக்கின் பந்துகளை சிதறடித்து, எளிதில் சதத்தை நெருங்கினார்.இதுமட்டு மல்ல, கோலி - டிவில்லியர்ஸ் இணை கூட்டாக இணைந்து 2000 ஓட்டங் களைக் குவித்து அசத்தியுள்ளது. இவர்கள் இருவரும் களத்தில் நின்றாலே, எதிரணியினர் அரண்டு விடுகின்றனர். கிரிக்கெட்டை நேசிக்கும் ஒவ்வொரு ரசிகனும், தான் ஆதரிக்கும் அணியையும் மறந்து விட்டு எதிரணியாய் இருந்தாலும் இவர்களை ரசிக்கத் தொடங்கிவிட்டான். எந்த மைதானமாய் இருந்தாலும் வெளிநாட்டவர் என்ற பாகுபாடு இல்லாமல் ஒவ்வொரு ரசிகனும் "ஏ.பி.டி-ஏ.பி.டி.." என்று உரக்கக் கத்துகிறான். ஓட்டங்கள் குவிப்பது, சதங்கள் அடிப்பது, வெற்றிகள் குவிப்பது, சாதனைகள் புரிவது என அனைத்தையும் தாண்டி, கிரிக்கெட் ரசிகனின்ரசனையை மாற்றியதுவே இந்தக் கூட்டணியின் மிகப்பெரிய வெற்றி. கூட்டணியாய் மட்டுமல்ல, தனித்தனியாகவும் இந்த இரு வீரர்களும் இந்தியன், தென்னாப்பிரிக்கன் என்ற தேச வேறுபாட்டையெல்லாம் தாண்டி ஆகச்சிறந்த துடுப்பாட்டக்காரர்களாய் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்துள்ளனர் என்பதே உண்மை!

(க)





# பலமான எதிர்க்கட்சியுடன் அரியணையில் அம்மா



தமிழகத் தேர்தல் திருவிழா இனிதே நிறைவடைந்துள்ளது. மீண்டும் ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்துள்ளார்.23 ஆம் திகதி அரியணையில் ஏற அவர் நாளும் குறித்துள்ளார். அம்மா ஆட்சி மீண்டும் மலர்ந்துள்ளது என்று அ.தி.மு.க. தொண்டர்கள் வெற்றிக் கொண்டாட்டங்களில் இறங்கியுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிச் சிறை சென்ற ஜெயலலிதா மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைத் தக்க வைப்பார் என்று எதிர்க்கட்சிகள் கூட எதிர்பார்த்திருக்க முடியாது.

அதேவேளை தமிழகத்தில் பூரண மதுவிலக்கை கொண்டு வரப் போவதாகவும் கொண்டு வரவேண்டும் என்றும் மதுவிலக்கு விவகாரம் இந்தத் தேர்தலில் எதிரொலித்தது.

அனைத்துக் கட்சிகளும்பூரண மதுவிலக்கை பிரசாரத்தின் போது வலியுறுத்த மறக்கவில்லை. அ.தி.மு.கவும் படிப்படியாக மதுவிலக்கு அமுலாகும் என்று வாக்குறுதியளித்தது. அ.தி.மு.கவின் இந்த வாக்குறுதியை எதிர்க்கட்சிகள் எள்ளி நகையாடின.

அ.தி.மு.க.ஆட்சியை இழந்தால் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் என்பதால் இரண்டு கட்சிகளுக்கும் எதிராக பலமான கூட்டணியை அமைத்து மாற்றணியாக மக்கள் நலக்கூட்டணி தேர்தலை எதிர் கொண்டது. இருப்பினும் அந்த முயற்சி படுதோல்வியைக் கண்டுள்ளது.

அ.தி.மு.க.ஆட்சியை எப்படியாவது அகற்றிவிட வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்ட தி.மு.கவால் பலமான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையே அடைய முடிந்துள்ளது. இந்தத் தேர்தல் மூலம் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது என்றாலும் கடந்த சட்டமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி அந்தஸ்தை கூட அடைய முடியாத தி.மு.கவுக்கு தமிழக சட்டமன்ற வரலாற்றில் மிகப் பெரிய எதிர்க்கட்சி என்ற பெருமையை இம்முறை மக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் தி.மு.கவின் தலைவர் கலைஞர் கருணாநிதி 93 ஆவது வயதில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார். ஆறாவது முறையாக முதலமைச்சராகும் அவரின் ஆசையில் மக்கள் நலக்கூட்டணி மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது.

தி.மு.க.கூட்டணியில் விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. போட்டியிட்டிருந்தால் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியமைத்திருக்க முடியாது. மீண்டும் ஜெயலலிதாவால் முதலமைச்சர் ஆகியிருக்கவும் முடியாது என்பதை தேர்தலுக்குப் பின்னரான வாக்குச் சதவீதம் வெளிப்படுத்தியுள்ளன.

1.1 வாக்கு (4 இலட்சத்து 41 ஆயிரத்து 686 வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க வெற்றி) வீதத்தால் ஆட்சியைத் தக்க வைத்த அ.தி.மு.கவினர் சில தொகுதிகளில் தி.மு.கவினரை விட சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆக கலைஞரின் முதலமைச்சர் கனவைக் கலைத்ததில் மக்கள் நலக்கூட்டணி பிரதான பங்கை வகித்துள்ளது பட்டவர்த்தனம். இருப்பினும் தமிழகத்தில் மாற்றணி என்று கருதப்பட்ட தே.மு.தி.க. தலைமையிலான மக்கள் நலக்கூட்டணியும் தனித்துக்களம் கண்ட பா.ம.க., நாம் தமிழர் கட்சிகளால் ஒரு ஆசனத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது.

அ.தி.மு.க - தி.மு.க. இரு கட்சிகள் தலைமையில் அமையும் கூட்டணிதான் இனி தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க முடியும் என்று எழுதாத ஒப்பந்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகத்தையும் தனித்துக்களம் காணும் மாற்றுக்கட்சிகளை ஆதரிக்கும் மனோநிலையில் மக்கள் இல்லை என்பதையும் வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பு அமைந்துள்ளது.

தமிழகத்தில் தொடர்ந்து ஆட்சியமைக்க ஒரு கட்சிக்கு வாய்ப்பளிக்க விரும்பாத மக்கள் சில சந்தர்ப்பங்களில் ஒரு கட்சிக்கு இருமுறை வாய்ப்பளிப்பதையும் தவிர்க்கவில்லை.

அந்தவகையில் இம்முறை மீண்டும் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை அம்மா என்று அ.தி.மு.க. தொண்டர்களால் அழைக்கப்படும் ஜெயலலிதாவுக்கு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா மீண்டும் ஆட்சிப் பொறுப்பை நாளை 23 ஆம் திகதி ஏற்கவுள்ளார்.

அதேவேளை 98 ஆசனங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தி.மு.க. மிகப்பெரும் எதிர்க்கட்சியாக காங்கிரஸுடன் இணைந்து சட்டமன்றத்துக்குள் நுழைகின்றது.

தே.மு.தி.க. தமிழக சட்ட சபையில் பலம் மிக்க எதிர்க்கட்சியாக இல்லாத போதும் அதன் தலைவரான விஜயகாந்தை சமாளிக்க முடியாது திணறிய அ.தி.மு.கவினருக்கு தி.மு.கவின் எதிர்ப்பை எதிர்காலத்தில் சமாளிப்பது என்பது பெரும் சோதனையாகவே அமையும் என்பதை இப்போதே கூறிவிட முடியும்.

இருப்பினும் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும்நிறைவேற்றுவேன் என்று வெற்றிக்களிப்பில் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் வாக்குறுதியளித்துள்ளார்.

தனி ஈழம் அமைக்கப் பாடுபடப் போவதாகவும் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஜெயலலிதா தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைப்பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுப்பதாகவும் வாக்குறுதியளித்திருந்தார்.

இந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற ஜெயலலிதா பாடுபடுவார் என்ற நம்பிக்கை ஈழத்தமிழர்களுக்குண்டு.

ஈழத் தமிழர்களுக்கு தீங்கிழைத்த தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வரக்கூடாது என்று தேர்தல் பரப்புரைகளில் முழங்கிய ஜெயலலிதா, ஈழத்தமிழர்கள் குறித்து தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பாடுபட்டால் அம்மாவின் ஆட்சி தொடரவேண்டும் என்று ஈழத்தமிழர்களும் விருப்பம் கொள்வர்.

தமிழ் நாட்டின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை மக்கள் எவ்வாறு எதிர்பார்த்துக் காத்திருந்தார்களோ அதேபோன்று இலங்கையிலுள்ள தமிழ் மக்களும் எதிர்பார்த்திருந்தனர்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிங்களப் படைகளால் இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு மனம் நொந்து பெரும் போராட்டங்களை முன்னெடுத்த தமிழக மக்கள் தம்மை ஆட்சி செய்ய யாரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்பு இப்போது மட்டுமல்ல எப்போதும் ஈழத்தில் மேலோங்கியிருக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழக சட்டமன்றத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த முதலமைச்சர் ஜெயலலிதா, ஈழத்தில் இடம்பெற்ற தமிழினப்படுகொலைக்கு நீதிகோரும் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இவ்வாறு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் அரியணையைத் தனதாக்கி ஆட்சியில் அமர்வதையிட்டு ஈழத்தமிழர்களும் மகிழ்ச்சியடைவதோடு இனி என்ன செய்யப் போகின்றார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

எஸ்.ஆர்.கரன்

# facebook

## சுட்டது நெட்டளவு செல்வந்தரின் அறியாமை



ஒரு பெரும் செல்வந்தர் தம்மை சந்திக்க வந்த வயதான துறவியை அழைத்துப் போய் தமக்குச் சொந்தமான வயல், வரப்பு, தோப்புகளைப் பெருமையுடன் காட்டினார்.

இவ்வளவும் என்னுடையது சுவாமி" என்றார்.

அதற்கு துறவி, "இல்லையேப்பா! இதே நிலத்தை என்னுடையது என்று ஒருவன் சொன்னானே" என்றார்.

யார் அவன்? எப்போது சொன்னான்?" என்று செல்வந்தன் சீறினான்.

ஐம்பது வருடத்திற்கு முன் " என்றார் துறவி.

அதற்கு செல்வந்தன், "அது என் தாத்தா தான். ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இந்த நிலத்தை யாருக்கும் விற்கவே இல்லை" என்றான்.

இருபது ஆண்டுகளுக்கு முன் வேறொருவர் இது என் நிலம் என்றாரேயப்பா" என்று கேட்டார் துறவி

அவர் என் அப்பாவாக இருக்கும் என்றான் செல்வந்தன்.

நிலம் என்னுடையது, என்னுடையது என்று என்னிடம் காட்டிய அந்த இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?என்று துறவி கேட்டார்.

அதற்கு அதே வயலுக்கிடையில் தெரிந்த இரு மண்படங்களைக் காட்டி, "அந்த மண்டபங்களுக்குக் கீழேதான் அவர்களைப் புதைத்து வைத்திருக்கிறோம்" என்றான் அந்த செல்வந்தன்.

துறவி சிரித்துக்கொண்டே, "நிலம் இவர்களுக்குச் சொந்தமா..? அல்லது இவர்கள் நிலத்திற்குச் சொந்தமா..? என் நிலம், என் சொத்து, என் செல்வம் என்றவர்கள் நிலத்திற்குச் சொந்தமாகி விட்டனர். அவர்கள் இப்போது இல்லை. ஆனால் நிலம் மட்டும் இருக்கிறது. இது என்னுடையது எனக்கூறும் நீயும், ஒருநாள் இந்த நிலத்திற்குள் புதைக்கப்படுவாய். உன் மகன் வந்து இது என்னுடையது என்பான்" என்று கூறி முடித்தார் துறவி.

செல்வந்தன் தனது அறியாமையை எண்ணி தலை குனிந்தான்.?

# வசதியான வீடு!



ஓரளவு வசதி படைத்த ஒருவர், தம்முடைய வீட்டை விற்று விட்டு அதை விட வசதியான ஒரு வீட்டை வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தார். உடனே தரகரிடம் சென்று வீட்டை விற்றுத் தருமாறு கேட்டார்.

உடனே தரகர், "நானே பத்திரிகையில் விளம்பரம் செய்து வித்துத் தரேன் சார்" என்று கூறியதுடன், அழகிய வாசகங்களுடன் பத்திரிகையில் விளம்பரம் செய்தார். அடுத்தநாள் தரகர் சுமார் பத்து முறை வெவ்வேறு ஆட்களை அழைத்து வந்து வீட்டை சுற்றிக் காட்டினார்.

வீட்டின் சொந்தக்காரருக்கு ஆச்சரியம். உடனே பத்திரிகையில் வெளியான விளம்பரத்தைப் பார்த்தார். அதில் குறிப்பிட்டிருந்த தன் வீட்டின் வசதிகளைப் பார்த்த அவர், அடடா, நம்ம வீட்டுலயும், வீட்டைச் சுத்தியும் இவ்ளோ வசதிகள் இருக்கா...இப்பத்தானே வீட்டோட அருமை தெரியுது" என்று ஆச்சரியப்பட்டு, உடனே தரகரிடம் சென்றார்.

வீட்டை விக்கற யோசனையை நான் கைவிட்டுட்டேன். இனி எப்போதும் விக்கறதா இல்லை. மன்னிச்சுடுங்க" என்று சொல்லி விட்டு வந்தார். இன்றைக்கு நம்மில் பலரும் இதே மனநிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறோம்.

நமது பலம் என்ன என்பது நமக்கே தெரியவில்லை. பலவீனங்களையே நமது மனம் அதிகமாக படம் பிடித்துக் காட்டுகிறது. அதன் காரண மாகவே வாழ்க்கையில் சோர்ந்து போகிறோம். அறிவின் வெளிச்சத்தில் நடைபோடுகிற போது, இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏதும் ஏற்படுவதில்லை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 727

Search for people, places and things | Nagendram | Home

### மது




### நிசாந்தன்




### மதி




### விதுசன்




### கிளேவர்




### ராகுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : பலே பாண்டியா
இசை : விஸ்வநாதன் - ராமமுர்த்தி
பாடகர் : பி.சுசீலா
பாடல் : அத்திக்காய் காய் காய்
ஆலங்காய் வெண்ணிலவே




அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னைப்போல்
பெண்ணல்லவோ
நீ என்னைப்போல் பெண்ணல்லவோ
அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னுயிரும் நீயல்லவோ
என்னுயிரும் நீயல்லவோ..
அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
கன்னிக்காய் ஆசைக்காய் காதல் கொண்ட
பாவைக்காய்
அங்கே காய் அவரைக்காய் மங்கை எந்தன்
கோவைக்காய்
மாதுளங்காய் ஆனாலும் எனுளம் காய் ஆகுமோ
என்னை நீ காயாதே என்னுயிரும் நீயல்லவோ
என்னுயிரும் நீயல்லவோ
இத்திக்காய் காயாதே என்னைப்போல்
பெண்ணல்லவோ

ஓஓ...ஓ.ஓ.ஓ.. ஆ..ஆ..ஆ.ஆ.
இரவுக்காய் உறவுக்காய் ஏங்கும் இந்த ஏழைக்காய்
நீயும் காய் நிதமும் காய் நேரில் நிற்கும்
இவளை காய்
உருவம் காய் ஆனாலும் பருவம் காய் ஆகுமோ
என்னை நீ காயாதே என்னுயிரும் நீயல்லவோ
அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னுயிரும் நீயல்லவோ

ஏலக்காய் வாசனை போல் எங்கள் உள்ளம்
வாழைக்காய்
ஜாதிக்காய் கேட்டதுபோல் தனிமை இன்பம்
கனியக்காய்
ஏலக்காய் வாசனை போல் எங்கள் உள்ளம்
வாழைக்காய்
ஜாதிக்காய் கேட்டதுபோல் தனிமை இன்பம்
கனியக்காய்
சொன்னதெல்லாம் விளங்காயோ தூதுவழங்காய்
வெண்ணிலா
என்னை நீ காயாதே என்னுயிரும் நீயல்லவோ
அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னுயிரும் நீயல்லவோ

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்பவர்கள்**

**ரட்ணம் குடும்பம்- உரும்பிராய், சிவகுமார், யோகேஸ்வரன் குடும்பம்- மானிப்பாய், யோகலிங்கம், விஜயகுமார்- தெல்லிப்பழை, சந்திரன் குடும்பம் -நல்லூர்**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்..

# ஈழத்து சினிமா

## வப்பு குறும்படம் - ஓர் விமர்சன நோக்கு


சொக்கா விஜிதன் அவர்களது கதை, திரைக்கதை, படத்தொகுப்பு, ஒளிப்பதிவு மற்றும் இயக்கத்தில் ரமணன், ஆ.பாஸ்கரன் ஏ.அனுஜனா மு.Abi -நத்தஷா, தர்சன், சுசி ,கார்த்தி ஆகியோரின் நடிப்பில் வெளிவந்துள்ள குறும்படம் வப்பு.

கடந்தாண்டு(2015) பிரான்ஸில் நடந்த நாவலர் குறும்பட போட்டியில் 5 விருதுகளை வென்று அமோக வரவேற்பை பெற்றது.பார்வையாளரின் பார்வையிலும், நடுவர்களின் பார்வையிலும் ஓர் சிறந்த குறும்படமாகக் கருதப்பட்டு, வப்பு குறும்படம் இணையத்தளங்களில் வெளியாகியது.

பிரான்ஸ் நகரில் எப்போதும் சிகரட்டோடு சுத்தித் திரியும் அடாவடி இளைஞர் குழாம் அதில் ஒரு சண்டித்தனமான தலைவர் அந்த தலைவர் விரும்பும் பெண்ணை, வழியில் சந்திக்கும் ஒருவர் எதார்த்தமாக திரும்பிப் பார்க்க அதுபிடிக்காமல் அவரோடு வம்பிழுக்க கொலை நிகழ்ந்து விடுகின்றது.

அந்த கொலையை ஒரு விபத்தாக உருமாற்றி வெற்றிகரமாக பூசிமெழுகிறார்கள். விடயம் இறந்தவரின் தம்பிக்கு தெரியவர பத்து வருடங்களின் பின் தம்பி பழிவாங்கும் கொலை வெறியுடன் பிரான்ஸ் நகரில் தெருத்தெருவாக தன் அண்ணனைக் கொன்றவனைத் தேடியலைகின்றான்.

அதேநேரத்தில் ஒரு தாய் தன் மகளுடன் கணவனை தேடியலைகின்றாள். மூவரும் ஒரு புள்ளியில்



இணைகின்றார்கள். அதன் பின் முக்கிய திருப்பத்தோடு படம் முடிகின்றது.

பின்னணியிசை, கதாநாயகி வேகமாக நடந்து போகும் போது ஒலிக்கும் இசை அட்டகாசமானது. கால்தடங்கள் மாறும்போது வரும் ஏற்ற இறக்கங்களுக்கு அமைய ஒலிக்கிறது.

ஒளிப்பதிவுதான் இப் படத்தின் மிகப்பெரிய பலம். இந்தகதை உணர்வுகள் நிறைந்த கதை. உணர்வுகளின் வெளிப்பாடுகள் சுவாரசியமாக சொல்லப்பட்டிருக்கவேண்டும். ஸ்டைலிஷ் தன்மையை படம் நெடுகிலும் பேணுவதால் உணர்வுகள் முழுமையாக பரிமாணிக்கவில்லை.

பாத்திரத் தெரிவுகள் மிகக் கச்சிதமானவை. அப்பாவை பார்க்கும் மகளின பார்வை யதார்த்தமான நடிப்பு. உரையாடல்கள் படத்தில் மிகக்குறைவு. கதாநாயகன் தான் விரும்பும் பெண்ணை பார்த்தவனை கடத்தி கட்டிவைத்து உரையாடும்போது வரும் வசனங்கள் பேசும்விதம் செயற்கையாக இருகின்றன.

கதாநாயகனின் முரட்டு சுபாவத்தை காட்ட ஆரம்பத்தில் சில சண்டித்தனங்கள் காட்டப்பட்டுகின்றன. அந்த காட்சிகள் வன்மமான மனநிலையை அந்த பாத்திரம் கொண்டு கட்டமைகின்றது. கொலை செய்த பிறகு அந்த பாத்திரம் சட்டென்று சலனப்பட்டாலும் இலகுவாக சுதாகரித்துக்கொண்டு நுணுக்கமாக கடந்து சென்று விடுகின்றது.

இப்படி வன்மமான பாத்திரம் எப்படி மனம் பேதலித்த நிலைமைக்கு சென்றது? அந்த பாத்திரம் செய்த கொலைதான் காரணம் என்றால் அதனால் அந்த பாத்திரம் அடையும் மன உளைச்சல்கள் சொல்லப்பட்டிருக்க வேண்டும். சாதாரணமாக இயல்பான மனிதன் என்றால் அவை சொல்லப்பட தேவையில்லை.

ஆனால் அந்தப் பாத்திரம் வன்மம் படைத்த பாத்திரமாக சித்தரிக்கப்பட்டு விட்டது. அதை நிரூபிக்கும் காட்சிகள் காட்டப்பட்டன. அதனால் நிச்சயமாக அந்த பாத்திரத்தின் மறுபக்க மென்மை இயல்புகள் சொல்லப்பட்டு இருக்கவேண்டும்.

இல்லாவிடில் அந்த சம்பவத்தால்தான் பேதலித்த மனநிலைக்கு அந்த பாத்திரம் சென்றது என்பதை ஏற்கமுடியாது.இங்கே தான் தர்கக ரீதயான முரண்பாடு ஆரம் பிக்கின்றது. தொழில்நுட்ப விடயங்களில் அதிக கவனம் செலுத்திய இயக்குநர் விஜிதன் சொக்கா இவற்றில் கூடிய கவனம் செலுத்தியிருக்கலாம்.

## 1980 இல் வெளிவந்த அக்கினிக்குஞ்சு எனும் இதழிலிருந்து

புது உலகம் காண வாரீர்
கல்லூரி நூல்கள் தனைப்படித்தறிந்து
கஷ்டமுடன் ஒருவாறு பரீட்சை தேறிப்
பல்கலையும் அறிந்து நிற்கும் பண்டிதன்போல்
பாங்காக நடைபோடும் மகனே கேளாய்
நல்முறையில் நீ இனிமேல் வாழ எண்ணில்
நம்பிடுவாய் உன் உடலின் வலிமை தன்னை
எல்லோரும் உடல் உழைப்பை வெறுப்பாராகில்
எப்படித்தான் வருங்காலம் சோறுபோடும்.

முன்னோர்கள் பாடுபட்டார் வெயர்வை சிந்த
முறையாக வாழ்ந்தார்கள் வலிமையோடு
தன்வாழ்க்கை தனைத் தன்னிற் தங்கச் செய்து
தளராத நிம்மதியோ பெற்று வாழ்ந்தார்
பொன்போலும் காலமது இந்த நாளோ
புகலுதற்கே பெரும் வெட்கக்கேடு தம்பி
என்செய்வோம் எல்லாரும் உழைத்திடாது
அலைகின்றார் ஏதுமொரு பதவி தேடி.

உத்தியோகப் பொறுப் பேற்று விட்டால்
உடல் உழைப்பதனையே உதறித் தள்ளி
புத்திக்கே முழு இடமும் ஒதுக்கிவிட்டு
பகல் முழுதும் கதிரையின் மேல் வீற்றிருந்து
மெத்த மெத்த ஏதேதோ எழுதி தள்ளி
மேனிதான் ஒருசிறிதும் வளைந்திடாமல்
சத்தின்றி வாழ்க்கை தனை ஓட்டுகின்றார்
சஞ்சலந்தான் அவர் வாழ்வில் அதிகமுண்டு.
எல்லோரும் இவ்விதமே செய்வாராகில்
எப்படித்தான் உணவுடைகள் இவைகளோடு
நல்ல இளம்சந்ததியும் விருத்தி ஆகும்

நன்மகனே நீ இவற்றைச் சிறிது நோக்கில்
பொல்லாத பதவிகளில் மோகம் கொள்ளாய்
பொன்போல உன்நாட்டை ஆக்க எண்ணி
நல்லாக வியர்வைதான் நிலத்தில் விழ
நாள்தோறும் தவறாது ஏர்பிடிப்பாய்.

உழுதுண்டு வாழ்வதுதான் உயர்ச்சியென்று
உன்மனதில் நன்றாகப் பதியுமானால்
பழுதுதரும் பிறவற்றை நாடிடாமல்
பக்குவமாய் மண்வெட்டிதான் பிடிக்க
அழுதழுது தொழுநோய்கள் யாவும் ஓடும்
அப்போதுதான் தேகவலியும் நேரும்
விழுதுவிடும் ஆல்போல வாழ்க்கை ஓங்கும்
விளங்கிடும் உன் திருநாடும் பெருமையோடு

வாழ்வதற்காய் வையகத்தில் வந்த நாங்கள்
வாழ்க்கைதனை நல்நோக்கோடேதாண்ட வேண்டும்
பாழ்போன பதவிகளை நாடிடாமல்
பக்குவமாய் உடல்உள ஆன்மாவைப் பேணி
சூழ்எனினும் சுதந்திரமாய் உண்டு வாழ்வோம்
சூறிடுமவ் வின்பமெல்லாம் பெற்று வாழ்வோம்
கோழையராய் எந்நாளும் வாழலாமோ
கொண்டிடுவோம் புதுக்கோலம் புதுமை வாழ்வு

உழைப்பதற்கே முதலிடத்தை உதவி நன்றாய்
உடல்வருந்தி வெயர்வை விழ உழைத்துவாழ
அழைக்கின்றோம் வாலிபர்காள் உணர்ந்து பாரீர்
அன்புடனே புதுஉலகம் காண வாரீர்
மழைக்கும் நல்வெயிலுக்கும் பணியமாட்டோம்
மார்தட்டி ஏர் உழுது என்றும் வாழ்வோம்
தழைக்கட்டும் எம்வாழ்வு தழைகள் நீங்கித்
தாரணியில் புதுமையுடன் பொலிக வாழ்வு!

எஸ்.ஆர்.மகேந்திரன்
முதலாம் வருட வர்த்தகபீடம்.

## அவர்களும் மனிதர்கள்தான்

கண்ணை இழந்த குருடன் ஆனால் படைப்பில் அவனும் மனிதன்
வழியில் உணர்வு இல்லை ஆனால் உணர்வு உண்டு உளத்தில்.

ஊமையான மனிதன் ஆனாலும் எங்களில் அவன் ஒருவன்
பேசத்துடிக்கும் அவன் இதயம் ஆனால் நா.விதிக்கும் தடயம்.

நொண்டியான சிறுவன் அவனும் நம்மைப்போல ஒருவன்
நெஞ்சில் வாழ ஆசை இருக்கும் மனித வசைகள் அவனைத் தடுக்கும்.

அறிவை இழந்த இளைஞன் அவனும் அடையத் துடிப்பான் அன்பை
அணைக்கவேண்டும் அவனை பாசத்தோடு மனதில்.

பதியை இழந்த விதவை அவள் வழிகள் நாடும் உறவை
ஒதுக்கக் கூடாது அவளை அவளும் பெண்தானே மனமே.

ஒரு திருடன்கூட மனிதன் தவற்றில் திருந்திவிட்டால் அவன் இறைவன்
செய்தவற்றை உணர்ந்தபின்னும் அவன் தவிக்கக்கூடாது தனியே.

படைப்பில் யாவரும் மனிதர் நம் பகுப்பிற்றாளே அவர் சிறியர்
உருவிலும் உறவிலும் நாம் நாம் ஒருவர்
இதை உணர்தல்வேண்டும் நாம் இளைஞர்.

கி.மங்களராணி

# களம்

## திரை விமர்சனம்





இப்போது தமிழ் சினிமாவில் **Trend** என்ன என்று கேட்டால் பிறந்த குழந்தைகூட சொல்லும் பேய் படங்கள் என்று.

அதனால் அதையே ஆயுதமாக எடுத்து "களம்" இறங்கி இருக்கிறார் புதுமுக இயக்குநர் ராபர்ட் ராஜ்.

தமிழ் சினிமா களத்தில் இப்படம் வெற்றி பெறுமா? என்பதை இந்த விமர்சனத்தில் பார்க்கலாம்.

**கதைக்களம்**

1920-ல் ஆரம்பமாகிறது படம். ஊருக்குள் ரவுடியான மதுசூதனன் ராவ் தன் மகனுக்காக (அம்சத்) ஒரு பங்களாவை வாங்குகிறார்.

அந்த பங்களாவில் குடியேறும் ஹீரோவும், ஹீரோயினும் அமானுஷ்யமான விடயங்களை சந்திக்கிறார்கள்.

அந்த நேரத்தில் அவர்களுக்கு உதவ ஒரு Painter (பூஜா ) மூலம் வருகிறார் மந்திரவாதியாக ஸ்ரீநிவாசன்.

அந்த பங்களாவில்இருந்து அவர்கள் தப்பித்தார்களா ? இல்லையா? என்பதை கிளைமாக்ஸில் ஒரு திருப்பு முனையுடன் கூறி இருக்கிறார் ராபர்ட் ராஜ்.

படத்தை பற்றிய அலசல்படத்தில் நடித்த அனைவருமே யதார்த்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் ஸ்கீரினில் பயப்படும் போது பயம் நம்மையும் சுற்றிக்கொள்கின்றது.



டெக்னிக்கலாக படம் அனைவரையும் கவர்ந்து இழுக்கின்றது.



அதிலும் பிரகாஷ் நிக்கியின் இசை நம்முள் அச்சத்தை கொண்டு வருகின்றது.

முகேஷ். ஜி. ஒளிப்பதிவில் மிரட்டியுள்ளார். பேய் படம்என்று சொல்லிவிட்டு இடைவேளை வரை பேயே வரவில்லை.

கெடுவார் கேடு நினைப்பார் என்ற ஒரு சின்ன லைனை எடுத்துகொண்டு வித்தியாசமாக கையாண்டுள்ளார் ராபர்ட் ராஜ்.

காமெடி இல்லாத சமீபத்திய பேய் படம் இது தான்.

**கிளாப்ஸ்**

நடிகர்களின் யதார்த்த நடிப்பு, இதன் பின்னணி இசையும் , ஒளிப்பதிவும் இரண்டாம் பாதியில் உள்ள twist.

**பல்ப்ஸ்**

முதல் பாதி கொஞ்சம் மெது வாக உள்ளது. கதை திரைக்கதையில் இன்னும் கொஞ்சம்சுவாரஸ்யம் இருந்திருக்கலாம். மொத்தத்தில்ஒரு முறைஇந்தகளத்தைகாணலாம்

# பிரபல முன்னணி இயக்குநரை ஒதுக்கிய சூர்யா



சூர்யா நடித்த 24 படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. ஆனால், தமிழ்ரசிகர்களை பொறுத்தவரை இப்படத்திற்கு சுமாரான வெற்றியை தான் கொடுத்தார்கள். இதனால், அடுத்து திரிவிக்ரம் இயக்கத்தில் தான் நடிக்கவிருந்த படத்தை சூர்யா நடிக்க மறுத்துவிட்டதாக தெரிகின்றது.

ஏனெனில், திரிவிக்ரம் தெலுங்கில் முன்னணி இயக்குநர் என்றாலும், அவர் படங்கள் தமிழ் ரசிகர்களுக்கு பிடிக்குமா? என்ற அச்சத்தில் இந்த படத்தில் சூர்யா நடிக்க மறுத்துவிட்டதாக கூறப்படுகின்றது.

# முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு முதலில் வாழ்த்து கூறிய பிரபலங்கள்

நடிகர் சங்கம், தயாரிப்பாளர் சங்கம் என சினிமாத்துறையினர் மீண்டும் ஆட்சியை பிடித்திருக்கும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு வாழ்த்துக்கள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் ஜெயலலிதாவின் இந்த வெற்றிக்கு திரையுலகிலிருந்து முதல் நபராக வாழ்த்து தெரிவித்துள்ளார் நடிகர் சிவகுமார்.

முதல்வர் ஜெயலலிதாவின் சரித்திர வெற்றிக்காக அவருக்கு மலர்க்கொத்தும் அனுப்பியுள்ளார்.

தேர்தலில் வாக்களித்துவிட்டு சிவகுமார், குடும்பத்தலைவனைக் குடிகாரனாக்கி அவன் ஈரலைப் பெரிதாக்கி அவனை சாகடித்துவிட்டு இலவசங்கள் என்ற பெயரில் ஏன் வாக்கரிசிப் போடுகிறீர்கள்.

யார் ஜெயித்து வந்தாலும் முதலில் மதுவிலக்கை அமுல்படுத்துங்கள், அல்லது படிப்படியாகவாவது அமுல்படுத்துங்கள் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

# பிணை வைத்தவன் நெஞ்சம்?

காலையில் தேநீரை அருந்தியபடி வானொலியில் சூரியன் எப்எம் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு கிரியின் ஞாபகம் வந்தது. நாங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஒன்றாக இருந்து படித்தது.நன்றாக படிக்கக்கூடியவன் இருந்தும் அவனது குடும்ப வறுமை அவனை நிழல்போல் துரத்தியபடி இருந்தது.அவனது நிலையறிந்து எமது நண்பர்கள் எவரும் அவனிடம் இருந்து எந்தவொரு விடயத்துக்கும் பணத்தினை எதிர்பார்ப்பதில்லை.ஆனாலும் கிரி தன்னால் முடிந்தவற்றை எல்லாம் செய்துவிடுவான்.

காலங்கள் சுழல நாமும் பட்டதாரிகளாக பட்டங்களைப்பெற்று ஒவ்வொருவரும் வேலை,குடும்பம் என்று ஒவ்வொரு இடத்தில் இருந்தாலும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் அருகில் இருப்பதாகவே உணரும் வேளையில் நேற்றையதினம் கிரியினது நேரடி வீட்டுத் தரிசனம்,அவனுக்கு இருக்கும் தேவையின் முக்கியத்துவத்தை எனக்கு உணர்த்தியது. பட்டமேற்படிப்புக்கு அனுமதி கிடைத்தும் அதனைத் தொடர்வதா? வேண்டாமா? எனும் திரிசங்கு நிலையில் இருந்தான்.திருமண வயதில் இரு தங்கைகள். எப்பவும் திருமணம் பொருந்தி வரலாம் என்கின்ற நிலையில் அவ்வாறு ஒரு நிலை வந்தால் அதற்குப் பணம்? இருக்கும் பணத்தில் பட்டமேற்படிப்புக்கு சென்றால் தங்கைகளின் திருமணத்துக்கு பணம் இல்லை.

இன்று இருவரும் திருமணத்தையும் பட்டமேற்படிப்பையும் தொடர்வதற்கு பல வழிகளில் சிந்தித்துக் கொண்டிருந்தோம்.சிந்தித்ததன் விளைவாக இறுதியில் ஞாபகத்துக்கு வந்தவன் எனது பாடசாலை நண்பன் அனந்தன்.தற்பொழுது தனியார் வங்கியொன்றில் வேலை பார்க்கின்றான்.அவனிடம் வங்கியில் இருந்து கடன் எடுத்து தங்கைகளின் திருமணத்துக்கு என நிலையான வைப்பிலிட்டுவிட்டு கிரி படிப்பதற்கு செல்லலாம் என்பது தான் எங்களது ஐடியா.கடனை அனந்தன் மூலமாக இலகுவாக முடிக்க எண்ணினோம். அனந்தனின் கைபேசி இலக்கத்தை தேடி தொடர்பினை ஏற்படுத்தினேன்.

ஹலோ்சொல்லுமச்சான்.. என்ன திடீரென்று...அனந்தனின் "சொல்லு மச்சான்" நம்பிக்கையை தர.

ஒன்றுமில்லை,உனக்கு தெரியும்தானேகிரியை,அவனுக்குகொஞ்ச காசு வேணும்.அதுதான் உங்கட வங்கியிலகடன்எடுக்கலாமோ? என்று கேட்கத்தான்...

அட இதுக்கேன் இவ்வளவு யோசனை. கிரி அரசாங்க உத்தியோகம் தானே. அவனை கடனாளி ஆக்கிறது என்னுடையபொறுப்பு.

என்னடா சொல்கிறாய்? கடனாளி ஆக்கிறதோ?

இல்லை மச்சான் கடன் குடுக்கிறது என்ர பொறுப்பு.அவன்ர சம்பளத்தை சொல்லு. அவனை எவ்வளவு பெரிய கடனாளி ஆக்கலாம் என்று நான் சொல்கிறேன்.

வழமையாகவே அனந்தன் கொஞ்சம் நக்கல் நளினத்தோடதான் கதைப்பான்.இல்லையடா அரசாங்க வங்கியில கேட்டனாங்கள்என்றுசொல்லிமுடிப்பதற்குள்.

டேய் அவங்கள் டொக்குமென்ற்ஸ் கேட்டே சாகடிச்சுடுவாங்கள், நான் ஒரு கையெழுத்தோடு தருகின்றேன்...வேற ஒரிடமும் போயிடாதே...


அனந்தன்,பிரச்சினை என்னவென்றால் இவன் இந்தியாவுக்கு புதன்கிழமை போக வேணும். இன்று சனிக்கிழமை. புதன்கிழமைக்குள் விசயம் முடிய வேணும்.இவன் வேற நாளைக்கு கொழும்பு போகின்றான். அதுதான்...என்று நான் இழுத்தேன். அவனோ அது பிரச்சினை இல்லை. நான் நாளைக்கு அவன்ர வீட்டுக்கு போய் விசயத்தை முடிக்கிறேன். பயப்படாம மற்ற அலுவல்களை பார்க்கச் சொல்லு.

என்னடா இது.ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வந்தே கடன் தருகிறேன் என்கிறான்.நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தெரியுமோ?ஒரு சந்தேகத்துடன் நான் கேள்வியைப் போட எங்களுக்கு கஸ்டமர் தான் முக்கியம்,மக்களுக்கு சேவைசெய்யவேணும். அதுதான் எங்கட நோக்கம்.

அனந்தனிடம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கினால் எந்த வேலையும் இழுபடும் என்று சொல்லுறவங்கள் ....அதுதான்...

இழுபடும்தானே்எப்படியும் கடனை முடிக்க ஏழுவருசம் ஆகும்.பார் மச்சான் கிரியின்ர விசயத்தில் சாத்திரமும் சரியாயிற்று.நான் அனந்தனுடன் கதைத்து விசயத்தை முடிக்கிறேன்.நீ வை "போனை" என்றவன் எனது அனுமதியின்றியே போனை வைத்துவிட்டான்.

ஞாயிற்றுக்கிழமை ருசியான மதிய உணவு உண்ட மயக்கத்தில்




தொலைக்காட்சியை ரசித்தபடி இருக்கும் பொழுது.கைபேசி சிணுங்கியது. அனந்தன்தான்,கைபேசியை அழுத்தி சொல்லுடா?என்றேன். மச்சான் உன்ர ஆளுடைய கணக்குக்கு நாளை பணம் போயிடும். எல்லாம் சரி என்ற அவனது வார்த்தைகள் என் நெஞ்சில் பால் வார்த்ததை போன்றிருந்தது. மச் சான்... உன்ர ரெலிகொம் போன் நம்பரை சொல்லு என்றான்.

ஏன்?என்ற எனக்கு, இல்லையடா அவனுக்கு பிணையாக உன்ர பெயரைத்தான போட்டிருக்கிறேன். அதுக்கு உன்ர நிலையான இணைப்புடைய போன் நம்பர் தேவை.பிறகு வந்து டொக்குமென்ற்சில கையெழுத்து வேண்டுகின்றேன் என்றான்.

காலச்சக்கரம் தன்கடமையை சரிவர செய்யமூன்று மாதங்கள் கடந்திருந்த நிலையில் கிரியின் அம்மா எனது வீட்டுக்கு வந்திருந்தார். அவரை வரவேற்று கிரியின் விபரங்களை கேட்டறிந்துகொண்ட நான் அவன் மேற்படிப்புக்கு இந்தியா போகும் போது ஒரு போன்கூட பண்ணாமல் போட்டான்.அதுதான் எனக்கு கவலை என்றேன்.ஓ அது கிரியும் சொன்னவன்தான். கடைசியில ஒரே வேலை. அதனால் போன் பண்ண முடியவில்லை.அங்கே போயும் படிப்பு, அங்கேயிருந்து இங்கே போனுக்கு காசும் கூட அதுல போன் பண்ணவில்லை என்று சொன்னவன். குறை நினைக்காதே தம்பி.

ஐயோ! நான் குறை நினைக்கவில்லையம்மா.நீங்க சொல்லுங்க என்ன விசயமா வந்தனீங்கள்?

இவள் தங்கச்சிக்கு வரன் வந்திருக்குது.நல்ல இடம். அதுதான் வருகிற மாசமே திகதி வைத்திருக்கின்றோம்.உங்களுக்கு நேரில் போய்ச் சொல்ல சொன்னவன்.அதுதான் வந்தனான்.எல்லோருமாக குடும்பத்தோட வந்துவிடுங்கோ தம்பி.

சந்தோசமான விசயம் கட்டாயம் வருவோம் என்ற என்னிடம் இருந்து விடைபெற்று சென்றார் கிரியின் அம்மா.

மனைவியிடம்விடயத்தை சொன்னேன்,கிரியின் தங்கச்சிக்கு கலியாணமாம்.கிரியின் அம்மா வந்து சொல்லிவிட்டு போனவர்.வேலையால் சற்றுக்களைத்து வந்திருந்த மனைவி சிறிது கடுப்புடன் ஏன் அவருக்கு ஒருபோன் பண்ணி சொல்ல முடியாதோ? என்று கேட்டாள். என்னவோ தெரியவில்லை.எனது மனைவிக்குகிரியை அறவே பிடிப்பதில்லை. சரியப்பா கலியாணத்துக்கு குடுக்க ஏதாவது வேண்ட வேணும். நாளைக்கு வரும்பொழுது வங்கியில் காசு எடுத்துக்கொண்டு வாங்கோ என்றேன்.மனைவிதான் பணவிடயம் எல்லாம்.இப்பவும் வங்கிப்புத்தகத்தை கொண்டு போய்த்தான் பணம் எடுப்பா.''ஏரிஎம்'' கார்ட் எல்லாம் பாவிப்பதில்லை.மனைவி சற்று எரிச்சலுடனேயே சரியப்பா என்று விட்டு தன்வேலையில் மும்முரமானாள்.

அலுவலகத்தில் மதிய உணவை உண்டுகொண்டிருந்த எனக்கு மனைவியின் கைபேசியில் இருந்து அழைப்பு வர சொல்லுங்க என்ற என் வார்த்தை அவளின் கைபேசிக்குக்போக முன்னரே மனைவியின் குரல் என்னை வந்தடைந்தது. என்னப்பா எங்கட எக்கவுண்டில் இருந்து பதினையாயிரத்து முன்னூறு ரூபா வெட்டிக்கிடக்கு. அனந்தனுக்கு போன் பண்ணிக் கேளுங்கோ என்னவென்று? மனைவியின் குரலில் அவசரம் ,பயம் எல்லாமே தெரிந்தது. சரி சரி பயப்பட வேண்டாம்.நான் அனந்தனிட்ட விசாரிக்கின்றேன் என்று மனைவிக்கு கூறினாலும் யோசனையுடன் அனந்தனின் கைபேசிக்கு அழைப்பினை எடுத்தேன்.

ஆ... சொல்லு மச்சான் யாருக்கும் லோன் வேணுமோ? என்றவனை மறித்து என்னிடம் இப்ப ரெலிக்கோம் போன் இல்லையடா என்றவாறு... விடயத்தை சுருக்கமாக சொல்லி ஒருதரம் என்னுடைய கணக்கினை சரிபார்த்து சொல்லச் சொன்னேன். ஒரு நிமிடம் லைனில் இரு என்றவன் கணனியில் தட்டுவது கைபேசியினூடு கேட்டது. கூடவே எனது இதயத்துடிப்பும் சேர்ந்து கேட்டது எனது காதில். அடே மச்சான் உன்ர மாப்பு வச்சிட்டாண்டா ஆப்பு உனக்கு. என்னடா சொல்கின்றாய்? அதிர்ந்து கேட்டேன். உன்னுடைய ஆள் கிரி இரண்டு மாதமாக தவணை கட்டவில்லை. சம்பளப் பணமும் எங்கட வங்கிக்கு வரவில்லை. அவனுக்கு நீதானே பிணை வைத்தது. அதனால் உன்னுடைய கணக்கில் இருந்து கழிக்கின்றாங்கள். அனந்தனின் " கழிக்கிறாங்கள்'' என்ற சொல் அவனுக்கும் அந்த வங்கிக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்பது போல காட்டியது. இனியும் ஒரு பிரச்சினை இல்லை. அவனுடன் கதைத்து காசை கட்ட சொல்லு. உன்ர கணக்கில் வெட்டின காசையும் கேட்டு வேண்டிக்கொள். அனந்தனின் வார்த்தைகள் என்னுள் "கஸ்டமர்கெயாரை" ஞாபகப்படுத்தியது. அதைவிட அவனது விட்டேந்தியான பதில் இன்னும் மோசமாக தாக்கியது என்னை.

அலுவலகத்தில் அரைநாள் விடுப்புப் பெற்று கிரியின் வீடு நோக்கி பயணமானேன். வா தம்பி பிள்ளை வெளியில வா சிறி அண்ணா வந்திருக்கிறார். கிரியின் அம்மாவின் வரவேற்பும் அழைப்பும் என்னை கவரவில்லை. இருந்தும் புன்முறுவலுடன் கதிரையில் அமர்ந்தபடி கிரி போன் கதைச்சவனோ என்றேன். எங்கே தம்பி இப்ப ஒரு மாதமாக ஒரு தொடர்பும் இல்லை. கலியாண நாள் வேற கிட்ட வருகிறது. கையில ஒரு காசும் இல்லை. என்ன செய் கிறது என்றுதான் தெரியவில்லை.

கிரியின் அம்மாவின் புலம்பல்கள் உண்மையானவையா? பொய்யானவையா? ஒன்றும் விளங்கவில்லை. திருமண ஆசையில் நிற்கும் தங்கையைப் பார்க்க பாவமாக இருந்தது. குழப்பத்தில் எதையும் சொல்வது நன்றல்ல என்ற எண்ணத்துடன் கிரியின் போன் நம்பரை மட்டும் வேண்டியபடி வீடு கிளம்பினேன்.

என்னப்பா அனந்தனோட கதைச்சனீங்களே? வீட்டுக்கு வந்ததும் வராததும் ஆக மனைவியின் கேள்விக்கணை தாக்க வாறன் கொஞ்சம் பொறுங்கோ என்றபடி மௌனமாக சென்று உடை மாற்றி முகங்கழுவச் சென்றேன். குழியல் அறையில் யோசனையுடன் முகத்தை கழுவிக் கொண்டிருக்கும் போது மனைவியின் குரல் யோசனையைக் குழப்பியது. இஞ்சேரப்பா போன் அடிக்குது கேட்கவில்லையோ? இது வேற தொல்லை. எப்ப பார்த்தாலும்... வைபரில் யாரோ கோல் பண்றாங்கள். வெளிநாட்டு கோலாகத்தான் இருக்கும். போனை எடுத்துப் பார்த்தேன். "கிரிகிரி'' என்ற பெயரில் இருந்து அழைப்பு. மனதில் ஒரு மின்னல் கிரியோ என்றவாறு அவசர அவசரமாக அழுத்தினேன் வைபரை.

ஹலோ... ஹலோ நான் கிரி கதைக்கிறேன். ஏதேதோ சிந்தனைகளால் அலைக்கழிக்கப்பட்ட மனம் பெருமூச்சு ஒன்றினை விட... சொல்லடா எங்கேயடா இருக்கிறாய்? ஏன் ஒருதொடர்பும் இல்லை? லோன் காசும் கட்டவில்லை. எனது கேள்விகளிலேயே எனது நிலைமையை புரிந்து கொண்டவன். மன்னிச்சுக்கொள். இவ்வளவுநாளும் ஒரு தொடர்பும் இல்லாம இருந்ததுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது லண்டனுக்கு வர. ஒரு மாதிரி லண்டன் வந்திட்டன். அந்த வேலையில் ஒன்றும் செய்ய முடியாம போயிட்டுது. பயப்படாதே. இப்ப காசு கொஞ்சம் அனுப்பி இருக்கிறேன். அதை வீட்டுக்கு கொண்டுபோய் கொடு கல்யாண செலவுக்கு. அடுத்த மாதத்தில் இருந்து லோன் காசையும் உன்ர காசையும் கொஞ்சம் கொஞ்சமா அனுப்புகின்றேன். வீட்டுக்காரருக்கு எல்லாவற்றையும் விளக்கமாக சொல்லு. தங்கச்சியின் கலியாணத்தை போய் நின்று நடத்திக்கொடு என்றவாறு வெஸ்டேர்ன் யூனியனுக்கான இரகசிய இலக்கங்களை தந்து , நான் பிறகு எடுக்கிறேன் என்றவாறு தொடர்பை துண்டித்தான்.

நல்ல காலம் தாயாரிடம் அவசரப்பட்டு எதையும் கேட்டுவிடவில்லை.

கேட்டிருந்தால் அநியாய மாக ஒரு நட்பினை இழந்திருப் பேன் என்று நினைத்தவாறு மனை வியை நோக்கி என்னப்பா இன் னும் ரீ போடவில்லையோ? நான் ஒருக்கா வெஸ்டேர்ன் யூனியனுக்கு போகவேணும் என்றவாறு கொஞ்சம் நிமிர்ந்து இருந்து மனைவிக்கு விளக்கமளிக்க தொடங்கினேன்.

**சுதன்**



# கொப்பி அடியுங்கள்!

வாழ்க்கையில் வெற்றியடைய விரும்புகின்றவர்கள், ஏற்கனவே சாதித்தவர்களைப் பார்த்து கொப்பியடிக்கலாம். அவர்களிடம் இருக்கும் நல்ல விடயங்களை கற்றுக்கொள்ளலாம். அதில் தங்களுக்கு சரிப்படுகிறவற்றைப் பின்பற்றி முன்னேறலாம். இதனால்தான் வெற்றியாளர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் பிர மாதமாகி விடு கின்றன. அவர்களுடைய கதையை மட்டுமல்ல அவர்கள் வாழ்க்கையில் பின்பற்றிய சின்னச் சின்ன நுட்பங்களைக்கூட மக்கள் ஆர்வத்துடன் படிக்கிறார்கள்,பகிர்ந்து கொள்கிறார்கள். இப்படி 101 வெற்றியாளர்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து அவர்கள் ஒவ்வொருவருடைய வெற்றிக்கும் உதவிய



சுவாரஸ்யமான, நல்ல பலன் தரக்கூடிய பழக்கங்களைக் கண்டறிந்து தொகுத்திருக்கிறார் க்ரிஸ் லூக். Power Habits என்ற இந்தப் புத்தகத்



தின் சின்னச்சின்ன கட்டுரைகள் பல வெற்றியாளர்களின் பழக்கங்களையும் அவை பிறருக்கு எப்படிப் பயன்படும் என்பதையும் விபரிக்கின்றன.

இந்நூலிலிருந்து சில அருமையான பழக்கங்கள் இங்கே சுருக்கமாக;

❁ மார்க்ஜுக்கர்பெர்க்

ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய சவாலை தானே விரும்பி ஏற்றுக்கொள்கிறார். இந்த சவாலுக்கும் அவருடைய வேலைக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதில்லை. உதாரணமாக சீனமொழியைக் கற்றுக்கொள்வது தினமும் (அலுவலக ரீதியில் அல்லாமல்) ஒரு புதிய நபரைச் சந்திப்பது-இப்படி ஏதாவது ஒரு சவாலைப் பின்னற்றுவதன் மூலம் எந்நேரமும் வேலையில் மூழ்கிக் கிடக்காமல் மனதுக்கு ஒரு மாற்றம் வரும். அதன் பிறகு வேலைக்குத் திரும்பும்போது அதில் கவனம் கூடும்.

❁ தோமஸ் அல்பா எடிசன்


மின்சார விளக்கு, திரைப்பட கமரா என்று அவர் கண்டு பிடித்த ஒவ்வொன்றும் ஒரு தேவையைப் பூர்த்தி செய்தது. அதனைப் பெரிய அள வில் உற்பத்தி செய்து அவரால் பணமும் புகழும் சம்பாதிக்க இயன்றது. இன்றைக்கும் அவரது பெயர் நிலைத்திருக்கிறது. அதுபோல எதையும் சும்மா கடமைக்குச் செய்யாமல் சில தேவைகளை நோக்கி நமது வேலைகளை அமைத்துக் கொண்டால் பெரிய அளவில் வெற்றி வரும்.

❁ ஜான்ராக்பெல்லர்

ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 26 ஆம் திகதியை "நான் முதன்முதலாக வேலைக்குச் சென்ற நாள்"என்று கொண் டாடுவாராம் ராக் பெல்லர். அதன் பிறகு அவர் பல வேலைகளுக்குச் சென்று பல மில் லியன் சம்பாதித்துப் பெரிய ஆளாகி யிருந்தாலும் அந்த முதல் வேலைதானே அனைத்துக்கும் ஆரம் பம்? அதை அவர் ஒருபோதும் மறக் கவில்லை. சின்னச் சின்ன வெற் றிகளை மறக்காமல் கொண் டாட வேண்டும். கிடைக்காதவற்றை எண்ணி வருந்திக் கொண்டிருக்கக் கூடாது. அப்போதுதான் உங்களால் தொடர்ந்து ஊக்கத்துடன் முன்னேற இயலும்.

❁ மைக்கேல்ஜோர்டான்

கூடைப்பந்தாட்டத்தில் மிகச் சிறந்த வீரர் என்று மைக்கேல் ஜோர்டானைச் சொல்வார்கள். ஆனால் அவரோ "நான் பலமுறை தோற்றுள்ளேன்" என்கிறார். சுமார் 300



ஆட்டங்களில் நான் தோல்வியடைந்திருக்கி றேன். அது சகஜம்தான். அந்தத் தோல்விகள்தான் என்னை வெற்றிபெறச் செய்தன. எல்லோருடைய வாழ்க்கையிலும் தோல்விகள் வரும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக முயற்சி செய்யா மலேயே இருந்து விட்டால் அதுதான் உண்மையான தோல்வி.

❁ வின்ஸ்டன்சேர்ச்சில்

பாடசாலை மாணவர்கள் தினமும் எந்த நேரத்தில் எதைப் படிக்க வேண்டும் என்று டைம்டேபிள் போட்டுக் கொள்வதைப்போல காலை எழுவது, குளிப்பது, உடுத்துவது, செய்தித்தாள் படிப்பது, கடிதங்களுக்குப் பதிலளிப்பது, உண் ணுவது, உடற்ப யிற்சி, நண்பர்களைச் சந்திப்பது, தூங்கு வது என்று சகலது க்கும் கச்சிதமாக அட்ட வணை வைத் திருந்தார் சேர்ச்சில். அவற்றை நிமிட சுத்தமாகப் பின் பற்றினார். இந்த ஒழுங்குதான் அவரை பல விடயங்களைச் சிறப்பாகவும் நேர்த்

## சகலதுக்கும் கச்சிதமானஅட்டவணை!

தியாகவும் செய்ய வைத்தது.

❁ சார்லஸ்டிக்கன்ஸ்

உடற்பயிற்சி என்பது உடலுக்கு மட்டுமல்ல மனதுக்கும் முக்கியம். சார்லஸ் டிக்கன்ஸ் தினமும் மதிய நேரத்தில் மூன்று மணிநேரம் நடப்பாராம். சும்ம ஜாலியான நடை. அதேநேரம் அப் போது அவர் பார்க்கிற விடய ங்களும் சிந்தனைக ளும் அவருடைய எழுத்தில் வெளிப்படும். இதன் மூலம் உடலும் சுறுசுறுப்பாகும். படைப்புகளும் மேம்படும். ஒரே இட த்தில் அமர் ந்திருப்பதால் சலிப்பே மிஞ்சும். கொஞ்சம் நடக்கப் பழகுங்கள்!

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 34

## வீட்டில் தனியாக இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டால் என்ன செய்வது?



1) முதலில் மாரடைப்புதானா என்பதை உறுதி செய்ய பின்வரும் அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை கவனிக்க.

- திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியானது இடதுபக்க தாடைக்கோ அல்லது இடதுபக்க தோற்பட்டைக்கோ பரவுவதைப் போன்று உணரல்
- வியர்த்தல் / மயக்கம் /வாந்தியெடுத்தல்

2) உடனே அண்மையிலுள்ள வைத்திய சாலைக்கோ / நண்பருக்கோ / அயல் வீட்டாருக்கோ தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி வைத்திய சாலைக்கு செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும். நீங்கள் தனியாக வண்டியில் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டாம்.

3) உங்கள் வீட்டில் **Aspirin** மாத்திரை இருந்தால் அதை கடித்து சாப்பிடவும். அது உங்கள் குருதிக்குழாயில் ஏற்பட்ட அடைப்பை நீக்கி குருதியோட்டத்தை அதிகரிக்கும். **(Gtn (Glyceryl Trinitrate Tablet)** மாத்திரை இருந்தால் நாக்கின் அடியில் வைக்கலாம்)

4) உங்களுக்கு தலைச்சுற்று ஏற்படுமாயின் அது குருதியமுக்கத்தின் குறைவு காரணமாக இருக்கலாம். எனவே நீங்கள் கீழேபடுத்து கொள்வதன் மூலம் மூளைக்குசெல்லும் குருதியின் அளவை அதிகரிக்கலாம்.

5) உங்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுமாயின் ஒருகதிரையில் நேராக உட்கார்ந்து கொள்ளுங்கள். அதன் மூலம் சீரான சுவாசித்தலை பேணலாம். நடக்க முயற்சிக்கவேண்டாம்.

6) உங்களுக்கு மயக்கம் ஏற்பட்டு நீங்கள் உணர்வை இழப்பது போன்று தோன்றினால் தீவிரமாக இருமுவதன் மூலம் மயக்கத்தை தவிர்க்கலாம்.

A.Q.H.M.Ashiqlie
மருத்துவபீட மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்

## இலங்கையில் நாய்க்கடிக்கான ஊசிபோடும் முறை



நீர்வெறுப்புநோய் / Rabies ஆனது வைரஸ் கிருமியால் பரவும் நோயாகும். இவ் வைரஸ் கிருமியானது சில காட்டுமிருகங்களின் உமிழ்நீரிலோ அல்லது வீட்டு மிருகங்களின் உமிழ்நீரிலோ காணப்படலாம். இவை கடிக்கும் போது அல்லது பாதுகாப்பற்ற தோலில் நக்கும் போது மனிதரை வந்தடைகின்றன.

### இம்மிருகங்கள் கடித்தபின் இந்நோய் வராமலிருக்க என்னசெய்யவேண்டும்?

- கடித்த காயத்திற்கு சரியான முதலுதவி அளிக்க வேண்டும்.
- **ARS** வழங்கவேண்டும்.
- **ARV** வழங்கவேண்டும்.
- கடித்தவிலங்கை 10 நாட்களுக்கு அவதானிக்க வேண்டும். பத்து நாட்களுக்குள் அது இறக்குமாயின் இவ் வைரஸ் தொற்றுக்கான வாய்ப்புக்கள் அதிகம்.

### ARS என்பது என்ன?

இது Anti Rabies Serum ஆகும். இந்தவைரஸ் கிருமிக்கு எதிரான மருந்தாகும். இது மிருகத்தால் கடிபட்ட காயத்திலும் மிகுதி தொடையிலும் இடப்படும்.

### ARV என்பது என்ன?

இது Anti Rabies Venum ஆகும். அதாவது இம் மருந்தில் வைரஸ் கிருமியின் ஒருபாகமோ அல்லது செயலிழக்கப்பட்ட வைரஸ் கிருமியோ காணப்படலாம். இது எமது உடலில் இவ்வைரஸ் கிருமிக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இது OPD (வெளி நோயாளர் பிரிவில்) இல் வழங்கப்படும்.

### நான் எவ்வாறு காயத்திற்கு முதலுதவி அளிக்க வேண்டும்?

இவ் வைரஸ் கிருமியானது கடித்த காயத்ினூடாகவே உடலுக்குள் நுழைவதால் காயத்தை சுத்தப்படுத்துவது மிகமுக்கியமாகும்.

- ஓடும் தண்ணீரில் 10 நிமிடங்களுக்கு காயத்தை பிடித்தல்.
- சவர்க்காரநீரினால் கழுவுதல்.
- மேற்படி கழுவிய பின் தொற்றுநீக்கியால் துடைத்தல்.

### நான் காயத்திற்கு முதலுதவி அளிக்கும் போது செய்யக் கூடாதவை என்ன?

- கழுவும் போது வெறும் கையால் புண்ணைத் தொடலாகாது.
- எண்ணெய், மண், வெற்றிலைபோன்றவற்றை போடுவதை தவிர்க்கவேண்டும்.
- ஒருபோதும் தையல் போடக்கூடாது.

### யார்யாருக்கு மேற்படி மருந்துகள் ஏற்றவேண்டி வரும்?

மிருக கடியானது மூன்று வகையாக பிரிக்கப்படும்.

**வகை 1**

மிருகங்களைத் தொடல், காயங்கள் அற்ற தோலில் மிருகம் நக்குதல்.
இதற்கு எந்தவித சிகிச்சையும் தேவையில்லை.

**வகை 2**

இரத்த பெருக்கற்ற சிறு விறாண்டல்
இதற்கு ARS தேவையில்லை, ARV போட வேண்டும்.

**வகை 3**

ஆழமான விறாண்டல்கள்,இரத்தப் பெருக்குடனான விறாண்டல்கள் காயமற்ற தோலில் அல்லது மென் சவ்வுகளில் உமிழ்நீர்படுதல்.

இதற்கு **ARS** உம் , ARV யும் போடவேண்டும்.

### ARS எப்படி போடப்படும்?

குதிரையிலிருந்து பெறப்பட்ட மருந்தாயின் சோதனை ஊசிபோடவேண்டும்.

- 0.1ml மருந்து எடுக்கப்பட்டு அது பத்தின் ஒரு பங்காக ஜதாக்கப்படும். 3-4 mm அகலமான வளையமாக உருவாகுமாறு தோலின் கீழ் ஏற்படும்.
- மறுகையில் இதேபோன்று சேலைன் ஏற்றப்படும். இரண்டு கைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படும்.
- 15 நிமிடங்களின் பின் இது மீண்டும் சோதிக்கப்படும்.வளையம் 10mm இலும் பெரிதாகின் உங்களுக்கு மருந்து ஏற்றப்படமாட்டாது.
- உங்கள் நிறைக்கு ஏற்றவாறுமருந்தின் அளவு எடுக்கப்பட்டு மருந்தின் ஒரு பகுதி காயத்தினுள்ளும் மிகுதி தொடையிலும் ஏற்றப்படும்.
- இம் மருந்து ஏற்றியபின் சிலருக்கு அழற்சி ஏற்படலாம். அதாவதுமேல் கடித்தல், தலைசுற்றுதல், மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்படல் போன்றனவாகும். இதை அவதானிப்பதற்காக உங்களை இரண்டு மணித்தியாலங்களுக்கு வைத்தியர் வைத்தியசாலையில் நிற்குமாறு அறிவுறுத்துவார்.
- சோதனை ஊசியில் பிரச்சினை இருப்பின் மனிதரிலிருந்து பெறப்பட்ட மருந்து ஏற்றப்படும். இது பெறுமதி கூடியதாகையால் எல்லோருக்கும் ஏற்றப்படுவதில்லை.

### ARV எப்படி போடப்படும்?

- இது வெளிநோயாளர் பிரிவில் போடப்படும்.
- 0, 3, 7, 14, 28 நாட்களில் இடப்படும்.

Dr.க.சிவசுகந்தன்
யாழ்.போதனா வைத்தியசாலை

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.